# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஏப்ரல் 16 - 22, 2014 பக்கம் - 24 30/-




# புலி வேட்டையா வெடிப்புகளா ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபோகுமா இடதுகை?



நீச்சல் அரங்கில் அசைக்க முடியாத வீரராகத் திகழ்ந்த இயன் தோர்ப்பின் நிலைமை இப்போது பரிதாபமாக உள்ளது. கிருமித் தொற்றுக் காரணமாக இவரது இடது கை அகற்றப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர் 'நீச்சல் மன்னன்' இயன் தோர்ப் (வயது-31) ஒலிம்பிக்கில் 5 தங்கப்பதக்கங்கள் வென்ற பெருமைமிக்க இவர், 2006இல் ஓய்வு பெற்றார். பின் மீண்டும் 2011இல் நீச்சலுக்கு திரும்பிய இவர், லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு(2012) தகுதி பெறத் தவறினார்.

இதற்கு பின் மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்ட தோர்ப், ஊக்கமருந்து எடுத்துக் கொண்டதாக சர்ச்சை எழுந்தது. இதிலிருந்து மீண்ட இவருக்கு தோள்பட்டைக் காயம் வினையாக அமைந்தது. இதற்காக சுவிட்சர்லாந்தில் உள்ள மருத்துவமனையில் சத்திரசிகிச்சை செய்த போது, தோர்ப்புக்கு கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளது.தற்போது சிட்னியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் தீவிர சிகிச்சை பிரிவில் தோர்ப் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு நோயெதிர்ப்பு மருந்துகள் அதிகம் கொடுக்கப்படுகின்றன. இதில், தீர்வு கிடைக்காத பட்சத்தில், இவரது இடது கை அகற்றப்படும் அபாயம் ஏற்படலாம்.

இது குறித்து தோர்ப்பின் முகாமையாளரான ஜேம்ஸ் எர்ஸ்கின் கூறுகையில்,"கடந்த இரு மாதங்களில் மூன்று முறை தோள்பட்டை பகுதியில் தோர்ப்புக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதனாலேயே அவருக்குக் கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளது. உயிருக்கு ஆபத்து இல்லை என்றாலும் இது பாரதூரமான பிரச்சினை தான். ஆயினும் இடது கையை அகற்றப்பட வேண்டிய நிலை எல்லாம் ஏற்படாது. வருங்காலத்தில் அவர் போட்டிகளில் பங்கேற்க முடியாது. அவ்வளவு தான்."என்றார்.





# தேவதைக்கு கல்யாணம்

காதலர்களாக இருக்கும் பிரபல ரென்னிஸ் வீராங்கனை வோஸ்னியாக்கியும் கோல்ப் வீரர் மெக்கில்ராயும் இந்தவருட இறுதியில் திருமணம் செய்துகொள்ளவுள்ளனர்.

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த ரென்னிஸ் நட்சத்திரமான கரோலின் வோஸ்னியாக்கி (வயது-23) உலகின் முன்னாள் 'நம்பர்-1' வீராங்கனை. கிராண்ட்ஸ்லாம் பட்டம் எதுவும் வெல்லாத இவருக்கும், அயர்லாந்து நாட்டை சேர்ந்த கோல்ப் வீரர் ரோரி மெக்கில்ராய்க்கும் (வயது-24) இடையே, கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் காதல் மலர்ந்தது.

இருவரும் மோதிரம் மாற்றி நிச்சயம் செய்து கொண்ட போதும், அவ்வப்போது இவர்களின் பிரிவு குறித்தும் செய்திகள் வந்து கொண்டே இருக்கும்.

வடக்கு அயர்லாந்தை சேர்ந்த மெக்கில்ராய், அமெரிக்காவின் புளோரிடாவில் வசித்து வருகிறார். சமீபத்தில் டென்மார்க் சென்ற இவர், வோஸ்னியாக்கிடம் திருமணம் செய்து கொள்வது குறித்து பேசியுள்ளார்.

இதை அவர் ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. இதையடுத்து, இந்த வருடம் நவம்பர் மாதம், நியூயோர்க்கில் திருமணம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதாவது பெடரேஷன் கிண்ண ரென்னிஸ் போட்டிகள் முடிந்தவுடன், இந்த ஜோடி வாழ்க்கையில் இணைவது உறுதி என, இவர்களுக்கு நெருக்கமானவர்கள் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

ரென்னிஸ் உலகின் அழகு தேவதைக்கு திருமணம் என்ற செய்தி பல ரசிகர்களுக்கு பொறாமைத்தீயை உண்டு பண்ணும் என்பது மட்டும் நிச்சயம்.

# நெருப்பில்லாமல் புகையுமா?

அரசியலில் மட்டுமல்ல விளையாட்டிலும் கூட பாகிஸ்தானும் இந்தியாவும் எப்போதுமே கீரியும் பாம்பும் தான். இப்படி இரண்டு முரண்பட்ட தேசங்களையும் சேர்ந்த முக்கியமான விளையாட்டு நட்சத்திரங்களான இந்தியாவின் சானியா மிர்சாவும் பாகிஸ்தானின் சொய்ப் மலிக்கும் திருமணம் செய்த போது பெரும் ஆச்சரிய அலை எழுந்தது. இரு நாடுகளுக்குமிடையிலான புதிய உறவுப்பாலமாக இவர்களின் திருமணம் கொண்டாடப்பட்டது. இப்போது யார் கண் பட்டதோ தெரியவில்லை. சானியாவுக்கும் சொய்ப் மலிக்குக்கும் இடையே விரிசல் எழுந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் இதை சானியா மறுத்துள்ளார்.



" நாங்கள் இருவருமே விளையாட்டு வீரர்கள் என்பதால் அடிக்கடி ஒன்றாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. அதை வைத்துக் கொண்டு தங்கள் இஷ்டப்படி ஒவ்வொருவரும் எங்களுக்குள் விரிசல் என்று கதை கட்டுகிறார்கள். நாங்கள் இருவரும் தான் உலகிலேயே அதிக புரிந்துணர்வு கொண்ட தம்பதிகள் என்று நம்புகிறேன். இன்னும் சில வருடங்கள் நான் ரென்னிஸ் விளையாடுவேன்.

அதன் பின்னர் எங்கள் இருவருக்குமான குழந்தைச் செல்வம் பற்றி யோசிப்போம்" என்றுள்ளார். என்னதான் சானியா சப்பைக் கட்டு கட்டினாலும் நெருப்பில்லாமல் ஏன் புகையப்போகிறது என்கிறார்கள் ரசிகர்கள்.



# மறக்கப்பட்ட தலைவர்

இலங்கை அணி உலகக்கிண்ணத்தை வென்ற மகிழ்ச்சியில் இருந்தபோது, அந்த அணியின் உண்மையான தலைவரான சந்திமாலை எவருமே கண்டுகொள்ளவில்லை என்று சர்ச்சை எழுந்துள்ளது. உலகக்கிண்ண 20/20 கிரிக்கெட் தொடருக்கு தினேஷ் சந்திமால் தலைமையிலேயே இலங்கை அணி பங்களாதேசுக்கு புறப்பட்டுச் சென்றது. அங்கு முதலிரண்டு போட்டிகளையும் வென்ற இலங்கை அணி, இங்கிலாந்துடனான மூன்றாவது போட்டியில் 190 ஓட்டங்களை எடுத்திருந்தும் தோல்வியடைந்தது.இதற்கு அணித்தலைவரின் சரியான களத்தடுப்பு வியூகமின்மையே காரணம் என்று சொல்லப்பட்டது.

இந்த நிலையில் அந்தப்போட்டியில் இலங்கை அணி பந்துவீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதால் அடுத்த போட்டியில் அணித்தலைவரான சந்திமால் விளையாடத் தடை விதித்தது ஐ.சி.சி. ஆனால் அதற்கடுத்த போட்டியில் மலிங்க தலைமையில் இலங்கை வாகை சூட, சந்திமால் மறக்கப்பட்டு இறுதிப்போட்டி வரை மலிங்கவே தலைமைப் பொறுப்பை ஏற்றார். இதனால் வெற்றிக்கிண்ணத்தையும் அவரே பெற்றுக் கொண்டார். ஒரு அணியின் தலைவராக இருந்த சந்திமால் அந்த அணியின் விளையாடும் பதினொருவரில் ஒருவராகக் கூட இல்லாமல் இறுதிப்போட்டியில் சங்ககாரவுக்கு தலைக்கவசத்தை மட்டுமே எடுத்துவர பயன்பட்டார். ஆனாலும் கௌரவம் பார்க்காமல் அணிக்காக அதையும் செய்தார் சந்திமால் எனவே உலகக்கிண்ணத்தை வென்றவுடன் மலிங்க சந்திமாலுடன் இணைந்து கிண்ணத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்று ஒரு கருத்து எழுந்துள்ளது. ஏனெனில் முதலிரண்டு போட்டிகளையும் தன் தலைமையில் வென்று கொடுத்தவர் சந்திமால் தானே?



நாடாளுமன்றில் உலகச் சம்பியன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிக்கிலி போகுமா?

இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஜெனிவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் அந்த விசாரணை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று யாருக்கும் தெரியாது.

போர் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் நிறைவடைவதற்கு இன்னும் ஒரு மாதமே இருக்கின்றது. ஆயினும் போரிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் உரிய வாழ்வாதார உதவிகள் கூட கிட்டவில்லை. தங்களுடைய சொந்த நிலங்களில் கூட இதுவரை குடியேற்றப்படாத நிலையிலே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தநிலையில் ஜெனிவா பிரேரணை தமிழ் மக்களுக்கு லேசான மன நிம்மதியினை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் மறு புறம் உண்மையிலேயே சர்வதேசவிசாரணை நடைபெறுமா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

இந்த பிரேரணை அரசியல் உள்நோக்கத்துடனேயே சர்வதேச நாடுகளால் கொண்டுவரப்பட்டதாகவும் எனவே இதனை ஒருபோதும் தாம் தாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும் இலங்கை அரசு பகிரங்கமாக அறிவித்துள்ளது.

ஜெனிவாவில் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்ட குடு ஆறுவதற்கிடையில் இறுதிப்போரின் போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணைக்குழு ஒன்று இலங்கைக்குள் நுழைய அனுமதிக்கவே மாட்டோம் என்றும் அரசு கர்ச்சித்துள்ளது.

போர்க் குற்ற விசாரணைக்கு இலங்கை அரசு அனுமதிக்கவில்லை என்றால் விசாரணைகளை மேற்கொள்வதற்காக மாற்று வழி என்ன என்பது எவருக்குமே தெரியவில்லை. ஏனெனில் இலங்கையின் அனுமதி இல்லாமல் குறித்த விசாரணைகளை மேற்கொள்ள ஒரு துரும்பு கூட உள்நுழைய முடியாது. அதேவேளை இலங்கைக்குள் வராமலும் விசாரணைகளை மேற்கொள்ள முடியாது. எனவே எப்படி சர்வதேச விசாரணைக்குழு இலங்கைக்குள் வரப்போகின்றது என்பது தான் விடை தெரியாக் கேள்வி.

**போர் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் நிறைவடைவதற்கு இன்னும் ஒரு மாதமே இருக்கின்றது. ஆயினும் போரிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் உரிய வாழ்வாதார உதவிகள் கூட கிட்டவில்லை. தங்களுடைய சொந்த நிலங்களில் கூட இதுவரை குடியேற்றப்படாத நிலையிலே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.**

ஜெனிவாவில் இலங்கை மீது சர்வதேசச் சமர் தொடங்கிய போது பிள்ளையார் சுழி போடப்பட்ட "பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் கைது" என்னும் நாடகம் 65 பேருக்கும் அதிகமானோரை சிறைக்குள் தள்ளி வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இவர்கள் புலிகளுக்கு உயிர் கொடுக்க முனைந்த மந்திரவாதிகள் என்ற கதையையும் அரசு தன்னை நியாயப்படுத்துவதற்காக உலவவிட்டுள்ளது.

வடக்கில் இடம்பெற்ற இந்தக் கைதுகளும், தேடுதல்களும் சர்வதேச சமூகத்துக்கு தெளிவான ஒரு செய்தியினை எடுத்துக் கூறியுள்ளது.

"இலங்கை ஒரு சர்வாதிகார நாடு. சர்வதேசம் என்னதான் பிரேரணைகளை நிறைவேற்றினாலும் நாங்கள் எதையும் கணக்கில் எடுக்கவே மாட்டோம். நாம் என்ன நினைக்கிறோமோ அதைத்தான் செய்வோம். எவனும் எதையும் இங்கே புடுங்க முடியாது" இதுவே இலங்கை சர்வதேசத்துக்கு சொல்லி நிற்கும் செய்தி.



உண்மையில் புலிகளின் மீளுயிர்ப்பு தமிழர் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை . எனினும் புலிக்காய்ச்சலோடு அரச படைகள் நாளுக்கு நாள் தேடுதல்களிலும் விசாரணைகளிலும் இறங்கியுள்ளன. புலி களின் புதிய தலைவர் என்று அரச தரப்பால் சொல்லப்பட்ட கோபி மற்றும் தேவியன் ஆகியோர் நெடுங்கேணியில் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டனர். இதையும் அரசே அறிவித்துள்ளது. ஆயினும் அதன் பின்னராவது அரச அடக்குமுறை அடங்கிவிடுமா என்பது கேள்விக்குறியே.

ஏனெனில் அரசுக்கு எதிராக ஒரு துரும்பு அசைந்தால் கூட அதை மோப்பம் பிடித்து முளையிலேயே கிள்ளிவிடுவோம் என்ற எச்சரிக்கையையே கோபியைக் கொன்றதன் மூலம் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு சொல்லியுள்ளனர். இனிமேல் மூச்சு விடுவதென்றால் கூட அரச அனுமதியுடனேயே விட வேண்டிய நிலையும் வரலாம். அந்தளவுக்கு ஜனநாயகத்தின் குரல் வளையை நசுக்கிக் கொண்டே போகின்றது அதிகாரம்.



## ஊருக்கெல்லாம் கொடுக்கணும்

பொருளாதாரப் பின்னடைவு ,வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு ஆகிய காரணங்களால் பசுமையான காய்கறிகளும், பழங்களும் மத்திய வர்க்க மக்களே நினைத்தும் பார்க்க முடியாத நிலை தோன்றிவிட்டது. அப்படிக்கிடைத்தாலும் கூட அவை செயற்கை உரங்கள் பயன்படுத்தப்பட்டு விளைவிக்கப்பட்டவை என்பதால் பக்கவிளைவுகளை உண்டாக்குகின்றன. இத்தகைய சூழலில் இந்தியாவின் அஹமதாபாத்தைச் சேர்ந்த 54 வயதான மோஹித் ஷா என்பவரும் அவரது குடும்பத்தினரும் தினந்தோறும் ஊட்டச்சத்து நிறைந்த பச்சை காய்கறிகளையும், பழ வகைகளையும் ஏழை எளியோருக்கு இலவசமாக விநியோகம் செய்கின்றார்கள். கடந்த ஆறு வருட காலமாக மோஹித் ஷா வும் அவரது மனைவியும் இந்த நற்செயலில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் தங்கள் வீட்டுத்தோட்டத்தில் விளையும் இயற்கையான காய்கறி வகைகளை தங்கள் குடும்பத்தேவைக்கு எடுத்துவிட்டு எஞ்சிய எல்லாவற்றையும் வாகனங்களில் கொண்டு சென்று ஏழைகளுக்கு இலவசமாகவே கொடுக்கிறார்கள். இப்படி கொடைவள்ளல் குணம் நம்மில் எத்தனை பேருக்கு வரும்?



noolaham.org | aavanaham.org

பெண்களைப் பற்றித் தமிழ் சினிமா என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறது? ஒரு பக்கம் பெண்களை வெறும் உடலாகப் பாவித்து முடிந்தவரையில் அவர்களைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுவது. இன்னொரு புறம் தாய்ப் பாசம், தங்கைப் பாசம் என்று பாச அபிஷேகம் செய்து ஆராதிப்பது. இவற்றுக்கு இடையே அடக்கம், பண்பு, நாகரிகம் ஆகிய வற்றைப் பற்றிப் பாடம் எடுப்பது. இப்படியாகப் பெண்களைப் பன்முகம் கொண்ட கோணங் களில் அணுகும் தமிழ் சினிமா இவற்றுக் கிடையில் இருக்கும் உள் முரண்களைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை.

இவை ஒரு புறம் இருக்க, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் பெண்களைக் இருக்கும் உணர்வுகள் என்ன? இந்த அளவுக்கா தமிழ் சினிமாவும் சினிமா ரசனையும் சொரணை கெட்டுப் போகும்?

"கல்யாணத்துக்குப் பிறகு நிம்மதியே போச்சு", "சுதந்திரமே போச்சு" என்று ஆண்கள் புலம்புவதும் திரை நகைச்சுவையின் தவிர்க்க முடியாத அம்சங்களாக இன்று ஏற்றுக்கொள்கிறது?

இவற்றை ஒப்புக்கொண்டு நடிக்கும் நாயக நடிகர்களும் நகைச்சுவை நடிகர்களும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இதற்கு ஒத்துழைக்க மாட்டோம் என்று பெண்கள் தைரிய மாகக் கூற வேண்டும். புதிதாக நடிக்க வருபவர்களால் அல்லது தனக்கென்று ஒரு

**இந்தன்**

அறிவுக்குப் புரியாதா?

இதே முருகதாஸ் தான் இயக்கிய துப்பாக்கி படத்தில், நாயகன் உயர் அதிகாரியை மிரட்டும் இடத்தில் இப்படி வசனம் எழுதியிருப்பார்: "நான் உன்னை சுட்டா உன் பிள்ளைங்க சிக்னல்ல நின்னு பிச்சை எடுப்பாங்க, உன் மனைவி தெருவோரம் நின்னு கையைக் காட்டிக் கூப்பிடுவா" என்பார். அதாவது கணவனை இழந்த பெண்ணுக்குப் பாலியல் தொழிலே கதியாம். கஜினி வில்லனைவிடவும் மோசமான விதத்தில் பெண்களுக்கு எதிராக ஏவப்படும் வன்முறை அல்லவா இது? அவன்

**பெண்களை எப்படி வேண்டுமானாலும் கேவலப்படுத்தும் உரிமையை சினிமாக்காரர்களுக்கு யார் கொடுத்தது? பண்பாட்டைக் காப்பதற்காகச் செயல்படுவதாகக் கூறிக்கொள்ளும் தணிக்கைத் துறை இவற்றை எப்படி அனுமதிக்கிறது?**

# பெண்களை வன்புணர்வு செய்யும் தமிழ் சினிமா

கேவலப்படுத்துவதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் பல திரைப்பட இயக்குநர்களும் வசனகர்த்தாக்களும். அண்மையில் வெளியான மான் கராத்தே படத்தில் ஒரு காட்சி. நாயகனை ஒரு போட்டியில் இடம்பெற வைப்பதன் மூலம் பணம் சம்பாதிக்க நினைக்கும் ஒரு குழுவினர் அவனுக்குப் பணம் தருவது டன் பல வசதிகளையும் செய்து தருகிறார்கள். இதுதான் சாக்கு என்று அவன் மேலும் பல வசதிகளைக் கோருகிறான். அப்போது அந்தக் குழுவில் இருக்கும் ஒருவன் தன் அருகே இருக்கும் பெண்ணைக் காட்டி இப்படிச் சொல்கிறான்:

"விட்டா இவளையும் கேட்பாய் போலருக்கே?"

அந்தக் குழுவினர் தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலை செய்யும் இளைஞர்கள். தங்களைப் போலவே படித்த, தங்கள் குழுவில் ஒரு அங்கமாக உள்ள சக மனிதப் பிறவியைச் சட்டென்று ஒரு பண்டத்துக்கு நிகராகப் பேச அவனால் முடிகிறது. அதைக் கேட்டுக்கொண்டு அந்தப் பெண் சும்மாதான் இருக்கிறாள். அதற்கு நாயகன் சொல்லும் பதில் என்ன தெரியுமா? "நல்லா இருந்தா கேட்டிருப்போம்ல?"

ஒருவன் தன்னுடைய சக ஊழியரும் தோழியுமான ஒரு பெண்ணைப் பண்டமாக்கு கிறான். இவனோ அந்தப் பண்டம் நன்றாக இல்லை என்கிறான். அவளோ இதையெல் லாம் கேட்டுக்கொண்டு அசட்டுத்தனமாக நிற்கிறாள். பார்வையாளர்கள் கைதட்டிச் சிரிக்கிறார்கள்.

அதே படத்தில் இன்னொரு காட்சி. ஒரு பெண் தன் கணவனுடன் தொலைபேசியில் பேசுகிறாள். குளிக்கும்போது யாரோ தன்னை எட்டிப் பார்ப்பதாகப் புகார் செய்கிறாள். "விடுடி, அவன் ரசனை கெட்டவன்" என்கிறான் அந்தக் கணவன். இதற்கும் திரையரங்கில் வெடிச் சிரிப்பு.

என்ன எழுத்து இது? இதை எழுதுவது, நடிப்பது, ரசிப்பது ஆகியவற்றுக்குப் பின்னால்

ஆகியிருக்கின்றன. கல்யாணத்துக்குப் பிறகு பெண்களின் நிம்மதி பற்றியோ சுதந்திரம் பற்றியோ ஒருவர்கூடப் பேசுவதில்லை. தமிழ் சினிமா என்பது திமிர் பிடித்த ஆண்களால் அப்படிப்பட்ட ஆண்களுக்காகவே எடுக்கப்படும் சமாச்சாரம் என்றுதான் தோன்றுகிறது.



ஆனால் அதில் வசீகரம் கூட்டவும் கேவலப்பட்டு நிற்கவும் மட்டும் பெண்கள் இவர்களுக்கு வேண்டியிருக்கிறது.

பெண்களை எப்படி வேண்டுமானாலும் கேவலப்படுத்தும் உரிமையை சினிமாக்காரர்களுக்கு யார் கொடுத்தது? பண்பாட்டைக் காப்பதற்காகச் செயற்படுவதாகக் கூறிக்கொள்ளும் தணிக்கைத் துறை இவற்றை எப்படி அனுமதிக்கிறது? பெண்களை இழிவுபடுத்திப் பேசுபவர்கள் யதார்த்தத்தில் இருக் கிறார்கள் என்பதை வைத்து இதை நியாயப்படுத்த முடியாது. ஜாதி, மதம், மொழி, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் யாரையாவது இழிவுபடுத்திப் பேசுபவர்களும் யதார்த்தத்தில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இழிவுகளைப் பரிகாசம் என்ற பெயரிலோ யதார்த்தம் என்ற பெயரிலோ தணிக்கைத் துறை அனுமதிக்குமா? பெண்களை இழிவுபடுத்துவதை மட்டும் எப்படி

இடத்தைப் பெறப் போராடிக்கொண்டிருப் பவர்களால் எதிர்த்துக் குரல் எழுப்ப முடியாமல் இருக்கலாம். ஆனால் முன்னணி நாயகிகளாவது இவற்றை எதிர்த்துக் குரல் எழுப்ப வேண்டும். இப்படிப்பட்ட வசனங்களைப் பேச மாட்டேன் என்று முன்னணி நாயகர்கள் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நிஜமான நாயகர்கள் இங்கே யாராவது இருக்கிறார்களா?

"பெண்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத்தான் வெளியில் வரு கிறார்கள். அவர்களிடம் மிருகத்தனமாக நடந்துகொள்வதன் மூலம் ஏன் அவர்களை மீண்டும் வீட்டுக்குள் தள்ளுகிறீர்கள்?" என்ற பொருள்படும் வசனம் ஒன்று கஜினி திரைப்படத்தில் வரும். அந்த வசனத்தை எழுதியவர் அந்தப்படத்தின் இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ். அவரது தயாரிப்பில் வந்திருக்கும் படம்தான் மான் கராத்தே. அதன் கதையை எழுதியவரும் அவரே. பெண்களைப் பண்டங்களாகவும் அழகாக இருந்தால்தான் அந்தப் பண்டங்களுக்கு மதிப்பு என்றும் ஒரு பெண்ணைக் குளிக்கும்போது எட்டிப் பார்ப்பது வெறும் ரசனை சம்பந்தப்பட்ட விஷயம் என்றும் எழுதப்படும் வசனங்களும் பெண்கள் மீதான வன்முறைதான் என்பது முருகதாஸின் ஏழாம்

வெறுமனே மண்டையில்தான் அடித்தான். நீங்கள் அவள் சுயமரியாதையை, ஆளுமையை, நேர்மையை, கௌரவத்தை அல்லவா அடித்து நொருக்குகிறீர்கள்?

அசிங்கம் என்று அப்பட்டமாகச் சொல்லி ஒரு பெண்ணையோ ஒரு ஆணையோ திரையில் இழிவுபடுத்தி அதை வைத்துப் பலரைச் சிரிக்கவைக்க முயல்வதும் அருவருப்பான ரசனை என்பது ஒரு புறம் இருக்க, இதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. மேற்படிக் காட்சிகளில் இழிவுக்கு ஆளாகும் நடிக, நடிகைகளின் உளவியலில் இது ஏற்படுத்த ஆழமான தாக்கத்தைப் பற்றி யாரும் யோசிப்பதாகத் தெரியவில்லை. கறுப்புத் தோல், எடுப்பான பற்கள், குண்டான உடல், மாறுகண், குள்ளமான உருவம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டவர்களைக் காட்டிக் கதாநாயகனையோ கதாநாயகியையோ உயர்த்தி வைக்கும் காட்சிகளில் மேற்படி இழிவுக்கு உள்ளாகுபவர்களின் மன வேதனையை யாராவது நினைத்துப் பார்க்கிறார்களா? ஒரு சில சித்தரிப்புகள் வாழ்நாள் முழுவதும் போக்க முடியாத கறையாக ஒருவரது ஆளுமையின் மீது படிந்துவிடு வதற்கும் வாய்ப்பு உள்ளது. சினிமாவில் வாய்ப்பு வேண்டுமே என்பதற்காகச் சிலர் இத்தகைய இழிவுகளைப் பொறுத்துக் கொள்ளலாம். அது அனுதாபம் கொள்ள வேண்டிய சமரசம். ஆனால் இப்படி இழிவு படுத்துவது மன்னிக்க முடியாத அத்துமீறல்.

பெண்களுக்கும் கறுப்புத் தோல் கொண்டவர்களுக்கும் உடல் குறைபாடு உள்ளவர் களுக்கும் எதிராகத் தமிழ் சினிமா பிரயோகித்துவரும் வன்கொடுமைக்குச் சினிமாக்காரர்களே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கான நாகரிகமும் தீர்க்கமான சிந்தனையும் தைரியமும் கொண்ட நபர்கள் அங்கே இருக்கிறார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவிப்பிள்ளையின் நாயும் இலங்கையின் அமைச்சரும்

அக்கினிகுமரன்

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள் ளையை மட்டுமல்ல அவரது நாயைக் கூடஇலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனிதஉரிமைகள் தொடர்பாக விசாரணை நடத்த இலங்கைக்கு வர அனுமதிக்கப் போவதில்லை"

இது அண்மையில் இடம் பெற்ற வைபவமொன்றில் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா விடுத்த சவால்.

**ஐக்கிய நாடுகள் சபையின் தீர் மானத்தை நிராகரிக்கும் ஜனாதிபதி தமிழ் மக்கள் இலங்கை அரசியல மைப்பை நிராகரித்து தனிநாடு கோரு வதை ஏற்றுக் கொள்வாரா?**

மேற்படி விசாரணைகளை நடத்த ஆணையாளரின் நாய்க்குஅதிகாரம் அளிக்கப்பட்டதாக இதுவரை எந்தவித தகவலும் வெளிவரவில்லை. எனினும் அமைச்சர் நாயையும் இந்த விசாரணை தொடர்பாக இலங்கைக்குள் வர அனுமதிக்க மாட்டாராம்.

ஆனால் அமைச்சர் வெகு விரைவில் ஜனாதிபதியால் அழைக்கப்பட்டு கண்டிக் கப்படலாம். அது நவநீதம்பிள்ளை தொடர்பாக வெளியிட்ட சவாலுக்கல்ல; நாயை அவமதித்தமைக்காக.

"இலங்கையில் நாய்களுக்குத் தனி யான கௌரவம் வழங்கப்பட வேண்டும்" என்ற ஜனாதிபதியின் உத்தரவை அவர் அலட்சியம் செய்து விட்டார்.

முன்பெல்லாம் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காக உள்ளூராட்சி சபை ஊழியர்கள் அவற்றை விரட்டிப்பிடித்து அழித்து விடுவதுண்டு. ஆனால் ஜீவகாருண்யம் உள்ள ஜனாதிபதி நாய்களைக் கொல்லக் கூடாதென உத்தரவு போட்டுவிட்டார். இப்போது நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை மட்டும் மேற்கொள்ளப்படுகிறது. எனினும் கட்டாக்காலி நாய்களின் ஆதிக்கம் விரிவடைந்தே வருகின்றது.

இந்த நிலையில் அமைச்சரவையைச் சேர்ந்த நிமால், நாயை அவமதித்ததை ஜனாதிபதியால் எப்படிப் பொறுக்க முடியும்? அது ஜனாதிபதியின் நாய்கள் மேலான ஜீவகாருண்யத்துக்கும் அமைச்சரின் மனிதப் படுகொலைகளை விசாரிக்கப்படக் கூடாது என்ற அசுங்காரத்துக்குமிடையேயுள்ள பிரச்சினை. அதைஅவர்களே தீர்த்துக் கொள்ளட்டும். ஆனால் நவநீதம்பிள்ளை தொடர்பான அமைச்சரின் எதிர்ப்பு சில கேள்விகளை எழுப்பத்தான் செய்கிறது.

மனிதஉரிமைகள் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக ஒரு சர்வதேச, சுயாதீன விசாரணையை நடத்த ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை உட்பட சில நாடுகள் இதை எதிர்த்த போதிலும் 23 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையும் ஒரு அங்கத்துவ நாடு. அந்த வகையில் அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை விரும்பினாலென்ன , விரும்பாவிட்டாலென்ன அதை ஏற்றுக் கொள்வதுதான் ஜனநாயக வழிமுறை.

அந்த ஜனநாயக மரபை இலங்கை மறுத்துவிட்டது. அந்தத் தீர்மானத்தை நிராகரிப்பதாக ஜனாதிபதி பகிரங்கமாகவே தெரிவித்து விட்டார். அமைச்சர் சிறிபால டி சில்வாவும் தன் பங்குக்கு நவநீதம்பிள்ளையை இலங்கைகுள் அனுமதிக்கப் போவதில்லையெனச் சூளுரைத்து விட்டார். இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தையோ அதன் அடிப்படையில் இயற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தையோ தமிழ் மக்களோ தமிழ்மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களோ என்றுமே ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் 1977ஆம் ஆண்டிலும் 2005 ஆம் ஆண்டிலும்இடம் பெற்ற தேர்தல்களில் தமிழ் மக்கள் தனித்தமிழ் ஈழத்துக்கே ஆணை வழங்கியுள்ளனர்.

பெரும்பான்மைவாக்குகளால் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் இலங்கை ஒரே நாடு என்பதை உறுதிசெய்கிறது . ஆனால் வடக்கு கிழக்கு வாழ் தமிழ்மக்கள் இலங்கையின் அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அது இலங்கை நாடாளுமன்றத்தால் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதால், தமிழ் மக்களின் அபிலாஷைகள் கவனத்தில் கொள்ளப்படாமல் பேரினத்தின் நலனே முதன்மைப்படுத்தப்பட்ட நிலையே இலங்கையில் காரியங்கள் நடைபெறுகின்றன.

அதுபோன்றே இலங்கை அரசின் எதிர்ப்பின் மத்தியில் பெரும்பான்மை வாக்குகளால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நிராகரிக்கிறது. அப்படியானால் தங்களின் எதிர்ப்பின் மத்தியில் நிறைவேற்றப்பட்டஅரசியல் அமைப்புச் சட்டத்தையும் அதன் அடிப்படையிலான ஒரே நாடு என்ற கொள்கையையும் நிராகரிக்க ஈழத்தமிழர்களுக்கும் உரிமை உண்டல்லவா?

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை நிராகரிக்கும் ஜனாதிபதி தமிழ் மக்கள் இலங்கை அரசியலமைப்பை நிராகரித்து தனிநாடு கோருவதை ஏற்றுக் கொள்வாரா?

நாய்கள் கொல்லப்படுவதைத் தடை செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மனிதர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணைகளைக் கூட ஏற்க மறுக்கின்றார் .இதன் மூலம் ஜனாதிபதியின் ஜீவகாருண்யம், மனிதாபிமானம் என்பன எவ்வளவுதூரம் போலியானவை என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.


முதுகில் புண் இருந்தால் வழியில் பயம் இருக்கும் என்பார்கள்.எனவே இவர்கள் நவநீதம்பிள்ளைக்கு மட்டுமல்ல அவரின் நாய்க்கும் கூடப் பயப்படுவதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்?



**நாய்கள் கொல்லப்படுவதைத் தடை செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மனிதர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணைகளைக் கூட ஏற்க மறுக்கின்றார்.**

## தண்ணீர்ப் பரிகாரம்

காந்தி திருமுருகன்



வெயில் காலங்களில் வீட்டு ஜன்னலோரம் காக்கா, குருவி(அது எங்கே நகரத்தில் இப்போது இருக்கப் போகின்றது) அணில், ஓணான் போன்றவை குடிப்பதற்காக தண்ணீர் வைப்பார் என் அப்பா.

இப்பொழுதெல்லாம் அப்படி வைக்கும் ஒரு கோப்பைத் தண்ணீர் முழுதும் தீர்ந்து விடுகிறது. அதிகரிக்கும் வெயிலையும், தாகம் நிறைந்த உயிரிகளையும் அறிந்து கொள்ளச் செய்கிறது இது.

தண்ணீர் தீர்ந்து போனால் ஜன்னல் கதவில் நின்று உள்ளே எட்டிப்பார்க்கிறது காக்கை.

அமெரிக்கன் போத்தல் குடிநீர் வாங்கவோ, குழாய்க்கிணறுகள் வெட்டவோ காக்கைகளும் குருவிகளும் கற்றுக்கொள்ளவில்லை. வாசல் தோறும் தண்ணீர் கோப்பைகள் நிறைந்து நிற்பது, இந்த உயிரிகளின் நீராதாரத்தினை அழித்த நமது பாவத்தினை சற்றேனும் குறைக்க உதவும்.தண்ணீர் வைக்க வாய்ப்பிருப்பவர்கள் தண்ணீர் வைக்கவும். வாய்ப்பு இல்லாதவர்கள் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 16-22 , 2014
sudarolijaffna@gmail.com

# சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 567 7609

## நடந்ததும் நடக்கப்போவதும்

ஏது நடந்ததோ அது நன்றாகவே நடந்து முடிந்துள்ளது. இத்தனை நாளும் என்ன தேவைக்காக கோபியின் பெயரால் அரசு நாடகமாடியதோ அந்த நோக்கத்தை இப்போது பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருக்கிறது. பதவியாக் காட்டுக்குள் கோபி உட்பட மூன்றுபேர் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க "வடக்கில் தொடர்ந்தும் இராணுவத்தை நிலைநிறுத்தும் அரசின் முடிவு சரியென்பதையே கோபியின் செயற்பாடுகளும், புலிகளின் மீள் உருவாக்கமும் காட்டுகின்றன. படையினர் வீரத்தோடு செயற்பட்டதாலேயே இன்னும் 30 வருடங்களுக்கு நீளக்கூடிய போரை 30 நாட்களுக்குள் முடித்திருக்கிறார்கள்" என்று கூறியுள்ளார்.

தமிழினம் எப்போதுமே போரையும் குழப்பத்தையும் விரும்புகின்ற ஒரு இனம் என்றும் அந்த இனத்தைக் கட்டுப்படுத்த இராணுவப் பிரசன்னம் காலாதிகாலத்துக்கும் இருக்க வேண்டும் என்பதையுமே அமைச்சரின் இந்தக் கூற்று மறைமுகமாக வெளிப்படுத்தியிருக்கிறது.

இலங்கைக்கு வருகின்ற சர்வதேசப் பிரதிநிதிகள் எல்லோரும் இங்குள்ள நிலைமையை நேரில் அவதானித்துவிட்டு சொல்கின்ற கருத்து," தமிழர் பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னம் அதிகரித்துள்ளது. இதனைக் குறைத்தால் மாத்திரமே நல்லிணக்கம் உருவாகும்". ஆனால் இந்தக் கருத்துகள் அரசுக்கு வேப்பங்காய் போல கசந்தன. "ஒருபோதும் படைக்குறைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று அரச தரப்பு சன்னதமாடியது. ஆனாலும் இந்தக் கலையாட்டத்துக்கெல்லாம் சர்வதேசம் மயங்கிவிடவில்லை. தொடர்ந்தும் இராணுவப் பிரசன்னத்தின் நீக்கம் குறித்து சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்துவந்தது.

ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் அமர்வுகளிலும் இராணுவத்தினர் தமிழர் பகுதிகளில் இருந்து விலகவேண்டும் என்றும் அப்போதுதான் அங்கு இயல்புநிலையைத் தோற்றுவிக்கலாம் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் தமிழர் பகுதிகளை தங்களுடைய நிரந்தரத் தங்குமிடங்களாகவும், தோட்டக் காணிகளாகவும், உல்லாச விடுதிகளாகவும், யோக்கட் தொழிற்சாலைகளாகவும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விழுங்கியுள்ள படைத்தரப்பு இம்மியேனும் அங்கிருந்து விலகத் தயாராக வில்லை.

எனவே ஏதேனும் சாட்டுக்களைச் சொல்லி தன்னுடைய இருப்பை தமிழர் பகுதிகளில் தக்கவைப்பதிலேயே படையினரின் கவனம் இருந்தது. ஒரு காலத்தில் இதற்காகவே கிறிஸ் பூதம் உருவாக்கப்பட்டபோது அது கடைசியில் பிசுபிசுத்துப்போய்விட்டது. இந்த நிலையில்தான் புலிகளின் புதிய தலைவர் என்று மக்கள் அறிந்தேயிராத கோபி என்பவரின் பெயரை பெருமெடுப்பில் விளம்பரப்படுத்தியது அரசு. ஆனாலும் இந்தக் கோபி எந்த வகையில் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முயன்றார் என்றோ, எத்தனை பேரை புதிதாக புலிகள் இயக்கத்துக்கு இணைக்க முயன்றார் என்றோ அரசு கூறவேயில்லை. வெறுமனே புலிகளுக்கு உயிர் கொடுக்க முனைந்தார் என்று மட்டும் சொல்லிக்கொண்டு இப்போது அவரைச் சுட்டுக்கொன்றும் விட்டது. இனிமேலும் கோபி போன்று தமிழ் இளைஞர்கள் புலிகளுக்கு உயிர் கொடுக்கக் கூடும் என்பதால் படையினரின் இருப்பு தமிழர் பகுதிகளில் அவசியம் என்று இனிவரும் காலங்களில் பெருமெடுப்பில் அரசு பரப்புரையில் இறங்கவும் கூடும். ஆனால் தங்கள் காதுகளில் சுற்றப்படும் பூக்களை சர்வதேசம் அறியாமலா இருக்கப்போகிறது?

# புலி வேட்டையா வெடிப்புளுங்கா ?

■ பிரமன்


தேவியன்


அப்பன்


கோபி

ஒருமாதமாக வெற்றிகரமாக மேடையேற்றப்பட்ட நாடகத்தின் இறுதிக்காட்சி பதவியாவில் அரங்கேறி இருக்கிறது.

30 வருடமாக நீடித்த தமிழர்களின் ஆயுதப்போராட்டத்துக்கு முள்ளிவாய்க்காலில் முடிவுகட்டிவிட்டதாக அரசு அறிவித்து 5 வருடங்களாகப் போகின்றன. அதன் பின்னர் புலிகளின் மீள் உருவாக்கத்துக்கான சாத்தியங்கள் இருப்பதாக அவ்வப்போது கதைகள் வந்தபோதும் இதுவரை அதற்கான அறிகுறி எதுவும் தென்படவேயில்லை. பிரபாகரன் இறந்துவிட்டார் என்று அரச தரப்பு சடலம் ஒன்றைக் காட்டியபோதும் கூட "அவர் இன்னமும் இறக்கவில்லை. உயிரோடுதான் இருக்கிறார்" என்று தமிழர்களின் ஒரு சாரார் நம்புகின்றனர்.

இதேவேளை புலிகளின் புலனாய்வுப்பொறுப்பாளர் பொட்டம்மான் தலைமையிலான ஒரு தொகுதிப் போராளிகள் பத்திரமாக இரகசிய நாடொன்றில் காத்திருப்பதாகவும் அவர்கள் தக்க தருணத்தில் மீண்டும் ஆயுதப்போராட்டத்தில் குதிக்கக்கூடும் எனவும் இன்னொரு சாரார் கூறுகின்றனர். ஆனால் இவை எவற்றுக்குமே ஆதாரங்கள் எவையும் இல்லை. எல்லாமே ஒவ்வொருவரினதும் நம்பிக்கைகளினதும் ஊகங்களினதும் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டவைதான்.

இந்த நிலையில்தான் போருக்குப் பின்னர் சர்வதேச ரீதியான நெருக்குதல்களுக்கு இலங்கை முகம்கொடுக்க வேண்டியிருந்தது. அதிலும் குறிப்பாக போர் முடிந்த பின்னரும் தமிழர் பிரதேசங்களில் இராணுவ அத்துமீறலும் அராஜகங்களும் அதிகரித்திருப்பது குறித்து சர்வதேச பிரதிநிதிகள் இலங்கையைக் கடுமையாகச் சாடினர்.

எனவே இராணுவத்தின் இருப்பைத் தக்கவைப்பதற்கும், அரச இயந்திரத்துக்கு எதிரானவர்களை கடத்தியோ, கொன்றோ ஒழித்துவிட்டு அந்தப் பழியைப் போடுவதற்கு புலிகளின் மீள் பிரசன்னம் அரசுக்கு அவசியமாக இருந்தது. எனவேதான் அது அடிக்கடி புலிகளின் உருவாக்கம் பற்றிய கதைகளை அவ்வப்போது வெளியிட்டுவந்தது.

படைப்புலனாய்வுத்துறையின் அனுசரணையோடு இத்தகைய புலி உருவாக்க நாடகங்கள் அவ்வப்போது மேடையேறினாலும் அவை மக்களிடையே பெரிதாக எடுபடவில்லை. இறுதிப் போரில் தப்பித்த தளபதி ராம் தலைமையில் புலிகள் ஒன்றி ணைகிறார்கள் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் பின்னர் அவர் கே.பி.யின் துணையோடு படையினரால் பிடிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. அதன் பின்னர் மிக அண்மையில் தடுப்பிலிருந்த புலிகளின் திருமலை மாவட்டத் தளபதி பதுமன் விடுவிக்கப்பட்டு அவர் தலைமை யில் புலிகளை உருவாக்க அரசு படாதபாடு பட்டது. ஆயினும் இந்தக் கதை வெளிவந்தவுடனேயே பதுமனின் சுயரூபத்தை ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதால் ஒருபோதும் அவரை தங்களுடைய தலைவராக தமிழ் மக்கள் ஏற்கமாட்டார் கள் என்பது அரசுக்கு புரிந்தது. எனவே தெரியாத புதிய முகம் ஒன்றை புலிகளின் புதிய தலைவராக காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்த நிலையில்தான் இந்த வருடம் மார்ச் 11 ஆம் திகதி கோபி என்பவர் தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் "இவர்தான் புலிகளின் புதிய தலைவர்" என்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

**உளவாளியா ?போராளியா?**

கோபி யார் என்பது பற்றிய குழப்பம் இன்னமும் தமிழ் மக்கள் மத்தியில் நீடிக்கவே செய்கின்றது. அவரின் அறிமுகமும் முடிவும் புரியாத புதிர்களாகவே நீள்கின்றன. ஏனெனில் "உண்மையிலேயே அவர் ஒரு போராளிதான்" என்றும் "இல்லை. இல்லை. அவர் படையினரின் உளவாளியாகச் செயற்பட்டவர்" என்றும் எதிர் எதிர் நிலைக்கருத்துக்கள் நிலவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதை - 1**

இறுதிப்போரின்போது படையினரிடம் சரணடைந்த கோபி, அப்பன் ஆகியோர் தடுப்பின் பின்னர் படையினரோடு ஒத்துழைத்தனர். இதனால் தங்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான கோபியை கொக்காவில் இராணுவ முகாமில் பணிக்கு அமர்த்தியது படைத்தரப்பு. அங்கு உணவு சமைக்கும் பணிக்கு கோபி உதவியாளராக இருந்தார். கோபி, அப்பன் ஆகியோரை விசாரணை செய்து பின்னர் அவர்களை படைத்தரப்போடு இணைத்த வேலையைச் செய்தவர்தான் இராணுவப் புலனாய்வாளராகச் செயற்பட்ட கமலராஜா.

சமையல் காரராக செயற்பட்டகோபி பற்றிய அறிமுகம் மக்களுக்கு இல்லாததால் அவரையே புதிய தலைவராக அடையாளப்படுத்தி ஒரு சலசலப்பை உண்டாக்கி கடைசியில் அவரை இரணுவமே கொன்றும் விட்டது. இதன் மூலம் புலிகள் உருவாகும் சாத்தியம் இன்னமும் இருப்பதால் இராணுவப் பிரசன்னம் தமிழர் பகுதிகளில் அவசியம் என்ற தன்னுடைய வாதத்தை அரசு ஆணித்தரமாக முன்வைக்க முடியும்.

**கதை - 2**

இறுதிப்போரில் தப்பித்தவர்களான கோபி, அப்பன் ஆகிய இருவரும் இந்தியாவுக்குச் சென்று அங்கு மீண்டும் போராட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பான செயற்பாடுகளில் இறங்கினர். மதுரையைத் தளமாகக் கொண்டு புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை அவர்கள் ஒருங்கிணைத்தனர். ஆயினும் இந்தத் தகவல் இந்திய புலனாய்வுத்துறைக்கு எட்டியது. கோபி, அப்பன் ஆகிய இருவரையும் கேரளாவுக்குச் செல்லுமாறு இந்தியப் புலனாய்வுத்துறை பணித்தது. அவர்களும் கேரளா சென்றனர். அங்கேதான் புலிகளின் முக்கிய செயற்பாட்டாளரான விநாயகம் தொலைபேசி மூலம் கோபி, அப்பன் ஆகியோரோடு தொடர்பினை ஏற்படுத்தினார். பொருளாதார ரீதியான உதவிகளையும், தாயகத்தில் ஆளணி தொடர்பான உதவிகளையும் ஏற்படுத்தித் தருவதாக விநாயகம் வாக்குறுதி அளித்தார். பெருமளவு பணம் கோபிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பின்னர் இந்தியப் புலனாய்வுத்துறையினரின் உதவியோடு கோபியும் அப்பனும் இலங்கைக்கு வந்தனர். மீண்டும் இயக்கத்தை கட்டியெழுப்ப முயன்றபோதுதான் அவர்களை அரசு இனம் கண்டுகொண்டு துரத்த ஆரம்பித்தது. கடைசியில் பதவியாவில் கோபி, அப்பன், தேவியன் ஆகிய மூவரையும் வெற்றிகரமாக வீழ்த்தியது.

**எதை நம்புவது?**

மேற்குறித்த இரண்டு கதைகளிலும் முதலாவதே உண்மைத்தன்மை பெறுவதற்கான சாத்தியப்பாடுகளை அதிகம் கொண்டிருக்கிறது. எனினும் அதுகூட ஊகம்தான். உண்மை என்ன என்பது கோபிக்கும் அப்பனுக்கும் தேவியனுக்கும் அரசுக்கும் மட்டுமே வெளிச்சம்.

என்றாலும் கோபி கொல்லப்பட்டது தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் இன்னமும் தீர்க்கப்படாது இருக்கின்றன.

1.ஏப்ரல் 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கோபியும் அப்பனும் எப்படி வெடிவைத்த கல் பகுதிக்குத் தப்பிச் சென்றார்கள்?

2.வெடிவைத்தகல் பகுதியில் நீண்ட காலமாக இராணுவத்தினரே உள்ளனர். 15 தமிழ் குடும்பங்களே அங்கே இருந்தன. இருப்பினும் மீள்குடியமர்வு உரிய முறையில் நடைபெறாததால் அவர்கள் கூட அங்கு வசிப்பதில்லை. எனவே இராணுவத்தின் முற்றுமுழுதான பிடியிலிருந்த பகுதிக்குள் பதுங்கும் அளவுக்கு "அறிவுத்திறன்' கொண்டவரா புலிகளின் தலைவராக உருவெடுத்தார். ?

3. கோபி, அப்பன், தேவியன் ஆகியோர் பதுங்கியிருந்தஇடத்தில் வேறு - எவருமே இருக்கவில்லை. அப்படியிருக்க அவர்கள் அங்குதான் இருக்கிறார்கள் என்பதைக் காட்டிக்கொடுத்தது யார்?

(கோபியே 10 இலட்சம் சன்மானத்துக்காக தன்னைக் காட்டிக்காடுத்தாரோ தெரியவில்லை)

4.கோபி குழுவுக்கும் படைத்தரப்பினருக்கும் சண்டை மூண்டதாகக் கூறப்படும் வெடிவைத்த கல்லுக்கும், அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட பதவியாவுக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 40 கிலோமீற்றர். அடர்வனம் ஒன்றில் 40 கிலோமீற்றர் தூரத்துக்கு தப்பிச் சென்றவர்களை ஒரே இரவில் தேடிப்பிடித்து கொல்வது என்பது சர்வ வல்லமை பொருந்திய அமெரிக்கவால்கூட முடியாத காரியம். அதைவிட வெடிவைத்த கல்லுக்கும் பதவியாவுக்கும் இடைப்பட்ட காட்டுக்குள் ஒளிந்துகொண்டால் அவர்களை கண்டுபிடிப்பதானால் முழுக்காட்டையும் வெட்டி அழித்தால் மாத்திரமே முடியும். அப்படியிருக்க எப்படி கோபி சிக்கினார்?.

5. பதவியாவில் கொல்லப்பட்டவர்களின் உடலங்களைபதவியா நீதவானிடம் ஒப்படைக்காமல் அநுராதபுரம் நீதவானிடம் ஒப்படைத்தது ஏன்?.

6. இதுவரை – இந்தப் பத்தி எழுதப்படும் வரை–கொல்லப்பட்டதாகக் கூறப்படும் மூவரின் உடலங்களையோ அல்லது சடலங்களின் புகைப்படங்களையோ அரசு வெளிவிடாதது ஏன்?

7. இந்தச் சம்பவத்தின்போது தங்கள் தரப்பில் கமலராஜா என்பவர் உயிரிழந்ததாக அறிவித்த படைத்தரப்பு பின்னர் அவர் பயிற்சியின்போது தவறுதலான வெடிவிபத்தில் இறந்தார் என அறிவித்தது. இந்தக் கமலராஜாதான் கோபி தொடர்பான விடயங்களை கையாளும் மொழி பெயர்ப்புபணியை ஆற்றிவந்தவர். அவர் எப்படி கோபி இறந்த தினத்தன்று பயிற்சியின்போது கொல்லப்பட்டிருக்க முடியும்? (ஒருவேளை கோபியின் ஆவி கொன்றிருக்குமோ?)

8.வழமையாகவே சண்டை ஒன்றில் கண்காணித்தல், படைகளை ஏற்றி இறக்குதல் என்பவற்றுக்காகப் பயன்படுத்தப்படும் உலங்கு வானூர்திகளில் ஒன்றுகூட இந்தநடவடிக்கையில் ஏன் ஈடுபடுத்தப்படவில்லை?

9.ஒரே நாளில் வெடிவைத்த கல்லில் இருந்து பதவியாவரை 40 கிலோ மீற்றர் தூரமான காட்டுப்பகுதியை கடந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது? (ஏனெனில் சாதாரண பகுதியில் கூட ஒரே இரவில் 40கிலோமீற்றரைக் கடப்பது அசாத்தியமான நிலையில் பாதைகள் அற்ற திசை தெரியாத அடர்காட்டில் 40 கிலோமீற்றர் பயணிக்கவே முடியாது.)

இவ்வாறான கேள்விகள் ஏற்கனவே தங்கள் பிடியில் இருந்த கோபி உள்ளிட்ட மூவரை படைத்தரப்பு போலி மோதல் ஒன்றிலேயே கொன்றுவிட்டு சண்டையில் கொன்றதாக நாடகம் ஆடுகின்றது என்ற எண்ணத்தை வலுப்பெறச் செய்கிறது. என்றாலும் தனது இராணுவ இருப்புக்கான வலிந்த ஆதாரம் ஒன்றை செயற்கையாக அரசு நிறுவிவிட்டது. இனி உலக நாடுகள் இராணுவப் பிரசன்னம் பற்றி கேள்வி எழுப்பும் போதெல்லாம் கோபியின் பெயரைச் சொல்லி தப்பித்துக்கொள்ள இலங்கையால் முடியும்.

அதுவும் காலாவதியாகிப்போனால் இன்னும் சில அப்பாவிகளுக்கு புலிகளின் புதிய தலைவர் என்ற பட்டம் சூட்டிவிட்டு சுட்டுக்கொல்லும் வித்தையை அதி காரத்துக்கு யாரும் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லைத் தனே.

# தர்மபுரம் முதல் பதவியா வரை

## ஒரு மாத நாடகம்

**மார்ச் - 14**

தர்மபுரம். அமைதியைக் கிழித்தபடி வந்த ஜீப்பிலிருந்து குதித்த பொலிஸார் ஒரு வீட்டுக்குள் அதிரடியாக நுழைகின்றனர். வீட்டிலிருந்தது இறுதிப் போரில் மகனைத் தொலைத்த தாயான ஜெயகுமாரியும் அவரது மகள் சிறுமியான விபூசிகாவும்தான். தேடுதலின் பின்னர் இருவரும் கைதுசெய்யப்பட்டார்கள். அப்போதுதான் முதன் முதலாக அந்தப் பெயரைப் பொலிஸார் உச்சரித்தார்கள்.

"கோபி எங்கே?"

ஜெயக்குமாரியும் விபூசிகாவும் மலங்க மலங்க விழித்தார்கள். அவர்களுக்கு அடியும் புரியவில்லை. நுனியும் புரியவில்லை.

**மார்ச் - 15**

*"புலிகளின் புதிய தலைவரான கோபி என்பவரை தர்மபுரத்தில் பிடிக்க முயன்றபோது அவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடிவிட்டார். அவருக்கு அடைக்கலம் கொடுத்த இரு பெண்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்" -*

பாதுகாப்புத் தரப்பு உத்தியோகபூர்வமாக கோபியின் பெயரை ஊடகங்களில் முதன்முறையாகப் பகிரங்கப்படுத்தியது.

வன்னிப்பகுதியெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. எங்கும் சோதனைகள். இராணுவக்குவிப்பு. தேடுதல்கள்.

**மார்ச் - 22**

*"தேவைப்படுகிறார்கள்.*

*கோபி, அப்பன் ஆகிய இருவரைப்பற்றிய தகவல்களைத் தருபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம்."*

இரவோடு இரவாக வன்னி முதல் யாழ்ப்பாணம் வரை எங்கும் இந்த அறிவிப்போடு கூடிய சுவரொட்டிகள் நீக்கமற ஒட்டப்பட்டன. அன்றுகாலை வட்டுக்கோட்டைப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு , கோபியின் நெருங்கிய சகா ஒருவரைக் கைதுசெய்தாக படைத்தரப்பு அறிவித்தது.

தொடர்ந்து வந்த நாள்களில் கோபியின் மனைவி, பெற்றோர் உள்ளிட்ட 65 பேர் கைதாகினர்.

**ஏப்ரல் - 03**

இதுவரையும் புலிகளின் புதிய தலைவர் என்று கோபியையும், அவரது புலனாய்வுத் தளபதி என்று அப்பன் என்பவரையும் சுவரொட்டிகள் மூலமும் பகிரங்கமான அறிவித்தல் மூலமும் அடையாளப்படுத்தியிருந்த அரசு புதிதாக மூன்றாவது நபரையும் இந்த நாடகத்துக்குள் அறிமுகப்படுத்தியது. அவர் பெயர் தேவியன் அல்லது தெய்வீகன். இவர் வான் புலிகளின் விமானி என்றும் சொல்லப்படுகிறது. (ஆனால் அந்தத் தேவியன் வேறு இந்தத் தேவியன் வேறு என்று சொல்வோர் இன்னமும் உண்டு)

**ஏப்ரல் - 09**

படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்த கோபியின் மனைவியான சர்மிளாவின் வயிற்றிலிருந்த கரு சிதைக்கப்பட்டதாக மனித உரிமைகள் அமைப்பில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டது.

அதேநோளில் "கோபி உள்ளிட்ட மூவரும் கைது" என்று பாதுகாப்புத் தரப்பை மேற்கோள்காட்டி ஊடகங்களில் வெளியான செய்தி பரபரப்பைக் கிளப்பியது.

**ஏப்ரல் - 11**


கோபி, அப்பன், தேவியன் ஆகிய மூவரும் வவுனியா வடக்கின் வெடிவைத்த கல் பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டதாகவும் அங்கிருந்து அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பியோடியபோது பதவியாவில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் அரசு பெருமையோடு அறிவித்தது. இதன்போது படைத்தரப்பில் கமல்ராஜ் என்ற ஒரு தமிழ் அதிகாரி உயிரிழந்ததாக அறிவித்த இராணுவம் பின்னர் அதை மறுத்து அவர் பயிற்சியின்போதே தவறுதலான வெடிவிபத்தில் சாவடைந்ததாகச் சொன்னது.

**ஏப்ரல் - 13**

கோபி உள்ளிட்ட கொல்லப்பட்ட மூவரினதும் உடற்பாகங்களும் இரத்த மாதிரிகளும் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டன. அரச செலவிலேயே மூவரின் சடலங்களும் இரகசிய இடம் ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கென ஓர் இடம்




பள்ளிசெல்லும் வேளையிலே
முளைவிட்ட முதல் காதல்!
நெஞ்சோடு இருக்கிறது
என்றைக்கும் மறவாமல்!

என் மேசையில் அவள் பெயரும்
அவள் மேசையில் என்பெயரும்
பள்ளி முழுவதும் கவிதைகள்
நினைக்கவே இனிக்கிறது!

பல கதைகள் பேசினோம்
பல இடங்கள் சுற்றினோம்
இருந்தும் கிடைக்கவில்லை பயன்
பள்ளியோடு முறிந்தது என் காதல்!!!

பல்கலைக்கழகம் சென்றபோது
என் இரண்டாவது காதல்!
தேன் சொட்டும் அக்காதல்
மறவாது என்றைக்கும்!

படிப்பெல்லாம் மறந்தது
பணமெல்லாம் பறந்தது
என்சிந்தை எல்லாம்
தேனருவி அவள் பக்கத்திலே!

மதி மயங்கினேன் நான்
மங்கை அவள் அழகினிலே!
மதிமுகம் என்னை ஏமாற்றினாள்
இன்னொருவன் துணைகிடைத்ததனால் !!!

வேலை செய்யும் இடத்தில் தான்
பக்குவமாய் வந்தது –என்
மனம் கவர்ந்த
மூன்றாவதுகாதல்!

அன்பான என் காதலியை
மனைவியாக்க துடித்தது மனது
தென்றலவள் சம்மதித்தாள்
தெம்மாங்கு பாடியது நெஞ்சம்!

ஆனால்.....!
நிலைக்கும் என்ற காதலும்
நிலையில்லாமல் போனது
சாதி என்றபோர்வையிலே
சாகடிக்கப்பட்டது என்
காவிக் காதல்!!!

ரீ.சிந்து,
திருநெல்வேலி.

# கவிதைப் புனல்

## காலம் காட்டுதல்

எழுதினாலும் பயனிலை,
எந்தப் பேச்சும் பயனிலை!
அழுத்தினாலும் பயனிலை,
ஆட்டு மந்தை மந்தையே!

படமெடுத்தும் பயனிலை,
பந்தல் இட்டும் பயனிலை!
தடம்பதித்தும் பயனிலை,
தாங்கி நின்றும் பயனிலை!

தொண்டு செய்தும் பயனிலை,
தூய்மை காத்தும் பயனிலை!
மண்டூகத்தின் கத்துதல்
மழையினாலும் நிற்குமோ?

தமிழகத்தின் தலைவிதி
தலைகீழாக மாறிடின் ,
அமுதும் நஞ்சுதானடா
அதனைக் காலம் காட்டுமே!

சி.அம்பலவாணர்,
திருமலை.

## புதியதோர் தமிழ்ச்சாதி



தாம் அகதிகள் இல்லையென்பார்
அகந்தை மிகக் கொள்வார்
புலம் பெயர் தமிழர் என்பார்
புதுமை பல சொல்வார்
தாம் வந்து இருபதாண்டு
என்பார் சிலர்
ஆகா நாங்கள் முப்பதாண்டு
என்பார் பலர்
இருபதும் அகதி தான்
முப்பதும் அகதி தான்

படிக்க வந்தவர்கள்-நாம்
அகதிகள் இல்லையென்பார்
படிக்கத்தான் வந்தாய்,
படித்து முடிந்த பின்
திரும்பி ஏன் போகவில்லை?
அதுவும் ஒரு நாடோ?
அங்கேயும் மனிதன் போவானோ?
கறுப்பு நிற ஆங்கிலேயன்
கதைகள் பல பேசுகின்றான்

பிறந்ததம் மண்ணை
இகழ்ந்தும் பேசுகின்றார்
சிறந்த தமிழர் இவர்....
சீராட்டி வளர்த்த மண்ணை
மறந்த மனிதர்
தாயை மறந்திடலாம்,
தாய் மண்ணை மறக்கலாமோ?
இறந்து போகுமட்டும்
இதயம் மறக்கலாமோ?

அந்த நாளில் தமிழரிடம்
சாதி மத பேதமில்லை
பின்னாளில் ஆரியனும்
பிரித்தாள வேண்டி
கொண்டு வந்தான் சாதி நான்கு
இன்று புலம் பெயர் தமிழர்-இவர்
புதுச்சாதி ஆயினரோ!

ம.பத்மநாபன்,
பரந்தன்.



## மதவெறி கொண்டவள்

புன்னகை விழியாள்
என்னை நோக்கினாள்
கண்ணகியழகாள்
காதல் மொழி பேசினாள்

சகாராவில் தோன்றிய
பேரழகியவள்
சாய்ந்த கோபுரமாக
மனதில் பதிந்த சித்திரமவள்

விண்ணைத் தாண்டி
வந்தவள் ஊடல் கொண்டு
பிரிந்தவள் கொஞ்சு மொழி காரியை
நெஞ்சமெல்லாம்நினைப்பதால்
தஞ்சம் புகுந்த நினைகளுடன்
சலனமுற்று நடக்கிறேன்

வேத பாடம் கற்க வந்தாள்
காதல் பாடம் கற்க வைத்தாய்
அடி போடி பைத்தியக்காரி
மதவெறி கொண்டவள்
நீயென்பது இப்போது தான்
எனக்குப் புரிந்தது.

வே.வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.

## நினைவு



பிடிக்கவில்லை
பிரிந்தாயிற்று
இருந்தும்
பிடித்துக்
கொண்டிருக்கிறது
விடாமல்

கு. தவசீலன்,
பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலி கொடுத்து பலன் பெறும் இந்தியா

ஆசாத்

இலங்கையில் இடம்பெறும் அரசியல் சார்ந்த சம்பவங்களில் எல்லாம் இந்தியத் தலையீடு நிகழ்வதென்பது என்பது விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன ஒரு தவிர்க்க முடியாத நியதியாகி விட்டது. இங்கு இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் ,போர், சாமாதான முயற்சிகள் என அனைத்து விடயங்களிலும் ஏதோ ஒரு வகையில் இந்தியாவின் வகிபாகம் வலுவாகவே விளங்கி வந்துள்ளது. அதே வேளையில் இலங்கையில் இந்தியப் படை நிலை கொண்டிருந்த காலப் பகுதியில் இந்தியா போர்க் குற்றங்கள், மனித உரிமைமீறல்கள் போன்ற அடாவடித் தனங்களிலும் தனது பங்களிப்பை மேற் கொள்ளத் தவறவில்லை.

இலங்கையில் அரசபடையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் போர் இடம்பெற்ற காலத்திலும் , அது முடிவுற்ற பின்னரும் பல தமிழர்கள் காணாமற் போயினர். அவர்கள் பற்றி எவ்வித தகவலையும் கூடப் பெறமுடியாத நிலையே தொடர்கின்றது. காணாமல் போனோரைத் தேடிப் பல போராட்டங்கள் அவர்களின் உறவினர்களாலும், மனிதஉரிமை அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை அரசு அவற்றை அலட்சியம் செய்த போதிலும், இந்தப் பிரச்சினை தொடர்பாகச் அதிகரித்த சர்வதேச அழுத்தங்கள், அரசைச் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ப்பந்தப்படுத்தின.

அதன் விளைவாக காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப் பட்டது.

இந்த விடயத்திலும் இலங்கை அரசு தன் மீதும் படைகள் மீதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நீர்த்துப் போகவைக்கும் வகையில் விடுதலைப்புலிகள் மீதும் ஏனைய தமிழ்க் குழுக்கள் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் வகையிலேயே விசாரணைகளை நகர்த்த முயன்றது.

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படும் சர்வதேச விசாரணையிலிருந்து தான் தப்புவதற்கு ஏற்கனவே இந்தியா ஏற்பாடு செய்து விட்டது. அதாவது அமெரிக்காவால் கொண்டு வரப்படவிருந்த தீர்மானத்தின் முன் வரைவின் போது, இந்தியா விசாரணைக்கான காலப் பகுதியை 2002க்கும் பின்பு இடம் பெற்ற சம்பவங்கள் சம்பந்தமாக இருக்க வேண்டும் எனத் திருத்தம் கொண்டு வந்தது. அதை அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டது.**

எனினும் அந்த விடயத்தில் எமது மக்கள் வெளிப்படுத்திய தெளிவான உறுதியான நிலைப்பாடு காரணமாக அவர்களால் முழுமையாக வெற்றி பெற முடியவில்லை. படையினர் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக காணாமற் போனோரின் உறவினர்களால் முன் வைக்கப்பட்டன. இது தவிர அரச சார்பு நிலை அமைப்புகளான கருணாகுழு, பிள்ளையான் குழு, ஈ.பி.டி.பி போன்றவை மீதும் காணாமல் போனோரின் உறவுகள் குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்தினர். ஆயினும் அது மட்டுமே அரசின் மீதான களங்கத்தை துடைக்கப் போதுமானதாக இல்லையென்பதால், அடுத்த கட்டம் நோக்கி அரசு நகர்ந்தது.

விசாரணைக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதி 1980ஆம் ஆண்டிலிருந்து 2009 வரை என விரிவாக்கப்பட்டது. அதாவது இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்த காலப்பகுதி யும் காணாமல் போனோரைக் கண்டறி யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை எல்லைக்குள் உட்படும்படி கால எல்லை விரிவுபடுத்தப்பட்டது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலரைக் குற்றச்சாட்டுக்கு உட்படுத்தும் உள் நோக்கம் இருக்கிறது என்பது மிகவும் தெளிவான ஒரு செய்தியாகும்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கான கால எல்லை விரிவாக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள ஈ.பி.ஆர். எல். எவ்., ரெலோ ஆகிய அமைப்புக்களின் உறுப்பினர்களை இலக்கு வைத்தாலும் கூட, இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளையும் புறம் தள்ளி விட முடியாது. ஏனெனில் ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் போன்ற அமைப்புக்கள் இந்திய அமைதிப் படையுடன் இணைந்தே மக்கள் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அது மட்டுமன்றி இந்தக் காலப்பகுதியில் இந்தியப் படைகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் ஏராளம். குறிப்பாக இந்திய அமைதிப்படையினர் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்குள் புகுந்து மருத்துவர்கள், தாதியர், நோயாளிகள், என எழுபதுக்கும் மேற்பட்டோரைக் எவ்வித காரணமுமின்றிச் சுட்டுக் கொன்றமையை எவரும் எக்காலத்திலும் மறந்து விட முடியாது.

ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் மேற்கொள்ளப் படும் என எதிர்பார்க்கப்படும் சர்வதேச விசாரணையிலிருந்து தான் தப்புவதற்கு ஏற்கனவே இந்தியா ஏற்பாடு செய்து விட்டது. அதாவது அமெரிக்காவால் கொண்டு வரப்படவிருந்த தீர்மானத்தின் முன் வரைவின் போது, இந்தியா விசாரணைக்கான காலப் பகுதியை 2002க்கும் பின்பு இடம் பெற்ற சம்பவங்கள் சம்பந்தமாக இருக்க வேண்டும் எனத் திருத்தம் கொண்டு வந்தது. அதை அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டது.

எனவே போர்க்குற்றங்கள்,மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணைகளிலிருந்து இந்தியா தப்பித்துக் கொண்டது.

ஆனால் இந்தியா அமைதிப்படையுடன் இணைந்து குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனக்கருதப்படும் ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ் போன்ற அமைப்புக்கள் காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் எல்லைக்குள் கொண்டு வரப் பட்டுள்ளனர்.

இப்போது எழும் கேள்வி சர்வதேச விசாரணையிலிருந்து தன்னைக் காப் பாற்றிக் கொண்ட இந்தியா தன்னுடன் இணைந்து செயற்பட்டவர்களை இலங்கை அரச தரப்பின் விசாரணையிலிருந்து காப்பாற்றுமா என்பது தான் .

ஐ.நா . மனித உரிமைகள்பேரவையில் இலங்கைக்கு ஆதரவாகக் கடுமையான முறையில் பாடுபட்ட இந்தியாவுக்கு, தன்னவர்களைக் காப்பாற்றும்படி இலங்கையிடம் கோர உரிமை உண்டு. ஆனால் இந்தியா அப்படிச் செய்யப்போவதில்லை.

ஏனெனில் இந்தியா தன்னுடன் நின்றவர்கள், தன்னை நம்புபவர்கள், தனக்குச் சாதகமாகச் செயற்படுபவர்கள் ஆகியோரை விட இலங்கை அரசையே கூடுதலாக விசுவாசிக்கிறது என்பது தான் உண்மை.எவரைப்பலி கொடுத்தாவது தனது பிராந்திய மேலாதிக்கத்தை வலுப் படுத்த இலங்கையுடனான இணைந்து போகும் உறவிலேயே அது என்றும் அக் கறை காட்டும் என்பது தான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் - 8



சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் தான் எழுதிய நூலிலே பாபாவுடனான அனுபவங்களை பகிர்ந்துகொள்கின்றார்.

எங்கே உண்மை அல்லது 'சத்குரு' வழிகாட்டியாக இருக்கிறாரோ, அங்கே இவ்வுலகப் பெருங்கடலுக்கு அப்பால் நம்மை பத்திரமாகவும், எளிதாகவும் அவர் நிச்சயம் அழைத்துச் செல்வார். சத்குரு என்னும் சொல்லானது நமது மனதிற்கு இறைவனைக் கொணர்கிறது. எனக்கு முன்னால் அவர் நின்றுகொண்டிருப்பது போலும் 'உதி' என்னும் திருநீற்றை எனது நெற்றியில் இடுவதைப் போன்றும், அவரது ஆசிகள் நல்கும் கரத்தை என் தலைமீது வைப்பதைப் போன்றும் எனக்குத் தோன்றுகிறார். எனது இதயம் மகிழ்ச்சியால் நிரம்புகின்றது. குருவின் கரம் தீண்டலின் சக்தியானது வியக்கத்தக்கதாகும். உலகை அழிக்கும் நெருப்பால் அழிக்கப்படாத எண்ணங்களும் ஆசைகளும் உடைய இந்த நுட்பமான உடம்பு,குரு சாதாரணமாக கரம் தீண்டுவதாலேயே அழிக்கப்படுகிறது. முந்திய பல பிறவிகளில் உண்டான பல பாவங்களும் சுத்தமாக அடித்துச் செல்லப்படுகின்றன. சாயிபாபாவின் சுந்தரருபத்தைப் பார்த்தாலே மகிழ்ச்சி பெருக்கெடுக்கிறது. உணர்ச்சிகள் உள்ளத்தை வெல்கின்றன. நானே அது (பிரம்மம்) என்னும் உணர்வை அது எழுப்பிவிடுகின்றது. தன்னையறிதலின் ஆனந்தத்தை ஸ்தாபிக்கிறது. நான் ,நீ என்னும் வேறுபாட்டைக் கரைத்து நம்மை உச்சத்துடன் (ஒரே உண்மையுடன்) ஒன்றாக்குகிறது.

'சாயி'யின் முன்னால் எவன் ஸாஷ்டாங்க சரணம் செய்து, தனது இதயத்தையும் உயிரையும் அவரிடம் சமர்ப்பிக்கிறானோ , அவன் வாழ்க்கையின் நான்கு முக்கிய குறிக்கோள்களாகிய அறம் (தருமம்), பொருள்( செல்வம்), இன்பம் (ஆசை), வீடு (முக்தி) இவைகளை எளிதில் அடைகிறான். கர்மம், ஞானம், யோகம் ,பக்தி என்ற நான்கு வழிகள் நம்மைத் தனித்தனியே கடவுளிடம் இட்டுச் செல்கின்றன. இவைகளில் பக்தி வழி முட்கள், பள்ளங்கள்,படுகுழிகள் நிறைந்ததாயும் எனவே கடப்பதற்கு மிகவும் கடினமாயும் இருக்கிறது. ஆனால் நீங்கள் சாயியையே சார்ந்து குழிகளையும் , முட்களையும் விலக்கி நேராக நடப்பீர்களானால், அது உங்களை குறிக்கோளிடத்தில் (கடவுள்) எடுத்துச் செல்கிறது.

உணவு,உடை இவற்றைப் பொறுத்தமட்டில் வறுமையோ, இல்லாமையோ எனது அடியவர்களின் வீட்டில் இருக்காது என்கிறார் பாபா. தங்கள் மனதை எப்போதும் என் மீது ஸ்திரப் படுத்தியவர்களாய் என்னையே முழு இருதயத்துடன் வழிபாடு செய்யும் அடியவர்களின் நலன்களைக் காப்பாற்றுவதை நான் எப்போதும் கவனிப்பதே எனது சிறப்பியல்பு. எனவே உணவுக் காகவும் , உடைக்காகவும் கடின முயற்சி எடுக்காதீர்கள். உங்களுக்கு ஏதாவது வேண்டுமானால், கடவுளிடம் இரந்து கேளுங்கள். இவ்வுலக கௌரவத்தை விட்டு விடுங்கள். கடவுளின் அருளையும் ஆசியையும் பெறமுயலுங்கள். அவரின் சந்நிதானத்தில் கௌரவம் அடையுங்கள்.


## போலிக் குரு ஜவஹர் அலி

மல்யுத்தம் நடந்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் 'ஜவஹர் அலி' என்னும் பெயருடைய பக்கிரி தன் சீடர்களுடன் அஹமத் நகரிலிருந்து ராஹாதாவுக்கு வந்து வீரபத்ரசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள பக்காவில் (விசால அறை) தங்கினார். இந்தப் பக்கீரி படித்தவர். குரான் முழுவதையும் ஒப்பிக்கும ஆற்றல் உடையவர். இனிமையான நா உடையவர். கிராமத்தைச் சேர்ந்த பல மதப்பற்றும் பக்தியும் உடைய மக்கள் அவரிடம் வந்து மரியாதை செய்யத் தொடங்கினர். அவர் அந்தக் கிராம மக்கள் உதவியுடன் வீரபத்திரர் கோயிலுக்கு அருகில் ஓர் இத்கா (இத்கா தினத்தன்று முகமதியர் தொழும் இடத்தின் முன்புள்ள சுவர்) கட்டத் தொடங்கினார். இவ்விடயத்தைப் பற்றி சில சர்ச்சைகள் உண்டானதால் ஜவஹர் அலி ராஹாதாவை விட்டுப் புறப்பட வேண்டியதாயிற்று. பிறகு அவர் சீரடிக்கு வந்து பாபாவுடன் மசூதியில் தங்கினார். அவருடைய இனிமையான வாக்குகளால் மக்களைக் கவர்ந்தார். பாபாவைத் தன்னுடைய சீடர் என்று கூறத் தொடங்கினார். பாபாவும் அதை மறுக்கவில்லை. அவரின் சீடராக இருக்கச் சம்மதித்தார். குரு, சீடர் இருவரும் ராஹாதாவுக்குத் திரும்பி அங்கு வசிக்க முடிவு செய்தனர். குரு சீடரின் மதிப்பை அறிந்திருக்கவேவில்லை. ஆனால் சீடர் குருவின் குற்றங்களை உணர்ந்திருந்தார். எனினும் அவரை மதிக்காமல் இருந்ததில்லை. பாபா தமது கடமைகளை கவனத்துடன் ஆற்றிக்கொண்டு வந்தார். தமது குருவிற்குப் பல்வேறு விதங்களில் பணிபுரிந்தும் வந்தார். சீரடிக்கு அவர்கள் அடிக்கடி வருவது வழக்கம். ஆனால் அவர்களின் முக்கிய இருப்பிடம் ராஹாதாவாகும். சீரடியிலுள்ள பாபாவின் அன்புச் சீடர்கள் பாபாவை விட்டு ராஹாதாவில் தங்கியிருப்பதை விரும்பவில்லை. எனவே அவர்கள் ஓர் கூட்டமாக ராஹாதாவுக்குச் சென்று , பாபாவை இத்காவுக்கு அருகில் சந்தித்து தாங்கள் வந்த காரணத்தை கூறினார்கள். பாபா அவர்களிடம் பக்கிரி ஓர் கோபக்கார குணங்கெட்ட மனிதர் என்றும் தான் அவரை விட்டு வரமுடியாது என்றும், எனவே பக்கிரி வருவதற்குள் எல்லோரும் திரும்பி விடுவது நல்லது என்றும் கூறிக்கொண்டிருந்தார். அப்போது பக்கிரி திரும்பி வந்து தனது சீடனை அவர்களுடன் அழைத்துச்செல்ல முயன்றதற்காக அவர்களைக் கோபித்தார்.சில விவாதங்களும் தகராறுகளும் நிகழ்ந்தன. முடிவில் குரு, சீடர் இருவரும் சீரடிக்குத் திரும்புவதுஎனத் தீர்மானிக்கப்பட்டது. எனவே அவர்கள் சீரடிக்குத் திரும்பி வந்து வசிக்கத் தொடங்கினார்கள். சில நாட்களுக்குப் பிறகு குரு, தேவிதாஸரால் சோதிக்கப்பட்டு முழுமைக்குத் தேவையுள்ளவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டார். பாபா சீரடிக்குக் கல்யாணக் கோஷ்டியுடன் வருவதற்குப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் தேவிதாஸர் பத்து அல்லது பதினொரு வயதுப் பாலகனாக மாருதி கோவிலில் வசித்து வந்தார். தேவிதாஸிக்கு பல சிறப்பான அம்சங்களும் சிறப்பான கண்களும் அமைந்திருந்தன. அவர் அவாவின்மையின் அவதாரமும், ஞானியும் ஆவார். தத்யா கோதே, காஸிநாத் போன்ற பல பேர் அவரைத் தமது குருவாக நினைத்திருந்தனர். அவர்கள் ஜவஹர் அலியை தேவிதாஸ் முன்னிலையில் கொண்டு வந்தனர். அவர்கள் தொடர்ந்த விவாதத்தில் ஜவஹர் அலி தோற்கடிக்கப்பட்டார். பின்பு சீரடியை விட்டு ஓடிவிட்டார். வைஜாபுரிக்குச் சென்று தங்கினார். பல ஆண்டுகளுக்குப் பின்னர் சீரடிக்கு திரும்பி வந்து சாயி பாபாவின் முன் விழுந்து வணங்கினார். அவர் குரு என்றும், சாயிபாபா சீடர் என்றும் காணப்பட்ட தோற்றம் தெளிவாக்கப் பட்டது.

இவ்விடயத்தில் உண்மையான ஒழுக்கத்தால் சாயி பாபா எவ்வாறு ஒருவனது அஹங்காரத்தைக் களைந்து சீடனது கடமைகளை ஒழுங்காகச் செய்து உயர்ந்த பதவியை (தன்னையுணர்தல்) அடைவது என்பதைக் காட்டியுள்ளார்.

(ஞானத்தை இன்னும் தேடுவோம்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 616



### மேலிருந்து கீழ்

1. சம்ப[illegible]க்கக் கூடாதது.
2. பழம்.
3. புலவன்.
4. தேர் இழுக்கும் கயிறு.
5. சமுத்திரம்.
8. ஒரு வாழைப்பழ ரகம்.
9. இரும்புக்கருவிகளைத் தீட்டுவது இதனால்.
10. உலகம்.
12. குழந்தை.
15. சேற்றில் ஓய்வெடுக்கும் மிருகம்.
16. சரணம் வரிசையில் ஒன்று.
18. தங்குமிடம்.
19. வெளிச்ச வேளை.
20. வழங்கு.

### இடமிருந்து வலம்

1. செருக்கு.
6. ஒரு கிரகம்.
7. ஒரு திசையின் குறுகிய சொல்.
8. தாண்டு.
9. கழுவுதல்.
11. சாதாரண மனிதன்.
13. நோவு.
14. ரகம்.
15. என்று.
17. சிரசு.
18. ஆசைப்படல்.
20. துன்பம் இழைக்கும் செயல்.
21. சேர்.
22. திடீரென.
23. படிப்பு

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 616

சொற்சிலம்பம் போட்டி 616ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் மே 07 மற்றும் மே14ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 614 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சாகசம், 2. சுத்தி, 3. வதி, 4. தரிசனம், 5. பூகம்பம், 6. மின், 8. பார, 11. வகு, 12. தகடு, 14. திமில், 15.அகலம், 16.[illegible]அவம், 17. முகதா, 18.நலம், 20.சில, 21.புகை,

**இடமிருந்து வலம்**

1.சாசுவதம், 5.பூமி , 7.கத்திரி, 8.பாகன்,9.சதி, 10.சவரம், 12.தனகு, 13.பதி, 15.அகம்,16.அம்மி, 17.முகடு, 18.நவ,19.கல, 20.சிலம்பு ,22. தாம்பூலம், 23.கைதி,

### போட்டி இல. 613இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | சி.கிஷ்ணவேள், வ/பெரிய கோமாசங்குளம்-மகாவித்தியாலயம், வவுனியா |
| 2ஆம் பரிசு | க. தில்லை, மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி. |
| 3ஆம் பரிசு | ச. நவரத்தினம், இல;- 7 1/19, காலி வீதி, வெள்ளவத்தை. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) கிபா கலீல், இல;-66/17 (E), வாரணவீதி, திஹாரிய,கலகெடிஹேன.
(2) த. சாம்பசிவம், இல;-B4/ F20, புளுமெண்டல் தொடர்மாடி, கொழும்பு-13.
(3) செல்வி சி. எழிலோவியம், ஆக்வீதி, உடுவில், சுன்னாகம்.
(4) ஞானப்பிரகாசம் துரை, இல;-85/4, கார்மல் வீதி,குருநகர், யாழ்ப்பாணம்.
(5) எஸ். பாலசுப்பிரமணியம் , இல;-176/37, லோவர் வீதி,உவர்மலை, திருகோணமலை.
(6) (R). அருண் பிரசாத், இல;-04, பிரதான வீதி, கலஹா.
(7) இ.அர்த்தனா, உதயபுரம், பெரிய கல்லாறு-03, கல்லாறு.
(8) செல்வி. அன்ரனி பாத்திமா , இல; 199/01/02/, நாரன்வல, கம்பஹா.
(9)ந. சிஜானா, சோறன்பற்று, பளை.
(10)வே. சரஸ்வதி, அம்பன்,குடத்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களை அலையவிட்டது சரியா?

## – ஒரு வாசகரின் குமுறல்

**நா**ன் உங்கள் பத்திரிகையின் ஒரு அபிமான வாசகன். உங்களது பத்திரிகையில் வரும் ஒவ்வொரு ஆக்கங்களையும் பெரிதும் விரும்புகின்றேன். அதிலும் நீங்கள் மக்களை வழிநடத்தும் விதம் மிகவும் பாராட்டத்தக்கது.

ஆனால் அண்மைய காலங்களில் நீங்கள் மக்களை வழிநடத்தும் ஒரு மக்கள் பத்திரிகை என்னும் வரையறையைக் கடந்து ஒரு வியாபார நோக்கமுள்ள ஒரு பத்திரிகையாக உருவெடுத்துள்ளமை மிகவும் கவலைக்கிடமான ஒரு விடயமாகும்.

அண்மையில் நீங்கள் ஆரம்பித்த இளையோருக்கான ஒரு பகுதியான காதலர் மட்டும் எனும் பகுதி பல இளைஞர்களால் பெரிதும் விரும்பப் பட்டு உள்ளது. ஆனால் அண்மையில் நிறைவடைந்த ஒரு தொடரான 'ஆண்களை அலைய வைப்பது எப்படி?' எனும் தொடர் மிகவும் சர்சைக்குரிய ஒன்றாகும். காதல் புனிதமானது. இரு உறவுகளுக்கு இடைப்பட்ட ஒரு உறவுப் பாலமே காதலாகும். ஆனால் நீங்கள் அந்த பாலத்தினுள் பல தேவையற்ற உறவுகளைக் கோர்த்து விட்டு வேடிக்கை பார்ப்பது வினோதமாக உள்ளது.

மக்களை வழி நடத்த வேண்டிய பெரும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்க பட்டு இருந்தாலும் நீங்கள் அதனைத் துஷ்பிரயோகம் செய்கிறீர்கள். இளைஞர்களைத் தவறாக வழி நடத்துகின்றீர்கள். இது போன்ற ஆக்கங்களின் விளைவுகளை நீங்கள் பத்திரிகை வாயிலாக அறிந்து கொள்ளலாம். அண்மைய நீர்வேலி இளைஞனின் தற் கொலைக்கான காரணமும் இது போன்ற ஒன்று தான். காதல் என்னும் பொய் வலையில் இளைஞன் சுற்ற வைக்கப் பட்டு பின்னர் கைவிடப்பதால் அந்த தற்கொலை இடம் பெற்று உள்ளது. எனவே இது போன்ற உங்களது ஆக்கங்களின் விளைவுகளை முன் கூட்டியே அனுமானித்த பின்னரே பிரசுரிக்க வேண்டுமென தயவுடன் கேட்டு கொள்கிறேன்.

-பாதிக்கப்பட்ட வாசகன்-

**(உங்களுடைய கருத்துக்களைக் கவனத்தில் கொள்கின்றோம். ஆ-ர்)**

# காதலா? காமமா?

## கொற்றவை



தாய் வழிச் சமூக மரபில், உலகயாத மரபில் துறவு எனும் கருத்தாக்கம் இருந்திருக்கிறதா என்பது கேள்வியாக இருக்கிறது. தந்தைக் கடவுள் கோட்பாடு வந்த பின்னரே இந்தக்கருத்து தோன்றியிருப்பதாகத் தெரிகிறது. பெண்களின் பல் முனைத் திறனால், மறு–உற்பத்தி திறனால் பொறாமை கொண்ட ஆண் சமூகமானது தாழ்வு மனப்பான்மையிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ளவும், பெண்களிடமிருந்த அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவும், சமூகத்தில் தங்களது அதிகாரங்களை நிலை நிறுத்திக் கொள்ளவுமாக துறவை தோற்றுவித்திருக்கிறது என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது. இது இரு பலன்களை அவர்களுக்கு கொடுத்தது. ஒன்று பெண்களின் மீது ஆண்களுக்கான கட்டுப்பாடில்லாத அதிகாரம். மற்றொன்று சமூகத்தின் மீதான அதிகாரம். பெண்களின் மீதான அதிகாரம் அவர்களின் மறு–உற்பத்தி சக்தி, அத்தோடு தொடர்புடைய உழைப்புச் சக்தியைக் கட்டுக்குள் வைப்பதாக அமைகிறது. மற்றொன்று சமூகத்தின் மீது அதிகாரம் செய்யும் பலத்தை அவர்களுக்களித்தது.

ஒரு குழந்தை ஆரோக்கியமாக வளர்வதற்கு தொடுதல், கட்டியணைத்தல், முத்தமிடுதல் அவசியம் என்று ஆய்வுகள் சொல்கின்றன, அது ஒரு பாதுகாப்புணர்வை தரக்கூடியது. அதனால் குழந்தை மகிழ்ச்சியுடன் வளர்கிறது. அத்தகைய தொடுதல் இன்றி வளரும் குழந்தைகள் பல்வேறு குறைபாடுகளுடன் வளர்கின்றன. எலிகள், குரங்குகள் மற்றும் மனிதர்களிடம் நடத்திய ஆய்வில் தடவிக் கொடுக்கப்பட்டு காதலிக்கப்பட்டவை

### ஒரு சர்ச்சைத் தொடர்

இயற்கையான வளர்ச்சியைப் பெறுகின்றன அல்லாதவை முடக்கப்பட்டவர்களாக இருக்கின்றன என்று தெரியவருகின்றது.

விலங்குகளும் தங்களுக்குள் ஈர்ப்பு கொள்வதை காமம் என்று விளிக்கும் மனிதச் சொற்கள், மனிதனின் ஈர்ப்பை காதல் என்கின்றன. மனிதர்கள் தாங்கள் செய்யும் செயல்கள் தெய்வீகத் தன்மை, புனிதத் தன்மை நிறைந்ததாக கற்பனை செய்துகொள்வதன் மூலம் தாம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு இருப்பதாக கருதிக்கொள்ள போராடுகின்றனர். இது இருப்பு சார் பிரச்சினை, அந்த அடையாளச் சிக்கலிலிருந்தே அறிவின் வீழ்ச்சி துவங்குகிறது. இந்த அடையாளச் சிக்கலைப் பூர்த்தி செய்ய அதிகார வர்க்கம் பல்வேறு சிந்தனைகளை உட்புகுத்துகிறது. அதில் முதன்மை பெறுவதே காதலும், காமமும்.

**(இன்னும் பேசுவோம்)**

# ஹலோ... ஹலோ... காதல்!

இப்போது தொலைபேசியில் உரையாடும் போதும் நாம் முதலில் சொல்லும் வார்த்தை "ஹலோ" என்பதுதான். உண்மையில் இந்த ஹலோ என்ற சொல் எப்படி உருவானது? அதன் அர்த்தம் என்ன?

ஹலோ என்பது ஒரு பெண்ணின் பெயர்.மார்கரெட் ஹலோ தான் அந்தப் பெண். ரெலிபோனை கண்டுபிடித்தாரே கிரஹம்பெல் அவருடைய காதலி தான் மார்கரெட் ஹலோ.அவர் போனை கண்டுபிடித்தவுடன் "ஹலோ ஹலோ" என்று அவர் காதலி பெயரைத் தான் சொன்னாராம்.



போனை கண்டுபிடித்த கிரஹம் பெல்லை நாம் மறந்து இருந்தாலும் அவர் காதலி பெயரை ஞாபகம் வைத்து கொள்ளும்படி செய்துவிட்டார்.

அந்த காலத்திலேயே தன் காதலுக்கும் காதலிக்கும் மரியாதை செய்து இருக்கிறார் கிரஹம்பெல்.

**காதல் பேசுவோம் தொடர் தவிர்க்க முடியாத காரணத்தால் இந்தவாரம் பிரசுரமாகவில்லை. வழமைபோன்று அடுத்தவாரம் வெளிவரும். காத்திருங்கள்.**

# ஈரடியில் இதயங்கள் பற்றி...! 4

— சரவணா கார்த்திகேயன்

இரண்டே வரிகளில் உலகின் அத்தனை விடயங்களையும் அடக்கிய திருக்குறளில் காமத்துப் பாலை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எந்தக் காலக் காதலுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அது கொண்டுள்ளது. வள்ளுவர் எழுதிய காதல் குறள்களுக்கு நவீன கவிதைவடிவில் பொருள் சொல்லும் ஒரு புதிய முயற்சியே இந்தப் பகுதி.

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.
குறள் 1090

பிடித்துக் குடித்தால் தான்
மிதக்கும் கள்ளின் போதை
படித்தாலும் பார்த்தாலும்
தெறிக்கும் காதல் போதை.

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.
குறள் 1111:

அவள் தேகத்தின்
அதிமென்மையுடன்
ஒப்பீடு வைத்தால்
பூக்கள் கரடுமுரடு.

# அர்த்தமுள்ள முத்தங்கள்

## பூனை முத்தம்



இந்தப் பெயரைக் கேட்டவுடனேயே சத்தமில்லாமல் பக்கத்தில் இருப்பவர்களுக்குக் கூடத் தெரியாமல் காதலரின் கன்னத்தில் இடுகின்ற முத்தமே என்பது எல்லோருக்கும் சொல்லாமல் தெரிந்திருக்கும். முத்தத்தின் சுவை அதன் சத்தத்திலும் தங்கியிருப்பதாக காதலர்கள் சொல்வார்கள். ஆனாலும் திருட்டு மாங்காய்க்கு சுவை அதிகம் என்பதுபோல பலர் நிறைந்திருக்கும் இடத்தில் அவர்களில் எவருமே காணாதவகையில் திருட்டுத்தனமாக சட்டென்று முத்தம் இடுவது காதலர்களுக்கு உற்சாகமான ஒன்று. இதனை இருவருமே பெரிதும் விரும்பினாலும் 'யாராவது கண்டுவிட்டால் என்னாவது?' என்ற பதற்றமும் கூடவே இருக்கும். என்றாலும் பதற்றத்தை விடவும் முத்தமிட்டபின் கிடைக்கின்ற சந்தோசமே அதிகம் என்பதால் பெரும்பாலான காதலர்கள் இத்தகைய பூனை முத்தத்தை தங்கள் துணையிடம் அடிக்கடி மனதுக்குள் எதிர்பார்ப்பார்கள். அப்படி அவர்கள் எதிர்பார்த்ததைப் போலக் கிடைத்துவிட்டால் அன்றைய நாள் முழுதும் அவர்களுக்கு ஆனந்த நாளாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமலாவின் காதலை வெளிப்படுத்திய பார்த்திபன்

பார்த்திபன் இயக்கி வரும் கதை திரைக்கதை வசனம் இயக்கம் என்ற படத்தில் ஆர்யா உடன் இணைந்து கௌரவ பாத்திரத்தில் நடிக்கிறார் அமலாபால். அந்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றபோது, பார்த்திபனுடன் நட்பானாராம் அமலாபால். அந்த நட்பின் அடிப்படையில் இயக்குநர் விஜய்யை தான் காதலிப்பதாகவும் விரைவில் திருமணம் செய்து கொள்ள விருப்பதாகவும் பார்த்திபனிடம் சொல்லி இருக்கிறார்.

மேடையில் சுவாரஸ்யமாகப் பேசும் வழக்கமுடைய பார்த்திபன் சைவம் படத்தின் இசைவெளியீட்டுவிழாவில், திருவள்ளுவருக்கு கூட அறத்துபால், பொருட்பால், காமத்துபால் ஆகிய மூன்று பால்களைத்தான் தெரியும். திருவள்ளுவரை விட, விஜய் பெரிய ஆள். அவருக்கு அமலாபாலையே தெரியுமே... விஜய், திருமணத்துக்கு பின் முத்தத்தில் சைவமாக இருந்தால், அமலாக்கப்பிரிவினர் வந்து கைது செய்து விடுவார்கள். என்று கிசுகிசு பாணியில் இயக்குநர் விஜய் - அமலா பால் காதல் விவகாரத்தை போட்டு உடைத்துவிட்டார். இதனால்தான் பார்த்திபன் மீது கடுப்பில் இருக்கிறாராம் அமலாபால்.

இயக்குநர் விஜய் சைவம் பட வேலை யில் தீவிரமாக இருக்கும்போது, அவசரஅவசரமாக திருமண அறிவிப்பு செய்ய வேண்டிய காரணம் இதுதான் என்று கூறுகிறது பால் வட்டாரங்கள்.

## அறிவுமதியின் மறுப்பு

ஈழத் தமிழர்களைக் கொச்சைப்படுத்தி படம் தயாரித்த லிங்குசாமியின் 'அஞ்சான்' படத்துக்கு கவிஞர் அறிவுமதி பாடல் எழுத மறுத்த விவகாரம் திரையுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அறிவுமதி கூறுகையில்,

ஈழத் தமிழர்களை கொச்சைப்படுத்தி படம் தயாரித்த லிங்குசாமியின் படத்திற்கு பணிபுரிய விரும்பவில்லை . மேலும் இனம் திரைப்படத்தின் இயக்குனர் சந்தோஷ் சிவன், அஞ்சான் திரைப்படத்திற்கு ஒளிப்பதிவாளராக பணிபுரிவதாலும் அவர் பணிபுரியும் படத்துக்கு நான் பாடல் எழுத முடியாது என்றும் தெரிவித்தாராம். இந்தநிலையில் அறிவுமதிக்கு பதிலாக அந்த பாடலை பா.விஜய் எழுத இருப்பதாக கூறப்படுகிறது.

அறிவுமதியும், லிங்குசாமியும் நெருங்கிய நண்பர்கள் என்பதும், லிங்குசாமியின் பல படங்களுக்கு அவர் பாடல்கள் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





தரிஷா

## மே 9 கோச்சடையான்

மே 9 ஆம் திகதி கோச்சடையான் திரைப்படம் வெளியிடப்படும் என உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்பட்டுள்ளது. தமிழ், இந்தி, தெலுங்கு, ஆங்கி லம், குஜராத்தி, பஞ்சாபி, ஒரியா ஆகிய மொழிகளில் உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் 3 ஆயிரத்து 850 திரையரங்குகளில் இப்படத்தை திரையிடுகின்றனர். 'கோச்சடையான்' படம் 'அவதார்', 'டின்டின்' போன்ற ஹொலிவுட் படங்கள் சாயலில் அனிமேஷன் படமாக தயாராகியுள்ளது. ரஜினி மகள் சவுந்தர்யா இயக்கியுள்ளார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.

## வடிவேலுக்கு ஆதரவாக இயக்குநர்

வடிவேலுவின் தெனாலிராமன் படத்திற்கு தெலுங்கில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்த படத்தில் கிருஷ்ண தேவரா யர் குறித்து தவறாகச் சொல்லப்பட்டிருப்பதாக தெலுங்கு அமைப்புகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. இந்த விவகா ரம் குறித்து இயக்குனர் கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ் திரையுலகில் என்.எஸ்.கிருஷ்ணன், டணால் தங்கவேலு, கவுண்டமணி வரிசையில் நகைச்சுவையின் உச்சமான தமிழ் கலைஞன் வடிவேலுவை தமிழ் மண்ணில் அதுவும் அவரது வீட்டுக்கே வந்து பெரும் கூட்டத்துடன் வந்து மிரட்டி விட்டு சென்றிருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

ஒரு திரைப்படம் என்பது கதை ஆசிரியரால் தொடங்கி தயாரிப்பாளரால் திட்டமிடப்பட்டு இயக்குனரால் செயல்படுத்துவது ஆகும். அப்படியிருக்க நேடியாக அதில் நடித்த நடிகனை முற்றுகையிடுவது என்பதும், அவ மானப்படுத்துவதும், அச்சுறுத்துவதும் நேர்மையானதல்ல. வடிவேலு இனம், மொழி பார்க்காமல் அனைவரையும் சிரிக்க வைத்த கலைஞன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவர் திரைக்கு வருவதை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் ஏதாவது சந்தேகம் என்றால் படத்தின் தயாரிப்பு நிறுவனத்தை அணுகி உரிய முறையில் நடந்துகொள்வதுதான் அவர்களுக்கும் நல்லது . அதனை விடுத்து இது போன்ற அநாகரீகமான செயல்க ளில் ஈடுபடுவதை வடிவேலுவிடம் மட்டுமல்ல தமிழ் மண் ணில் ஒரு தமிழனிடமோ அல்லது ஒட்டு மொத்த தமிழினத்தையோ உரசிப்பார்க்கும் நிகழ்வாக கருதி அதற்கேற்ற பின்விளைவுகளை அவர்கள் சந்தித்தே ஆக வேண்டும் என்பதை தமிழர்களின் சார்பாக தெரிவித்துக் கொள்வதாக தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

படம்: நான் சிகப்பு மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விருதுக்காக....

2002 ஆம் ஆண்டு 'லேசா லேசா' படத்தின் மூலம் திரையுலகில் கால் பதித்த த்ரிஷா ஆரம்பத்திலிருந்து இப்போதுவரை முன்னணி நாயகர்களுடன் நடித்து வருகின்றார்.
விஜய், அஜித், சூர்யா, விக்ரம், சிம்பு என்று நடித்த த்ரிஷா மன்மதன் அம்பு படம் மூலம் கமலுடனும் ஜோடி சேர்ந்தார். தற்போதுகூட ஜீவா, ஜெயம்ரவி போன்ற நடிகர்களுடன் நடித்திருக்கிறார். அவரைப்பொறுத்தவரை தமிழில் ரஜினியுடன் ஒரு படத்தில் கூட நடிக்கவில்லை.
இருப்பினும், தனது நடிப்பை அங்கீகரிக்கும் வகையில் விருதுகள் கிடைக்கவில்லை என்று கலங்குகிறாராம் த்ரிஷா. மாநில அளவில் சில விருதுகளை வாங்கியிருந்தாலும் தேசிய அளவிலான அங்கீகாரம் தனக்கு கிடைக்காததால், எனது 12 வருட சினிமா வாழ்க்கை ஏமாற்றமாகியிருக்கிறது என்று கூறுகிறார் த்ரிஷா. வித்யாபாலன் நடித்தது போன்று தி டர்ட்டி பிக்சர்ஸ் மாதிரியான படங்களில் நடித்து தேசிய விருது வாங்க வேண்டும் என்ற ஆர்வம் மனதளவில் இருக்கிறதாம். அதற்கான வாய்ப்புகளுக்காக காத்திருப்பதாகவும் தனது நெருங்கிய சகாக்காளிடம் கூறிவருகிறாராம் த்ரிஷா.




குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி இந்தியில் கொடிகட்டிப் பறக்கும் நடிகைகளில் அலியாபட்டும் ஒருவர். ஹைவே, ஸ்டூடண்ட் ஆப் தி இயர் ஆகிய படங்களின் வெற்றிக்குப் பிறகு இந்தியில் அலியாவின் எதிர்பார்ப்பு அதிகமாகியது.
இந்த நிலையில், அவரை தமிழுக்கு கொண்டு வர பல முயற்சிகள் நடந்தன. முதலில் விஜயின் 'கத்தி' படத்துக்கு பேசினர். ஆனால் அவர் உடன்படவில்லை. அதையடுத்து அஜித்தின் புதிய படத்துக்கும் கௌதம்மேனன் பேசினார். அப்போதும் அவர் செவிசாய்க்கவில்லை.
ஆனால், தனுஷ் மட்டும் வெற்றிமாறன் இயக்கத்தில் தான் நடிக்கும் படத்துக்கு எப்படியாவது அலியாபட்டிடம் சம்மதம் வாங்கவேண்டும் என்று காத்திருக்கிறார். ராஞ்ஜனா படத்தில் தனுஷ் நடித்தபோது, அந்தப் படத்தைப் பார்த்து விட்டு அவருக்கு வாழ்த்துச் சொன்ன சில இந்தி நடிகைகளில் அலியாபட்டும் ஒருவராம். அந்த நட்புக்கு பிறகுதான் அவர் தனது வார்த்தையை நிராகரிக்க மாட்டார் என்று நம்பிக்கொண்டிருக்கிறாராம் தனுஷ்.

# வாய்ப்பை இழந்த ப்ரணீதா



நீரஜ் பாண்டே இயக்கத்தில் அக்ஷய் குமார் நடிக்கும் இந்தி படத்தில் நடிக்கும் கதா நாயகிகள் பட்டியலில் ப்ரணிதாவும் இடம் பிடித்தார். நேர்முக தேர்வுக்கு வரும்படி நீரஜ் விடுத்திருந்த அழைப்பை ஏற்று மும்பை சென்றார் ப்ரணிதா. ஆனால், குறித்த நேரத்தில் நீரஜை சந்திக்காமல் காலதாமதமாக சென்றதாகத் தெரிகிறது. இதனால் கடுப்பான இயக்குனர் முதல் சந்திப்பிலேயே இந்தியில் வசனம் கொடுத்து பேசச் சொன்னார்.
இதை சரியாக உச்சரிக்க முடியாமல் திணறினார் ப்ரணிதா. அவர் மீது திருப்தி ஏற்படாததால் ப்ரணிதாவை நீக்கினார் நீரஜ். ஏற்கனவே அக்ஷய்குமார் நடித்த ஸ்பெஷல் 26 இந்தி படத்தில் தென்னிந்திய நடிகை காஜல் அகர்வாலை அறிமுகம் செய் திருந்த நீரஜ், தனது புதிய படம் மூலம் மற் றொரு தென்னிந்திய நடிகையை அறிமுகம் செய்ய எண்ணி இருந்தார். அந்த வாய்ப்பை கைநழுவ விட்டார் ப்ரணிதா.

# கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் ரஜனி

ரஜனியின் கோச்சடையான் படம் வெளியாவதற்கு முன்னர் அடுத்த படம் பற்றிய செய்திகள் வர ஆரம்பித்துவிட்டன. சுரேஷ் கிருஷ்ணா கூறிய பாட்ஷா 2 வெற்றி பெறுமா என்ற சந்தேகம் வலுக்கவே அந்த திட்டத்தை ஒத்திவைத்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் நடிக்க தயாராகிவிட்டார். பிரியாமணி நடித்த சாருலதா படத்தை இயக்கிய பொன். குமரன் கதை வசனம் எழுத திரைக்கதை அமைத்து கே.எஸ்.ரவிக்குமார் இப்படத்தை இயக்குகிறார். இப் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடிக்க அனுஷ்கா ஒப்பந்தம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இந்தநிலையில் குறித்த படத் தில் இன்னொரு நாயகி வேடத்துக்கு இந்தி நடிகை சோனக்ஷி சிங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. படத்துக்கு ரஹ்மான் இசையமைக்கிறார்.






'ஆதியும் அந்தமும்' முதல் பாதியில் பயமுறுத்தி இரண்டாம் பாதியில் கதையுடன் சேரவைக்கிறார் இயக்குநர் கவுசிக்.
கதைப்படி, அஜய், ஒரு மனநல வைத்தியர். ஊட்டியில் உள்ள ஒரு மனநல மருத்துவமனையில் பணிபுரிய வரும் அவர், அந்த மருத்துவமனையிலேயே தங்குகிறார். தினமும் நள்ளிரவு ஒரு மணிக்கு ஒரு பேய் வந்து அவரை பயமுறுத்துகிறது. யார் நீ, உனக்கு என்ன வேண்டும்? என்று வைத்தியர் கேட்டதற்கு பதிலாக, சுவரில் ஒரு திகதியை எழுதி வைத்துவிட்டு போகிறது.
அந்த வைத்தியசாலையில் ஏதோ மர்மம் இருப்பதாக வைத்தியர் அஜய் சந்தேகப்படுகிறார். இந்த சமயத்தில், வைத்தியசாலையின் தலைமை வைத்தியரை பேட்டி எடுக்க பெண் செய்தியாளர் கவிதா சீனிவாசன் வருகிறார். வைத்தியர் அஜய்யும், செய்தியாளர் கவிதா சீனிவாசனும் சேர்ந்து வைத்தியசாலையில் உள்ள மர்மத்தை கண்டறிய முயற்சிக்கிறார்கள்.
அப்போது வைத்தியர் அஜய் திடீரென்று காணாமல் போகிறார். அவரை தலைமை வைத்தியர் தான் கடத்தி மறைத்து வைத்திருக்கவேண்டுமென்று சந்தேகிக்கிறார், கவிதா சீனிவாசன். தலைமை வைத்தியரை சந்தித்து, பொலிசில் முறைப்பாடு செய்யப்போவதாக கூறுகிறார். "உனக்கு இங்கே என்ன நடக்கிறது என்று தெரியுமா?" என்று அந்த தலைமை வைத்தியர் வைத்தியசாலையில் நடந்த முன்கதையை கூற ஆரம்பிக்கிறார்.
அந்த முன்கதையில் அழகான காதலும், ஆபத்தான வில்லத்தனமும், கற்பழிப்பு, கொலை போன்ற திடுக்கிட வைக்கும் குற்றங்களும் சேர்ந்து மிரட்டுகின்றன.
'சின்னத்திரை'யில் வில்லனாக மிரட்டிய அஜய், அழகான இளம் வைத்தியர் வேடத்தில் நூறு சதவீதம் பொருந்துகிறார். பணியில் சேர வரும் முதல் நாளே மாடிப்படி ஏறிப்போகும் இடத்தில் அவர் அமானுஷ்யமான சத்தத்தையும், ஆழ்ந்த மூச்சுக்காற்றையும் உணரும் போது, திகில் ஆரம்பித்து விடுகிறது. நள்ளிரவு ஒரு மணிக்கு அந்த கறுப்பு பெண் உருவம் தலைவிரி கோலத்தில் தன் முன்பு நிற்பதை முதன் முதலாக பார்க்கும்போது, அஜய்யும் மிரண்டு படம் பார்ப்பவர்களையும் மிரள வைக்கிறார். படத்தின் இரண்டாம் பகுதியில் அவருக்கும், மித்தாலி அகர்வாலுக்குமான மென்மையான காதல், மனதை வருடிக்கொடுக்கிறது. மாணவியை ஒரு பேராசிரியர் காதலிக்கலாமா? என்ற குற்ற உணர்வையும், அதையும் தாண்டிய காதலின் வேகத்தையும் அப்படியே முகத்துக்கு கொண்டு வந்து விடுகிறார், அஜய். அழகும், நடிப்பு திறமையும் உள்ள இளம் நாயகர்கள் பட்டியலில், புதிதாக அஜய் சேர்ந்து இருக்கிறார்.
இவரை கண்களால் கைது செய்யும் காதலியாக மித்தாலி அகர்வால். இவருடைய சிரிப்பும்,புன்னகை யும் மனதை ஈர்க்கிறது. வன்கொடுமைக்குள்ளாகி மனநிலை பாதிக்கப்பட்ட காட்சிகளில், மித்தாலி அனுதாபத்தை அள்ளுகிறார்.
பெண் செய்தியாளராக வரும் கவிதா சீனிவாசன், வைத்தியசாலையின் தலைமை வைத்தியராக மித்தாலியின் அப்பாவாக வரும் ராமநாதன், வைத்தியசாலை ஊழியர் யுவாங் சுவாங் ஆகிய மூவரும் பொருத்தமான தேர்வு.
எல்.வி.கணேசன் இசையில், "பெண்ணே பெண்ணே" பாடல், சுகமான ராகம். பின்னணி இசையில், 'ஹாலிவுட்' படங்களுக்கு சவால் விடுகிற மாதிரி மிரட்டியிருக்கிறார். டி.எஸ்.வாசனின் கமரா ஊட்டியின் குளிர்ச்சியையும், இருட்டையும் மிரட்டலாக படம் பிடித்திருக்கிறது.
இறுதி காட்சியில், இரண்டு கொலைகள் விழுந்த பிற கும் பொலிஸ் வராமல் இருப்பது, ஒரு பெரிய குறை. அஜய் தன்னை ஒரு அனாதை என்று கூறும்போது, திரையரங்கில் சிரிப்பொலி இது, இன்னொரு குறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் - II

மகாலிங்கம் பத்மநாபன்



# அது ஓர் அழகிய நிலாக்காலம்

## 3 கிராமங்களின் கதை

ஆதியில் மக்கள் எல்லோரும் பண்டமாற்று முறையில் வியாபாரம் செய்த போதிலும் "ரக்டர்" என்ற உழவு இயந்திரம் வன்னிக் கலாசாரத்தை அழிக்கும் வரை மூன்று கிராம மக்களும் எதற்கும் கூலியாகவும், விலையாகவும் நெல்லையே அளந்து வழங்கினர்.

உடைகளை வெளுத்து உதவியவருக்கும், சிகையலங்காரம் செய்த நிபுணர்களுக்கும், மீன் பிடித்துக் கொண்டு வந்து கொடுத்தவருக்கும், வயல் வேலை செய்தவர்களுக்கும் அவர்களின் சேவைக்காக நெல்லே அளந்து கொடுக்கப்பட்டது. உடுப்பு, துணிமணி மூட்டையாகக் கட்டித் தலையில் சுமந்து வீடு வீடாக விற்பனை செய்த இஸ்லாமிய வர்த்தகர்களுக்கும் நெல்லே விலையாக வழங்கப்பட்டது.

தமது பனைகளில் கள்ளுச் சீவியவர்களுக்கும் நெல் மணிகளே ஊதியமாக வழங்கப்பட்டது. இதனால் மூன்று கிராமத்தவர்களும் என்றும் கஷ்டப்பட்டதில்லை. வயலும், மாடுகளுமே சீதனமாக வழங்கப்பட்டன. ஆண்கள் மஞ்சள் கயிற்றில் கோர்த்த தாலிகளையே திருமணத்தின் போது மணமகளுக்கு அணிவித்தனர். பெண்கள் அதிக அளவு தங்க நகை அணியும் வழக்கமும் அன்று இல்லை. எனவே மக்கள் மிகவும் உற்சாகமாகவும், மகிழ்ச்சியோடும் தன்னிறைவோடும் வாழ்ந்தனர்.

**கெங்கம்மா**

விசக்கடிக்கு விசக்கடி வைத்தியரும், நோய்களுக்கு மூலிகை வைத்தியரும் எல்லாவற்றிற்கும் கலையாடி திருநீறு போடப் பூசாரிகளும் இருந்தமையால் வைத்தியசாலையின் தேவை பெரிதாக உணரப்படவில்லை. ஆனால் மகப்பேற்றின் போது சேயோ, தாயோ அல்லது தாய் சேய் இருவருமோ தவறிவிடும் சந்தர்ப்பங்கள் சில இருந்தன.

அதனால் ஏழாம் மாதமே கர்ப்பிணிப் பெண்களை மீசாலையில் உறவினர் வீட்டில் விட்டு விடுவர். வயிற்றுவலி ஏற்பட்டதும் இணுவில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவார்கள். இணுவில் ஆஸ்பத்திரியில் அப்போது இருந்த பெண் மகப்பேற்று வைத்தியரான திருமதி கெங்கம்மா மிகவும் இராசியானவர் என்று மூன்று கிராமமக்களும் கருதினார்கள். அவர் வன்னி மக்களின் மீது மிகவும் அனுதாபத்தோடு நடந்து கொள்வார். எனவே வன்னி மக்கள் ஏதோ நெருங்கிய உறவினரைப் பற்றிக் கதைப்பது போல அவரது மெலிந்த தோற்றம், சக ஊழியர்களிடம் கறாராக நடந்து கொள்ளல், தமது பிள்ளைகளைக் காப்பாற்றியமை தொடர்பில் அவரைப் பற்றிக் கதைப்பார்கள்.

**கூரை தட்டுதல்**

வயிற்றுவலி ஏற்பட்டு வைத்தியசாலை செல்லுமுன் அவசரமாக வீட்டிலேயே குழந்தைகள் பிறந்து விடுவதுண்டு. அவ்வாறு வீட்டிலே ஆண்பிள்ளை பிறந்தால் உடனே உலக்கையால் வீட்டின் கூரையில் மூன்று முறை தட்டுவார்கள். கூரையில் தட்டினால் ஆண்பிள்ளை துணிந்தவனாகவும் வீரனாகவும் வருவான் என்பது வன்னி மக்களின் நம்பிக்கை. அதனால் வீட்டில் பிறந்து, கூரை தட்டப்பட்டவனான என்னை இணுவிலில் பிறந்த எனது சகோதரனை விட வீரனாகவும் துணிந்தவனாகவும் எனது உறவினர் கருதினர். ஆனால் உண்மை அதுவல்ல என்று எனக்கு மட்டும்தான் தெரியும்.

(இன்னும் நிலம் விரியும்)

# விளங்க முடியாத அதிசயப் புத்தகம்

'வொய்னிச் கைப்பிரதி' என்னும் புத்தகத்தைப் பற்றி கேள்விப் பட்டிருக்கின்றீர்களா? வொய்னிச் கைப்பிரதி என்னும் புத்தகம் அச்சடிக்கப்படாத இன்னும் யாராலும் விளக்கம் சொல்ல முடியாத வரி வடிவங்களாலும் படங்களாலும் ஆனது. இது முற்றுமுழுதாக கையால் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் எப்போது இது எழுதப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. கதிரியக்க கார்பன் திகதியாக்க முறை மூலமாக இது எழுதப்பட்ட காலம் 15ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று அறியப்பட்டுள்ளது.

இது இத்தாலி மறுமலர்ச்சி காலத்தில் வடக்கு இத்தாலியில் எழுதப்பட்டது என்று அறியப்படுகின்றது. புத்தகப் பதிப்புரிமையாளர் ஒருவரிடமிருந்து 1912 ஆம் ஆண்டு வில்பிரட் வொய்னிச் என்பவர் இந்தக் கைப்பிரதி புத்தகத்தை வாங்கினார். இதில் காணாமல் போன அல்லது தவறிப் போன பக்கங்களைத் தவிர 240 பக்கங்கள் மீதமாக இப்போதும் இருக்கின்றன.

இதில் உள்ள எழுத்துக்கள் இடமிருந்து வலமாக எழுதப்பட்டு உள்ளன. பெரும்பான்மையான பக்கங்களில் ஏதாவது ஒன்றை விளக்கும் வகையில் படங்கள் இருக்கின்றன. வெவ்வேறு விதமான வர்ணங்களுடனும் சில படங்கள் கறுப்பு வெள்ளையாகவும் வரையப்பட்டுள்ளன. பெரும் பான்மையான மக்கள் இதனை பார்த்துவிட்டு இதில் உள்ள புரியாத எழுத்துக்களும் படங்களும் முட்டாள்தனமானவை என்று கூறுகின்றார்கள்.

2013 ஆம் ஆண்டு மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சொற்பொருள் ஆய்வாளர்கள் இதனை காகிதத்தில் அச்சுமுறையில் பதிப்பித்து படித்த பின்னர் இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவும் ஏதோ ஒரு குழுவுக்குப் பரிச்சயமான சங்கேதக் குறியில் எழுதப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.



சில ஆராய்ச்சியாளர்கள் இது முழுக்க முழுக்க எந்த ஒரு விடயத்தையோ செய்தியையோ வெளிப்படுத்துவதற்காக வெளியிடப்படவில்லை என்றும் வேண்டுமென்றே புரியாத வகையில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறுகின்றார்கள். ஆனால் இது ஏதோ ஒரு அர்த்தத்துடன் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் குறிப்புகளாக இருக்கலாம் என்பது இன்னொரு சாராரின் கருத்து. ஆனால் இதுவரை விளங்கமுடியாப் பொருளாகவே இந்தப் பிரதி எல்லோருக்கும் சவாலாக இருக்கிறது. அதன் அர்த்தத்தை கண்டுபிடிக்கப்போகின்றவர் யாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் கனவில் யார்?

இந்தியாவில் தேர்தல் காய்ச்சல் உச்சத்தை தொட்டிருக்கிறது. இந்த நேரத்தில் ஓய்வு ஒழிச்சலின்று புயல்வேகப்பரப்புரையில் ஈடுபட்டிருக்கும் தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் உறங்கியே வாரக்கணக்காகி விட்டது. இந்த நிலையில் சற்று ஆசுவாசமாக அவர்கள் உறங்கினால், அவர்களின் கனவில் யார் தோன்றக்கூடும் என்ற சின்னக்கற்பனை இது. (ஏற்கனவே மதுரை ஆதீனத்தின் கனவில் சிவபெருமான் தோன்றி இந்தியாவின் அடுத்த பிரதமர் ஜெயலலிதாதான் என்று நக்கல் அடித்துவிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது)

## ஜெயலலிதா கனவில் ஜெகமாதா?



என் கனவில் நேற்று.. "நீங்கள் வருவீர்களா.. வருவீர்களா.." என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்... ஹெலிகொப்டரே இன்றி வானத்திலிருந்து ஒரு பெண் இறங்கினார்.. அவர் மேரி மாதா போலவும் இருந்தார் ஜெகமாளும் ஆதிசக்தியாகவும் தெரிந்தார்.. ஆனால் இந்த முகம்..! இந்த முகத்தை எங்கு பார்த்தோம் என நான் வியப்போடு, யோசித்தேன்.. அடடா இது நம் முகம் அல்லவா..! நம் முகம் எப்படி? என யோசித்தேன்.. நமது ரத்தத்தின் ரத்தங்கள் பெரிய பெரிய போஸ்டர்களில் அவ்வப்போது நம்மை இப்படிப் புகழ்வதால் கனவில் வந்தவரும் என்னைப்போலவே தோன்றியது காலத்தின் கட்டாயம்.. அடடா வந்தது நானே தான்... நானே முதல்வர், நானே பிரதமர், நானே கடவுள்..!

அவர் என்னிடம் "நீங்கள் தான் அடுத்த பிரதமர்" என பெண் சம்பத் போல் கூறி(வி)னார்.. இது போன்ற புகழுரைகளை கொஞ்சமும் விரும்பாத நான்... போனால் போகட்டும் என விரும்புவதுபோல நடித்தேன்.. "அடுத்த பிரதமர் நான்தானே" என்று மீண்டும் அவரிடம் கேட்டேன்.. மதுரை ஆதீனத்தின் கனவில் சிவனே அதை உறுதி செய்துவிட்டாரே என்பதை எனக்கு அறிவித்தார். பதவியேற்பு விழாவுக்கு வருகிறேன் எனக் கூறி மின் வெட்டாக மறைந்தார்..!

## விஜயகாந்தின் முனிசாமி



மக்களே நேத்து என் கனவுல யாரு வந்தாங்கன்னு கேட்டா திகைச்சு போய்டுவிங்க..! யோவ் அந்த கொடிய இறக்கு. மூஞ்சிய மறைக்குதில்ல.. இப்படி செஞ்சால் நான் பேச வந்தது மறந்துடும்... ஆங்ங்... இப்ப நான் என்ன சொல்லிகிட்டு இருந்தேன்...? (அனைவரும் "கனவுல... உங்க கனவுல...")

ஆங்ங் கரக்ட்... என் கனவுல பாண்டி முனி சாமி வந்தாரு வந்து...ஏலே கருப்பு எம்ஜியாரே.. நீ கலக்குறய்யான்னாரு...நான் ஒண்ணுஞ் சொல்லலை.. என்னய மாதிரியே நீயும் நாக்க துருத்தி கண்ணு செவக்க பாத்து எப்பவும் ஆவேசமா பேசிகிட்டு இருக்கறத பாத்தா அப்படியே என்னய பாக்குற மாதிரியே இருக்குன்னாரு..! அதுக்கும் நான் ஒண்ணுஞ்சொல்லலை.. தப்பு நடந்தா பட்டுன்னு போடணும்.. கோவம் வந்தா அடக்க கூடாதுன்னு அப்படியே நம்மளை பின்பற்றுகிறாய் நீ என்றார்.. எல்லாத்தையும் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டா பேசிடுற அப்படின்னாரு..! அது என் குணஞ்சாமின்னேன்..! ரொம்ப சந்தோசப்பட்டாப்டி...!

கொஞ்சம் கோவத்தை கொறச்சா அடுத்த பிரதமர் யாருன்னு கை காட்டுற தகுதி உனக்கு வந்துடும்ன்னாரு..! 14 தொகுதியும் ஜெயிக்க ஆசீர்வாதம் கொடுங்க சாமின்னேன்... அவரும் கொடுத்திருக்காரு. அதனால் மக்களே நாமதான் ஜெயிக்கப்போறோம்.

## கலைஞரின் கனவு



இப்போதெல்லாம் பல பிரச்சினைகளால் தூக்கமில்லாமல் தவித்து கொண்டிருக்கும் வேளையில் நேற்று என்னையும் அறியாமல் உறங்கி விட்டேன். அப்போது என் கனவில் ஒரு அம்மையார் வந்தார். "யார்?" என்று கேட்டேன் "பராசக்தி" என்றார்.

நான் வசனம் எழுதிய முதல் படத்தின் பெயர் உள்ளவர் என்ற அளவிலே சற்று மகிழ்வுற்று, "அம்பாளா பேசுவது?" என்றேன்... பதிலுக்கு அவர் அம்பாள் எப்போதய்யா பேசினாள் என்று என் வசனத்தையே பேசாமல் "ஆம்" என்றார். "நாத்திகன் என் கனவில் எதற்கு வந்தீர்?" என்றேன். "அப்போதாவது நான் இருக்கிறேன் என்று சொல்வீரே" என பதிலுரைத்தார்..! பெரியார் வழி வந்த நான் சட்டென "அதற்கு நீங்கள் நிஜத்தில் அல்லவா வரவேண்டும்..!" என்று அவரை மடக்கினேன்... அதற்கு மறுமொழி சொல்ல முடியாமல் அவர் தடுமாறினார்...!

"எத்தனையோ சிக்கலான வேளைகளில் உங்கள் கிடுக்கிப்பிடி கேள்விகளால் எதிர் கட்சியினரை மடக்குவது போல எம்மை மடக்கிவிட்டீர்" என்றார்.. அந்த புகழுரையில் மயங்கிடாது "வந்த காரணமென்ன" என்றேன். உமக்கு என்ன வரம் வேண்டுமென்றார்..!

கடவுள் மறுப்பு கொள்கையுடைய நம்மை இவர் எள்ளல் செய்கிறாரோ என ஐயமுற்று, "என்ன வரம் வேண்டுமானாலும் தருவீரா" என்று கேட்டேன்..! அவரும் "என்னால் முடியாததில்லை. உமக்கு என்ன வேண்டும் கேள்" என்றார் மிகுந்த அகம்பாவத்துடன். அவர் கொட்டமடக்க. நானும் சற்றும் தளராது கேட்டேன், "அப்படியா நீங்கள் நம் அழகிரியை சமாதானப் படுத்துங்கள்" என்றேன். சட்டென்று மறைந்துவிட்டார் அந்த பராசக்தி..! கழகக் கண்மணிகளே உங்களுக்கு இதிலிருந்தே உள்ளங்கை நெல்லிக்கனியாக தெரியவில்லையா கடவுள் இல்லையென்று..!

## ராகுலின் ஆச்சியர் கூட்டக்கனவு

நேற்று ஒரு குட்டிக்கனவு தமிழகத்தில் நடப்பது போல்.. அதில் கடவுள் யாரும் வரவில்லை... எங்களுக்கு கடவுளாகத் தெரியும் தமிழக மக்கள் நிறையப் பேர் வந்தார்கள்.. ஏழையின் சிரிப்பில் இறைவனை காண வேண்டும் என்ற உயரிய நோக்கத்தால் ஏழ்மையை ஒழிக்காமல் இன்னும் ஏழைகளை உருவாக்கும் உன்னத சேவை செய்யவென இருக்கும் இயக்கம் எமது காங்கிரஸ் பேரியக்கம்..!

அந்த இயக்கத்தின் பல ஆணிகளில் ச்சே... ஆணிவேர்களில் ஒருவரான சிதம்பரத்தின் தொகுதிக் குள் நிற்கிறேன்.. சுற்றிலும் லட்சக்கணக்கான தொண்டர்கள் கூட்டம் (இது கனவு என்பதால் ஏற்றுக்கொள்ளவும்) ஏராளமான மூதாட்டிகள் முகத்தில் மகிழ்ச்சியோடு "கை" அசைத்தார்கள்...!

நானும் கை அசைத்துக் கொண்டே..கார்த்தி சிதம்பரத்திடம் "யார் இவர்கள்?" என்றேன்.. "இவர்கள் எங்கள் ஊர் ஆச்சிமார்கள்" என்றார்.. வழக்கம் போல் பாதுகாப்பு வளையம் தாண்டி அவர்களுடன் கை குலுக்க மக்கள் கூட்டத்திற்குள் நுழைந்தேன்! பாட்டிகள் அத்தனை பேரும் மோடிகளாக மாறினர். நான் சட்டென திரும்பிவிட்டேன். கனவும் கலைந்தது.!



கற்பனை: த இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகல்யா. பிரான்ஸிஸ் கிளையின்

# சிலுவையேந்திகளின் கண்ணீர் உலா




என்ர பேர் பெயர் பாமினி. 2 பிள்ளையளோட முள்ளியவளையில தனிய இருக்கிறன். என்ர அவர் 2009 ஆம் ஆண்டு கடைசிச் சண்டை நடந்தஒட்டம் காணாமல் போட்டார். அதால வீட்டில சரியான கஷ்டம். பிள்ளையள் பசியோட இருக்க எந்தத் தாய்தான் பாத்துக் கொண்டிருப்பாள். பிள்ளையளுக்காக நான் முதல்ல கூலி வேலைக்குப் போனன். பிறகு 2013 ஆம் ஆண்டு 3ஆம் மாதம் முல்லைத்தீவில இருக்கிற பாங்க் (வங்கி) ஒன்டில 'கிளீன்' பண்ற வேலைக்கு போகத்துடங்கினன்.

அங்க 'பாங்'கை மட்டுமில்லாமல் மனேச்சரின் குவாட்டர்சையும் நான் தான் 'கிளீன்' பண்ணவேணும். ஆனால் மனேச்சர் விஸ்பா அவ்வளவு நல்லவரில்லை. என்னைத் தன்ர தேவைக்குப் பாவிக்கலாம் எண்ட எண்ணத்தோட அடிக்கடி என்னை உத்துப் பாப்பார். டபிள் மீனிங்கில கதைப்பார். ஆனா நான் உதுகளைக் காது குடுத்துக் கேக்கிறேலை. நானுண்டு, என்ர வேலையுண்டு எண்ட பாட்டில வந்திடுவன்.

ஒரு நாள் நான் அவற்ர றூமை கிளீன் பண்ணிக் கொண்டு நிக்கேக்க அவர் உள்ளுக்க திடீரெண்டு வந்துட்டார்.

"படம் பார்க்க போறீங்களா?" எண்டு கேட்டார்.நான் வழமையாக படம் பார்க்கிறனான். அதால் நானும் "ஓம் பாக்கிறன்" எண்டன். ஆனால் அவரோ ஆபாசப் படம்தான் போட்டு காட்டினார். நான் அதைப் பார்க்க மாட்டன் எண்டு முகத்தை திருப்பிக் கொண்டு வெளியால வர வெளிக்கிட்டன். ஆனால் அந்தப் படத்தைப் பாக்கச் சொல்லி அவர் என்ர கழுத்தைப் பிடிச்சுத் திருகினார். என்னோட பிழையா நடக்க வெளிக்கிட்டார். அவர் றூமையும் பூட்டிப்போட்டார். இனியும் விட்டால் பிழையெண்டிட்டு அவருக்கு அடிச்சுப் போட்டு, றூமை திறந்து கொண்டு வெளியால ஓடி வந்திட்டன். பிறகு நடந்ததையெல்லாம் எங்கட செக்சன் மனேச்சருக்குச் சொன்னன். அவர் எனக்கு நல்ல சப்போர்ட்டா இருந்தார். பிறகு என்ர பெரியப்பாவுக்கு நடந்ததைச் சொன்னன். ஏனெண்டா அவர் தான் என்னை அங்க வேலைக்குச் சேத்தவர். கதையைச் சொன்னவுடன அவர் மனேச்சருக்கு அடிக்க போட்டார். உடன மனேச்சர் கும்பிட்டு மண்டாடி "இனி இப்பிடிச் செய்யமாட்டன்" எண்டு மன்னிப்பும் கேட்டார். அதுக்கு பிறகு நானும் அவரை மன்னிச்சு விட்டிட்டன்.

அதுக்குப் பிறகும் நான் அங்க வேலை செய்தன்.ஆனா மனேச்சர் திருந்தினாபாடாத்தெரியேலை. பேந்தும் என்னோட மோசமா நடக்கத் தொடங்கிட்டார். "உனக்கு 5 லட்சம் தாறன். என்னோட வா" எண்டு ஒவ்வொரு நாளும் கேட்டு ஒரே ஆய்க்கினை. "நான் இப்பிடி உழைக்கிறதெண்டா வீட்டில இருந்தே உழைச்சிருப்பன். இப்பிடி கஷ்டப்பட்டு வேலைக்கெல்லாம் வந்திருக்க மாட்டன்" எண்டு நான் முஞ்சையில அடிச்ச மாதிரி சொல்லிப் போட்டு வந்திட்டன்.

"மனேச்சர் இன்னும் திருந்தேலை" எண்டு நான் செக்சன் மனேச்சரிட்ட சொன்னன். அதுக்கு பிறகு மனேச்சரின்ர குவாட்டர்ஸைக் கிளீன் பண்ணப் போகேக்கையோ இல்லாட்டி அவரிட்ட திறப்புக் குடுக்கப் போகேக்கையோ எனக்கு துணையா இன்னொரு ஆளையும் அனுப்பி வைப்பார். இதால மனேச்சர் சேட்டை விடுகிறேலை. பிறகு என்னவோ பெட்டிசம் போட்டு செக்சன் மனேச்சரை மாத்திட்டாங்கள்.

இனியும் பேசாமல் இருந்தால் ஒண்டுமே நடக்காது. அதால மனேச்சரின்ர திருகுதாளங்களையும் அவர் என்னோட பிழையாப் பழக வெளிக்கிடுறதையும் அங்க வேலை செய்யிற ஒரு பிள்ளைக்குச் சொன்னன். உடன அவா அந்த பாங்கின்ர கொழும்பு ஹெட் ஒப்பிசுக்கு அறிவிச்சா. உடனேயே மனேச்சரை கொழும்புக்கு மாத்திப் போட்டினம். ஆனா என்னையும் வேலையை விட்டு நிப்பாட்டி போட்டினம்.

எனக்கு ஆதரவா நடவடிக்கை எடுக்காட்டியும் பரவாயில்லை. கடைசியில என்னையெல்லோ பிழைகாரி ஆக்கிப்போட்டினம்.

"பிரச்சினை நடந்த உடன சொல்லாமல் ஒருமாதத்துக்கு பிறகு சொன்னது பிழை" எண்டிச்சினம்.

இனிமேல் இப்பிடிச் செய்யமாட்டன் எண்டு மனேச்சர் மன்னிப்புக் கேட்டதாலதான் நான் உடன் அறிவிக்கேலை எண்டு சொல்லிப்பாத்தன். என்ர கதையை ஒருத்தருமே காதில போடேலை.

**பிழை செய்த மனேச்சர் கொழும்பில சந்தோசமா இருக்க பாதிக்கப்பட்ட நானும் என்ர பிள்ளையளும் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் அலையிறம். அந்த மனேச்சரால இன்னும் எத்தினை பொம்பிளையளின்ர வாழ்க்கை அழியப்போகுதோ தெரியேலை. பசியைக் கூட ஓரளவுக்கு தாங்கலாம். ஆனா எங்கட சனம் சொல்ற வார்த்தையளைத்தான் தாங்க ஏலாமல் கிடக்கு.**

பிறகு என்னை 'பாங்'குக்கு வேலைக்கு அனுப்பின கிளீனிங் சேவிஸ் கொம்பனிக்கும் இது பற்றிச் சொன்னன். அவையும் ஒரு நடவடிக்கையும் எடுக்கேலை.

"உனக்கு வவுனியாவில வேலை எடுத்து தரலாம்" எண்டு சொல்லிச்சனம். ஆனா நான் மாட்டன் எண்டிட்டன். ஏனெண்டா நான் வேலைக்குச் சேரேக்கையே அவைக்கு சொன்னனான், "என்ர புருசனை ஆமி கொண்டு போட்டுது. என்ர பிள்ளையளுக்கு நான் மட்டுதான். அதால வெளியிடங்களுக்கு வேலை செய்யப் போக ஏலாது" எண்டு. பிறகு "கொஞ்சம் வெயிட் பண்ணு. இங்க எங்கையாவது எடுத்து தரலாம்" எண்டு சொல்லிப் போட்டு 2 மாதத்துக்கு 5 ஆயிரம் ரூபாப்படி தந்தாங்கள். அதுகூட என்ர சம்பளத்தில பிடிச்சு வைச்ச காசுதான். இப்ப அதுவும் இல்லை.

இவங்களை நம்பினால் பிரியோசனமில்லை எண்டு தெரிஞ்சு கன இடத்தில நானே வேலை கேட்டுத்திரிஞ்சன். ஆனா பாங்கில நடந்ததை அப்பிடியே பிரட்டி வேற மாதிரி அவைக்கு ஆரோ சொன்னதால ஒருத்தரும் வேலை தருகினமில்லை.

நான் என்ன பிழை விட்டனான். எனக்கு ஏன் இப்பிடித் தண்டனை?

பிழை செய்த மனேச்சர் கொழும்பில சந்தோசமா இருக்க பாதிக்கப்பட்ட நானும் என்ர பிள்ளையளும் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் அலையிறம். அந்த மனேச்சரால இன்னும் எத்தினை பொம்பிளையளின்ர வாழ்க்கை அழியப்போகுதோ தெரியேலை. பசியைக் கூட ஓரளவுக்கு தாங்கலாம். ஆனா எங்கட சனம் சொல்ற வார்த்தையளைத்தான் தாங்க ஏலாமல் கிடக்கு.

இவளுக்கு புருசனும் இல்லைத்தானே. இவளும் சேர்ந்து அவனோட போட்டு இப்ப நாடகமாடுறாள் எண்டு என்ர காதுபட வே கதைக்கிறாங்கள்.

என்னை மாதிரி வேலைக்குப் போற நிறையப் பொம்பிளையள் இப்பிடி நிறையப்பாதிக்கப்படுகினம். ஏற்கனவே சண்டையால சொந்தபந்தம்,சொத்து பத்து எண்டு எல்லாத்தையும் இழந்திட்டு நிக்கிறம். அதுக்குப் பிறகு உந்த ஆமிக்காரனிண்ட அரியண்டம். இதையெல்லாம் தாண்டி எங்கட பிள்ளையளுக்காக வேலைக்கு வெளிக்கிட்டால் எங்கட இன ஆம்பிளையளே எங்களை இப்பிடி பிழையாப் பாவிக்க நினைக்கினம். பெண்ணாகப் பிறந்தது நான் செய்த பாவமா????

---

# ஒண்டுமே இல்லை

கணரூபன்

வழக்கு நடந்து கொண்டிருந்தது.

"தபால்காரனத் திருவலகையால உயிர் போற அளவுக்கு அடிச்சிருக்கிறீர்!"

நீதிபதி குற்றவாளிக் கூண்டில நிண்டவரப் பாத்துக் கேக்க,

குற்றவாளி மௌனஞ் சாதிச்சான்.

கோர்ட்டில வழக்குப் பாக்க வந்த கும்பலுக்குள்ள நிண்டு ஆரோ ஒராள் கத்திச்சு,

"கள்ளன், வெறுங் கள்ளன்!"

பாத்தா அது எங்கட பங் கின்ர தேப்பன்.

"சைலன்ஸ்... இது கோர்ட்!" – உரத்த குரலில் சொன்ன நீதிபதி அடுத்த குற்றச்சாட்டை விளக்கினார்.

"வீட்டுக்கு வந்த பிச்சைக்காரனுக்கு மேல எலெக்ட்ரிக்கல் கேத்திலை எறிஞ்சிருக்கிறீர்!"

குற்றவளி இறுகிப் போய்ப் பேசாமல் நிற்க,

பங்கின் அப்பா மறுபடி கூப்பாடு போட்டார்.

"பச்சைக்கள்ளன்! எமனுக்கே ஏய்க்கிறளவுக்கு... அப்பிடிக்கொத்த ஏமாத்துக்காறன்!"

"சைலன்ஸ்... இதுகள் தவிர, வீட்டுக்கு நன்கொடை கேக்க வந்த குருளைச் சாரணியப் பெடியனுக்கு பாதாளக் கரண்டிய எறிஞ்சு, அவன் இப்ப ஐசீயூவில சாகக் கிடக்கிறான்."

பங்கின் அப்பா கொதிச்சுப் போய்க் கத்தினார்.

"புளுகு மூட்டையன்! திருட்டுக் கழுதை!!"

அதுக்கு மேல பொறுக்கேலாம நீதிபதியும் பதிலுக்குச் சன்னமாக் கத்தினார்.



"சைலன்ஸ், ஆரது சொல்லச் சொல்லக் கத்திறது.. இஞ்ச வழக்கு நடத்துறதோ வேண்டாமோ? உந்தக் கத்துறாள் ஒருக்கா இஞ்சால வாரும்!!"

பங்கின் அப்பா பவ்வியமா வெளிய வந்தார்; சொன்னார்.

"ஐயா, உந்தக் குற்றஞ் சாட்டப்பட்டவனும் நானும் இப்ப பதினேழு வருசமா பக்கத்து வீட்டுக்காரய்யா."

"அதுக்கு?!? ஏன் இப்பிடி விசர் பிடிச்ச மாதிரிப் பொய்யன், கள்ளன் எண்டு ஒவ்வொண்டுக்கும் கூப்பாடு போடுறீர்?? இப்பிடி ஏதும் குற்றச் சாட்டுகளிருந்தா அதுகளை முறைப்படி எல்லோ அணுகோணும். இப்பிடிக் கோர்ட்டில விசாரிக்கேக்க கண்டபடி கத்துறேல்ல, விளங்குதா..?"

"இல்லை ஐயா, எனக்கெண்டாச் சரியான கோவம் வந்திட்டுது. படு பொய்யனய்யா இவன்! பொய்யன்!"

கோவத்தில அவற்றை மூக்கு முத்தல் மிளகாய் மாதிரி சிவக்க,உடைஞ்ச குரலில தொடர்ந்து தழுதழுத்தார்.

"பின்ன என்னய்யா... இந்தப் பதினேழு வருசத்தில, உந்தச் சாமானுகள் இருந்தா ஒருக்காத் தாவன் எண்டு எத்தினை தரம் இவனிட்ட நான் இரவல் கேட்டிருப்பன்.அப்பவெல்லாம் ஒண்டுமே இல்லையெண்டிட்டு இப்ப....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவைத் திறந்தவன்

49

"ஆக மொத்தத்தில் உங்கள் தூதரகத்தில் நான் எவ்வளவு நேரம் நின்றாலும், அந்த தகவல் தெரிந்திருந்தாலும் கூட பிரிட்டன் பொலிஸோ, இராணுவமோ உள்ளே வர முடியாது. அப்படித்தானே" என்று பீடிகையோடு கேட்டான் யூலியன்.

தூதரக அதிகாரிகளும் அதை ஆமோதிப்பது போல தலையாட்டினார்கள்.

"சரி இன்னொரு கேள்வி. நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் உங்கள் தூதரகத்தினுள் நுழைந்தால் கூட பிரிட்டன் படைகள் உள்ளே நுழையமுடியாதா?" என்று தன் சந்தேகத்தை யூலியன் வெளிப்படுத்தினான்.

"இல்லை. எந்தவொரு தூதரக வளாகத்தினுள்ளும் அந்த நாட்டு தூதரக அதிகாரிகளின் உத்தரவின்றி பிரிட்டன் படைகள் ஒரு அடி கூட உள்ளே வைக்கமுடியாது" என்று ஈக்குவடோர் தூதரக அதிகாரி சொன்னார்.

"அப்படியானால் சரி. நான் இனிப்பயமில்லாமல் இருக்கலாம்" என்று அலட்சியமாகச் சொன்னான் யூலியன். தூதரக அதிகாரிகளுக்கு அவன் சொன்ன தன் அர்த்தம் என்னவென்றே புரியவில்லை. கேள்விக்குறியோடு யூலியனை நோக்கினார்கள்.


Hibbert

"என்னை சுவீடனுக்கு நாடு கடத்த பிரிட்டன் நீதிமன்றம் உத்தரவிட்டால் அடுத்த நொடியே நான் உங்கள் தூதரகத்துக்குள் தஞ்சம் புகுந்துவிட்டால் பிரிட்டன் என்ன செய்ய முடியும்?" இப்போதுதான் அவர்களுக்கு அவன் திட்டம் புரிந்தது. ஆனால் அதை அவர்கள் அவ்வளவு உவப்பான விடயமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

"நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் அதன் பின்னர் இது தனி மனிதப்பிரச்சினை என்பதற்கப்பால் இரு நாடுகளின் பிரச்சினையாக உருவெடுக்கக்கூடும். சிலவேளைகளில் எங்களுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான உறவைக் கூடத் துண்டிக்கும் நிலை ஏற்படலாம். அத்தோடு அவ்வாறு நீங்கள் தஞ்சமடைவதை எங்கள் நாட்டு அரசு அங்கீகரித்தால் மாத்திரமே அங்கு நீங்கள் தங்கமுடியும். எனவே இந்தத் திட்டம் ஒருபோதும் நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல"

முகத்தில் அடித்தால் போல ஒரு தூதரக அதிகாரி சொன்னபோதும், யூலியனின் முகம் வாட்டமடையவில்லை. இப்படி ஒரு வழி இருப்பதைக் கண்டுபிடித்தாயிற்று. இனி அந்த வழியால் பயணிக்கும் முறையைக் கண்டுபிடித்துவிட்டால் சரி. பிரிட்டன் நாடு கடத்துமோ என்று துளி கூட அஞ்சத்தேவையில்லை.

அதன் பின்னர் அந்தக் கதையைக் கிடப்பில் போட்டுவிட்டு விக்கிலீக்ஸின் அடுத்த கட்ட நகர்வு பற்றியும், அதன் பிரதான 'சேர்வரின்' பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும் அந்த அதிகாரிகளுடன் யூலியன் கலந்து பேசினான். அடுத்த கட்ட சந்திப்பு பற்றி முடிவெடுத்து விட்டு, யூலியன் அந்த அறையில் இருந்து வெளியே வந்தான். விடுதியில் கூட்டம் அதிகமாக இருந்தபடியால், வெளிச்சம் குறைந்த பகுதிகளூடாக அவன் வெளியேறுவது சுலபமாக இருந்தது.

விடுதியின் முகப்பில் இருந்த பொதுத் தொலைபேசியில் நாணயக்குற்றிகளைப் போட்டு, வோகன் ஸ்மித்தின் இலக்கங்களைச் சுழற்றினான். அடுத்த ஐந்தாவது நிமிடம் ஒரு வட்டமடித்து விடுதி வாசலில் கதவை விரித்து நின்றது வோகன் ஸ்மித்தின் கார். யூலியன் ஏறியதும் மீண்டும் பண்ணை வீடு நோக்கி கார் பறந்தது. வரும்போது இருந்ததை விடவும் அதிக சிந்தனையில் யூலியன் ஆழ்ந்திருந்தான். இதனை வோகனும் அவதானிக்கத்தவறவில்லை. அவனது சிந்தனையில் தலையிட வோகனுக்கு விருப்பமில்லை. எனவே காரில் ஒரு 'பொப்' பாடலை உரக்க இசைக்க விட்டவாறு காரைச் செலுத்தினார். கொஞ்ச நேரத்தின் பின்னர் அந்தக்காரில் நிலவிய மௌனவெளியை யூலியனே உடைத்தான்.

"வோகன்! தப்பிப்பதற்கான வழி கிடைத்துவிட்டது. ஆனால் அதைச் சாத்தியமாக்கும் வழிதான் தெரியவில்லை"

அதன் பின்னர் விடுதியில் தனக்கும் அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை விபரித்தான் யூலியன். அவன் சொல்வதை அவதானமாகக் கேட்டார் வோகன். அவருக்கும் அடுத்த கட்ட நகர்வு பற்றி யூலியனுக்கு யோசனை கூறமுடியாதிருந்தது. பண்ணைவீட்டுக்குள் நுழைந்ததும், விடு விடென்று தன் அறைக்குள் நுழைந்த யூலியன், மடிக் கணினியை எடுத்து உயிர்ப்பித்தான். பண்ணைவீட்டுக்கு வந்த பின்னர் யூலியன் வெளியுலகத் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்திருந்தான். தன்னோடு தொடர்பு கொள்பவர்களைப் பின் தொடர்ந்து ஏதாவது கண்ணுக்குத் தெரியாத வலையை அமெரிக்காவோ பிரிட்டனோ விரிக்கக் கூடுமென எதிர்பார்த்தான். அதனால் மடிக்கணினியைக் கூட அவன் தொடுவதில்லை. ஆனால் அதையெல்லாம் மறந்துபோனவனாக இப்போத மடிக்கணினியூடாக இணைய உலகில் நுழைந்தான். ஏனெனில் அந்த உலகில் அவன் தன் ராஜா. நீண்ட காலத்துக்கு பிறகு இணையத்தின் வழியே தன் கூட்டாளி களோடு தொடர்பு கொண்ட யூலியன் தன்னுடைய இறுதித்திட்டத்துக்கு அவர்களிடம் ஆலோசனைகளைக் கேட்டான். சில திட் டங்களைத்தீட்டினான். மீண்டும் ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க யூலியன் தயாராகிக் கொண்டிருந்தான்.

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

## கண்ணைக் குருடாக்கும் பாம்புகள்

பொதுவாக நல்ல பாம்புகள், மனிதனால் தமக்கு ஆபத்து ஏற்படப் போவதாகக் கருதினால் மனிதனைக் கொத்திவிடுகின்றன.ஆபிரிக்க நாடுகளில் வாழும் ஒருவகை கறுப்பு நாகப்பாம்புகள் (Black Spitting Cobra/விஷம் உமிழும் கறுப்பு நாகப்பாம்புகள்) கொத்துவதற்கு பதிலாக விஷத்தை கண்களை நோக்கி துப்பிவிடும். எதிரியுடன் எதிர்த்துச் சண்டையிடும்போது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வாயுள்ளிருந்து ஒரு வகை விஷத்தை எதிரியின் கண்களை நோக்கி பீய்ச்சுகின்றன.இந்த விஷம் கண்ணில் பட்ட உடனே கண் குருடாகிவிடும்.



**ஆபிரிக்க நாடுகளில் வாழும் விஷம் உமிழும் கறுப்பு நாகப்பாம்புகள் கொத்துவதற்கு பதிலாக விஷத்தை கண்களை நோக்கி பீய்ச்சுகின்றன.இந்த விஷம் கண்ணில் பட்ட உடனே கண் குருடாகிவிடும்.**

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாம்பு தப்பிவிடும்.இரையை ஏனைய பாம்புகளைப்போல் கடித்து உணவாக்கிக் கொண்டாலும்,சில வேளை இரை சவாலாக விளங்கும்போது இவ்வாறு விஷத்தை பீய்ச்சிக் கொல்கின்றன.இப்பாம்புகள் உணவாக தவளைகள்,சிறு முலையூட்டிகள் மற்றும் பறவைகளை உட்கொள்கின்றன.

இந்த விஷம் உமிழும் கறுப்பு நாக பாம்பினால் 2 மீற்றர் தூரத்திற்க்கு விஷத்தை பீய்ச்ச முடியும். இந்தப் பாம்புகள் 1.5 மீற்றர் நீளம் வரை வளரும்.ஜூன்,யூலை மாதங்களில் இணை சேரும் இந்தப்பாம்புகள், 6 தொடக்கம் 20 முட்டைகளை இட்டு 88 நாள்கள் அடைகாத்து குஞ்சு பொரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

பிள்ளைகளைப் பெற்று ஒரே குடும்ப வாழ்க்கை தொடங்க வேண்டும் என்பதற்காக நான் திருமணம் செய்ய வில்லை. வேரோடிப் போன வாழ்க்கை முறைகளோடு மக்கள் எந்தளவுக்கு ஆழ்ந்து போயிருந்தார்கள் என்பது என்னை மலைக்க வைத்தது. வெவ்வேறு விதமான வாழ்க்கைப் பாங்குகளை உலகம் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு முன்னேறியிருப்பதாக நான் நினைத் திருந்தேன். ஆனால் சமூக வரம்புகளுக்கு வெளியே வரும் போது தான் சமுதாயக் கண்ணோட்டங்கள் எவ்வளவு வேரூன்றி இருக் கின்றன என்பது தெரியும். நாம் சென்னையில் இருந்த போது பிள்ளை பெறுவது பற்றிப் போராளிகள் விசாரிக்கும் போது நான் அதைப் பொறுத்துக் கொண்டேன். திருமணம், தாய்மை ஆகிய வை தொடர்பான அவர்களுடைய கலாசார கருத்துகளே அவர்களது கேள்விகளில் பிரதிபலித்தன. மலட்டுத்தன்மை உடைய ஒருவர்,



விடுதலைப் போராட்டம் 30 பற்றிய ஒரு பதிவு

அதை மூடி மறைப்பதற்காக, பிள்ளை வேண்டாம் என்று கூறுவதாகக் கருதுவார்கள். இங்கிலாந்திலே வேலைத்தளத்திலே என்னோடு வேலை செய்பவர்கள் கூட திருமணமான ஒரு பெண்ணுக்கு தாய்மையே பிரதானமானது என்று நேருக்கு நேர் வாதிடுவதைப் பல தடவைகள் கேட்டிருக்கின்றேன். தாய்மையைத் தேர்ந்தெடுக்காது விட்டமைக்காக என்னில் ஏதோ குறைபாடு இருப்பதாகவும் சில பெண்கள் கருதினார்கள். சிலர் எடுத்த எடுப்பிலேயே பகைமை பாராட்டினார்கள். ஒரு சந்தர்ப்பம் நினைவுக்கு வருகின்றது. அப்போது மகப்பேறு தொடர்பான நான் இறுதி முடிவுக்கு வந்திருக்கவில்லை. நாலு ஐந்து பேர் ஒன்றாக கூடி இருந்து குழந்தைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந் தோம். "எனக்குக் குழந்தை இல்லை" என்று கூறினேன். உடனடியாக ஒருவர் குதித்து எழுந்தார். "குழந்தை பெறுவதை விட வேலை செய்து பணம் சம்பாதிக்க முயலும் பேராசை கொண்ட ஒரு சுய நலவாதி" என்று என்னைத் திட்டினார். வேறு சிலரும் அவரை ஆதரித்தார்கள். நாம் ஒட்டாண்டிகள் என்பதும், கையிலே பணம் புழங்கி னால் நான் இரவு வேலைக்குச் சென்றிருக்க மாட்டேன் என்பதும் அவர் களுக்குத் தெரியாது. இத்தகைய ஈவிரக்கமற்ற கண்டனங்கள் என்னைத் திகைக்க வைத்தன.

மற்றவர்கள் என்னைப்பற்றி கொண்டிருந்த கருத்துப் பற்றிச் சிந்திக்க வைத்தன. அவர்களுடைய கண்டனம் சரிதானா என்று என்னையே நான் கேட்டுக் கொண் டேன். ஆனாலும் எனது முடிவை அவர்களுடைய பாதிக்க வில்லை. எனது தொழில் அனுபவம் காரணமாக தாய்மை நோக் கோடு, பிரசவம் ஆகியவை தொடர்பாக நீண்ட நாட்களாக நான் உயர்ந்த எண்ணம் கொண்டிருக்கவில்லை. இருபத்தியொரு வயதில் மகிழ்ச்சியுடனேயே இளம் மருத்து விச்சியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன்.

(பதிவு தொடரும்)



16.04.2014 -22.04.2014

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

உற்சாகமான வாரம். உங்கள் முயற்சிகள் சரியான பாதையில் செல்லும். வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரும். சமூகத்தில் பெரியவர்களைச் சந்திப்பீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் ஒத்துழைப்புடன் நடந்து கொள்வீர்கள். அவர்களின் பாராட்டுக்களைப் பெற்று கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வர். வியாபாரிகள் புதிய முதலீடுகளில் ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த ஒத்துழைப்பைப் பெறுவீர்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிக்கும். பழைய கடன்கள் அனைத்தும் வசூலாகும். மாணவமணிகள் படிப்பிலும் விளையாட்டிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோர்களின் ஆதரவுடன் கோரிக்கைகள் நிறைவேறும்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

திருப்திகரமான வாரம். பொருளாதார வளம் உயரும். புதிய திட்டங்களைத் தீட்டி செய்தொழிலை மேன்மையடையச் செய்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவும், நட்பும் கிடைக்கும். வியாபாரிகள் நல்ல லாபத்தை அடைவீர்கள். புதிய விற்பனை முறைகளைப் புகுத்தி, பொருட்களின் விற்பனையைப் பல மடங்கு பெருக்குவீர்கள். விவசாயிகளுக்கு வருமானம் உயரும். சந்தையில் நிலவும் போட்டிகளைச் சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள். பெண்மணிகளுக்கு குடும்பத்தினரிடம் அன்பும், பாசமும் அதிகரிக்கும். மாணவமணிகளின் விருப்பத்தை பெற்றோர் நிறைவேற்றுவர். ஆசிரியர்களும் அனுகூலமாக இருப்பார்கள்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சந்தோஷமான வாரம். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி வாகை சூடுவீர்கள். பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். மேலதிகாரிகள் உங்களுக்குப் பக்க பலமாக இருப்பார்கள். வியாபாரிகளுக்கு பொருட்களின் விற்பனை நல்ல முறையில் நடக்கும். அதனால் புதிய சந்தைகளை நாடிச் செல்வீர்கள். விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் கிடைக்கும். அதனால் புதிய வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பெண்மணிகளுக்கு கணவருடனான ஒற்றுமை நன்றாக இருக்கும். மாணவமணிகள் கல்வியில் முன்னேறுவதற்கு அதிக உழைக்க வேண்டியிருக்கும்.

**கடகம்**

பொருளாதார நிலைமை சீராக இருக்கும். நண்பர்களை ஆலோசித்து முடிவெடுக்கவும். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்துச் செய்யவும். தெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள். தேவைக்கேற்ற பணவரவு கிடைத்துவிடும். அரசியல்வாதிகள் எடுத்த காரியங்கள் அனைத்தையும் சுலபமாக முடித்துவிடுவீர்கள். அதனால் கட்சியில் முக்கியப் பொறுப்புகளைப் பெறுவீர்கள். கலைத்துறையினர் பல தடைகளைத் தாண்டி புதிய ஒப்பந்தங்களைச் செய்வீர்கள். பெண்மணிகள் உறவினர்களை அரவணைத்துச் செல்லுங்கள். மாணவமணிகளின் கோரிக்கைகள் நிறைவேறும். தேவையில்லாத பிரச்னைகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

மகிழ்ச்சிகரமான வாரம். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் தடையின்றி வந்து கொண்டிருக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லவும். வியாபாரிகள் புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும். கூட்டாளிகளே உங்களுக்குப் போட்டியாக இருப்பார்கள். விவசாயிகளுக்கு கொள்முதல் சற்று மந்தமாக இருக்கும். கால்நடைகளின் பராமரிப்புச் செலவுகளும் கூடும். மாணவமணிகள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தவும். நண்பர்களிடம் எச்சரிக்கையுடன் பழகவும்.

**கன்னி**

எதிர்கால வாழ்வின் லட்சியங்களை உணர்ந்து செயல்படுவது, ஊக்கம் பெற உதவும். பொது இடங்களில் நடக்கும் நிகழ்வுகளை, அதிக நேரம் வேடிக்கை பார்க்க வேண்டாம். வாகனத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்வதால், பயணமுறை எளிதாகும். சேமிப்பு பணம், அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களை விமர்சிக்க வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணச் செலவுகளை சிக்கனமாக மேற்கொள்வது நல்லது. பெண்கள், சமையலறைப் பணிகளில் கவனமுடன் ஈ[illegible] வேண்டும். மாணவர்கள், ஆசிரியரின் வழிகாட்டுதலை முறையாக பின்பற்றுவதால், தேர்ச்சி விகிதம் சீராகும்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

நண்பர்களின் உதவியால் வாழ்வில் சில நன்மை பெறுவீர்கள். மனதில் இருந்த அவநம்பிக்கை விலகும். வாகன பயன்பாடு, சராசரி அளவில் இருக்கும். மகளின் ஜாதகயோக பலன், புதிய சொத்து வாங்குவதற்கு உதவியாக இருக்கும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். பணியாளர்களுக்கு, கூடுதல் வேலை வாய்ப்பு, சன்மான உயர்வு கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் எதிர்கால நலன் சிறக்க, தேவையான பணி மேற்கொள்வர். மாணவர்கள், நண்பர்களிடம் படிப்பு தவிர, பிற விஷயத்தில் விவாதம் வேண்டாம்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

எவரிடமும் நிதானித்து பேசி, நற்பெயரை பாதுகாத்திடுவீர்கள். குடும்பத்தில் சுப மங்கல நிகழ்வு உருவாகும். உறவினர்களிடம் உங்கள் மீதான அன்பு, பாசம் அதிகரித்து கேட்ட உதவி கிடைக்கும். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் ஏற்படும். புத்திரரின் மனக்குறையை கனிந்த மனதுடன் சரி செய்வீர்கள். எதிரியால் தொல்லை அணுகாத சமூக வாழ்வு பெறுவீர்கள். இல்லறத்துணை, உங்களின் அரிய செயல்களை மனமுவந்து பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். அரசு தொடர்பான உதவி பெறலாம். பணியாளர்கள் பணி இலக்கை குறித்த காலத்தில் நிறைவேற்றுவர்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

வீடு, வாகனத்தில் உரிய பயன்பாட்டு வசதி கிடைக்கும். புத்திரரின் உடல்நலத்திற்கு சிறுஅளவில், மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பகைவரிடம் விலகுவதால், சிரமம் எதிர்வராமல் தவிர்க்கலாம். இல்லறத்துணை நல் ஆலோசனை வழங்கி, உங்களின் செயல் பரிமளிக்க உதவுவார். தொழில், வியாபாரத்தில் போட்டியை திறம்பட சமாளிப்பீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம், கூடுதல் அக்கறையுடன் பின்பற்ற வேண்டும். பெண்கள், குடும்ப பணவசதிக்கேற்ப ஆடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள்,

**மகரம்**

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் சொல்லுக்கு மரியாதை தருபவர்களிடம் மட்டும், சரளமாக கருத்துகளை பகிர்ந்து கொள்ளலாம். அறிமுகம் இல்லாத பெண்ணுக்கு உதவுவதால், சிரமம் வரலாம். கவனம் தேவை. குடும்ப உறுப்பினர்களிடம் ஒற்றுமை வளரும். புத்திரர், தகுதி, திறமையில் முன்னேற்றம் அடைவர். சொத்து தொடர்பான ஆவணம், கவனமுடன் பாதுகாக்க வேண்டும். இல்லறத்துணை உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். பெண்கள், சேமிப்பு பணத்தை குடும்பத்தின் சிறுசெலவுகளுக்காக பயன்படுத்துவர். மாணவர்கள், புதியவரை நண்பராக கருதி, பழகுவதில் நிதானம் வேண்டும்.

**கும்பம்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

தன்னிடம் பழகுபவர்களின் ஆடம்பர செயல்களை பார்த்து, தாமும் அதுபோல பின்பற்ற விரும்புவீர்கள். இதனால், சிலரது விமர்சனத்தை எதிர்கொள்ள நேரிடலாம். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். புத்திரர், நண்பருக்கு இணையாக உங்களிடம் சகஜமாக பழகுவார். நிர்பந்த பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணை, கூடுதல் அன்பு, பாசம் மனதில் உற்சாகம் தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதிய திட்டம் உருவாக்குவீர்கள்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உங்களை அவமதித்து பேசுபவரிடம் விலகுவது நல்லது. தங்கையின் கூடுதல் அன்பு, பாசம் மனதிற்கு ஆறுதலாக அமையும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு பின்பற்றவும். புத்திரர் விரும்பிய உணவு வகை வாங்கித் தருவீர்கள். கண் தொடர்பான பிணிக்கு, உடனடி மருத்துவ சிகிச்சை நன்மை தரும். இல்லறத்துணை, தன் கடமை உணர்ந்து செயல்படுவார். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில், அரசின் சட்டதிட்டம் மதித்து செயல்பட வேண்டும். இயந்திர தொழிற்சாலை பணியாளர் பாதுகாப்பு முறை, தவறாமல் பின்பற்றவும். பெண்கள், கணவரின் வாழ்வியல் சிரமம் [illegible]. மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை குறைத்தால், படிப்பில் கவனம் வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயத் தீவில் மந்திரக் கிழவி

47



ஆயினும் மந்திரக்கிழவி அசைந்து கொடுத்தாளில்லை. அவள்முகம் இன்னும் உறுதியாகத் தென்பட்டது.

“சிறுபயல்களே! இந்தத் தீவு முற்று முழுதாக எனது மந்திர வலிமையால் உண்டாக்கப்பட்டது. ஆகவே நீங்கள் மாயப்புகையில் இருந்து தப்பினாலும் எப்படியும் உங்களைப்பலி கொடுத்தே தீருவேன்'' என்று கர்ச்சித்தாள். அத்தோடு அவள் ஏதோ ஒரு சுலோகத்தை ஆத்திரத்தோடு உச்சரித்தாள். அவளது மந்திர வார்த்தைகளின் பலனாக மாயத்தீவில் கட்டப்பட்டிருந்த கட்டடங்கள் எல்லாம் உயிர் பெற்றவை போல பேருருவம் கொண்டு நகரத் தொடங்கின. மாயத் தீவின் நடுவே ஓடிக்கொண்டிருந்த இரத்த ஆற்றில் இருந்து ‘உஸ்' எளஞுன்று சத்தம் இட்டவாறு பெரிய பெரிய பாம்புகள் நெளிந்தபடி இளவரசர்களை நோக்கி விரைந்தன. மேலும் விநோத உருவம் கொண்ட இராட்சத பறவைகள் உடலைச் சில்லிட வைக்கும் குரலை எழுப்பிய படி கொலை வெறியோடு மந்திரத் தீவில் வட்டமிடத் தொடங்கின. வெறி பிடித்தவை போல மந்திரத்தீவைச் சுற்றிலும் பேரலைகள் ஏற்படத் தொடங்கின. இளவரசர்கள் இருவரும் ஏறியிருந்த சிறு மலையும் பயங்கரமாக நடுங்கத் தொடங்கியது. எல்லாத் திசைகளிலும் நெருப்புக் கோளங்கள் இளவரசர்களைக் குறி வைத்து வந்துவீழத் தொடங்கின.

''இந்திரவர்மா! மந்திரக்கிழவி தன்னுடைய முழுச்சக்தியையும் ஒரே நேரத்தில் பிரயோகித்து விட்டார். தனைமுறியடித்து அவளிடம் சிக்கியுள்ள எல்லோரையும் காப்பாற்ற வேண்டும்'' என்று சந்திரவர்மன் கூறினான். அதற்கு மேல் அங்கு நிற்க மனமில்லாதவனாக மந்திரக் கிழவியை நோக்கி வாளை ஓங்கிக் கொண்டு ஓடினான் இந்திர வர்மன். ஆனால்.....

*(மந்திரக் கிழவி வருவாள்)*

# மயில்



குட்டிக்கவிதை

அழகுக் கொண்டை மயில்
பளபளக்கும் கண்ணு மயில்
நீளக் கழுத்து மயில்
நீண்ட தோகை மயில்
கொத்தி உண்ணும் மயில்
கத்தி உலாவும் மயில்
தத்தி நடக்கும் மயில்
தாவிப் பறக்கும் மயில்!

## விலங்குகளும் அவற்றின் ஆயுட்காலமும்

| விலங்குகள் | | ஆயுட்காலம் |
|---|---|---|
| ■ சிம்பன்சி | - | 41வருடம் |
| ■ பெருங்கரடி | - | 20வருடம் |
| ■ தீக்கோழி | - | 50வருடம் |
| ■ பெங்குயின் | - | 22வருடம் |
| ■ திமிங்கிலம் | - | 22வருடம் |
| ■ கடலாமை | - | 200வருடம் |
| ■ வரிக்குதிரை | - | 22வருடம் |
| ■ அணில் | - | 82வருடம் |
| ■ செம்மறி ஆடு | - | 16 வருடம் |

குட்டிக்கதை



## தியானமும் தூக்கமும்

மாணவர்கள் மத்தியில் உரை யாற்றிக் கொண்டிருந்தார் சுவாமி விவேகானந்தர். “அரை மணி நேரம் தியானம் செய்தால் ஆறு மணி நேரம் தூங்குவதற்குச் சமம்” என்றார்.

சட்டென்று எழுந்த மாணவன் ஒருவன், “அப்படியெனில், ஆறு மணி நேரம் தூங்கினால் அரை மணி நேரம் தியாணம் செய்வதற்குச் சமமா?” என்று கேட்டான்.

சுவாமி விவேகானந்தர் புன்னகையுடன் பதிலளித்தார்...

“முட்டாள் ஒருவன் தியானம் செய்தால் அறிவாளியாக முடியும். ஆனால் அறிவாளி ஒருவன் தூங்கத் தொடங்கினால் முட்டாளாகி விடுவான்!”




## விடுகதைகளும் விடைகளும்

*01.* குண்டுக் குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்தே இருக்கும். அவன் யார்?
-கத்தரிக்காய்-

*02.* காற்று நுழைந்ததும் கானம் பாடுகிறான். அவன் யார்?
-புல்லாங்குழல்.

*03.* ஓட்டம் நின்றால் போதும் ஆட்டம் நின்று போகும். அது என்ன?
-இரத்தம்-

*04.* தனித்து உண்ணமுடியாது என்றாலும் இது சேர்த்தால் தான் உணவுக்கு சுவை. அது என்ன?
-உப்பு-

*05.* வெட்டிக்கொள்வான். ஆனாலும் ஒட்டிக்கொள்வான். அவன் யார்?
-கத்தரிக்கோல்-

*06.* ஓடியாடி வேலை செய்தபின் மூலையில் ஒதுங்கிக்கிடப்பாள். அவள் யார்?
-துடைப்பம்(தும்புத்தடி).

## தெரிந்து கொள்ளுங்கள்

| கேள்வி | விடை |
|---|---|
| 01. பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் விலங்கு எது? | ஒட்டகம் |
| 02. தோலில் நச்சுச் சுரப்பிகள் உள்ள விலங்கு எது? | தேரை |
| 03. கண்களுக்கு மேல் இமை இல்லாத உயிரினம் எது? | பாம்பு |
| 04. நீந்தத் தெரியாத மிருகம் எது? | ஒட்டகம் |
| 05. எந்த உயிரினம் தூக்கத்தில் இருக்கும் போது ஒரு கண் திறந்திருக்குமாம்? | டொல்பின் |
| 06. சிரிக்கத் தெரிந்த படைப்பு எது? | மனிதன் |
| 07. மூக்கில் பல் உள்ள விலங்கு எது? | முதலை |
| 08. சிரிக்கும் போது நமது உடலில் எத்தனை தசை நார்கள் இயங்குகின்றன? | 17 தசை நார்கள் |
| 09 கோபப்படும் போது நமது உடலில் எத்தனை தஸ்சை நார்கள் இயங்குகின்றன? | 43 தசை நார்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக்கோடுகள் அடர்த்தியாக வரையப்பட்ட சாரமும் வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தான். சன நெரிசலை விலக்கி வந்து கொண்டிருந்தவன் தனது நடையின் வேகத்தைக் கூட்டி ஓடிவரத் தொடங்கினான். கையில் ஒரு பை. அதனுள் எதையோ வைத்துக் காவிக்கொண்டு ஓடிவந்தான். அவளைப் பெயர் சொல்லி அழைத்தான். கையில் இருந்த பையிலிருந்து ஒரு அழகான பெட்டியை அவளிடம் நீட்டினான். "இது உன்னுடைய மகனுக்காக நான் எடுத்து வைச்சிருந்தனான். இத அவனிட்டைக் குடு மாமா தந்தனெண்டு....!"

அவன் கொடுத்த பெட்டி தவறி கீழே தேடினாள்.

அப்படியேதும் இருக்கவில்லை. ஆனால் நினைவுகளில் இருந்து மறந்து போனவன் ஏன் இன்று கனவில் வந்து சில்லறைக்காசுகளை அவளது மகனுக்காக கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான். பெரும் குழப்பமாகவே இருந்தது. கனவுகளுக்கு காரணங்கள் ஆயிரம் சொல்லப்பட்டாலும் இதுவரை கனவுகள் பற்றி எவரும் சரியான ஆய்வை காணாமல் இருப்பது பற்றி அந்த நேரம் யோசித்தாள்.

இப்போது கனவுகளை யாருடனும் பகிர்ந்து கொள்வதில்லை. கனவுகளைப் பகிர்ந்து கொண்டால் அது பலிக்காதென்று சொல்வதை நம்பி பலமுறை தனது கனவுகளை பகிரப்போய் எல்லோரிடமும் போவாள். பனைவடலிகளைத் தாண்டிப் போகும் போதெல்லாம் அவனே துணையாக வந்திருக்கிறான். பின்னர் அவனது கடைசித் தங்கையுடன் சேர்ந்து போகும் போது அவனும் கூடவே அவர்களோடு சைக்கிளில் வருவான்.

அதிகம் கதைக்க வேண்டிய தேவைகள் இல்லாது போனாலும் அவன் தங்கைக்கு காவலனாக வரும் போது அவளுக்கும் காவலாயே வருவான். வெள்ளி , செவ்வாய்க்கிழமைகளில் வைரவர் கோவிலில் பஜனை பாடும் போதும் அவன் வருவான். நெற்றியில் விபூதியும் சந்தனமும் வைத்து அமைதியாக வைரவரை வழிபடுவான். சரஸ்வதி பூசைக்கு பேச்சுப்போட்டி , தேவார மனனப்போட்டி காணாமற்போய்விட்டான். பொறுப்பாளராக உயர்ந்து ஓமந்தையில் நிற்கிறான் எனச் சொன்னார்கள்.

***

காலநதியில் எழுதப்பட்ட கதைகள் பல அவை கண்ணீராலும் எழுதப்பட்டு கரைந்து கொண்டேயிருந்தது. அவள் நாட்டைவிட்டுப் பிரிந்தாள். திருமணம் குழந்தைகள் என வாழ்வு மாறிப்போனது. அவன் நடந்த களத்திலிருந்து தூரமாகினாள்.

இடையில் களங்கள் இறுகி தொடர்புகள் அறுந்து உறவுகள் அயல் எல்லாம் எங்கெங்கோ பிரிந்து போனார்கள். அவனும் நினைவுகளிலிருந்து மறந்து போகாமல் பல தோழர்களின் நினைவுகளோடு

# காணாமற்போனவர்கள்

விழுந்தது. அதனுள் சில்லறைக்காசுகள். நிலத்தில் சிதறிய காசுகளைப் பொறுக்கிப் பெட்டியில் பத்திரப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தாள். பச்சையுடையுடுத்த சட்டித் தொப்பியணிந்தவர்கள் அவனைச் சூழ்ந்தார்கள். பாதணி அணியப்படாத வெறும் காலோடு சகதி நிறைந்த ஆற்றுநீரில் இறங்கினான். ஆற்று நீர் அவனை தன் மெல்லிய கால்களோடு இழுத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தது.

அவன் பெயரைச் சொல்லிக் கத்தியழுதாள். சிரித்தபடி அவளிடம் வந்தவன் இரத்தம் வழிய ஆற்றோடு அடிபட்டு இழுபட்டுப் போய்க்கொண்டிருந்தான். மெல்லென ஓடிக்கொண்டிருந்த ஆற்று நீரில் அவனது குருதியும் கலந்தோடியது. ஆற்றோடு இழுபடும் அவனை நோக்கிக் கைகளை நீட்டியழுதாள் அவன் கண்ணிலிருந்து விடுபட்டுத் தொலைவாகிக் கொண்டிருந்தான்......!

அவசரமாக எழுந்தாள். சே...கனவு....! உறங்கிக் கொண்டிருந்த மகனின் அறையைத் திறந்து மின் விளக்கைப் போட்டாள். "என்னம்மா...?" நித்திரைத் தூக்கத்தில் கேட்டான் மகன். "சரி படுங்கோ செல்லம்....!" சொல்லிவிட்டுத் தன் கட்டிலில் வந்து மீண்டும் சரிந்தாள். ஆனால் அந்தக் கனவில் சிரித்தபடி வந்தவன் இரத்தம் கலந்து ஆற்றோடு அடிபட்டுப் போனது மனசுக்குள் ஏதோ அந்தரிப்பாயிருந்தது. திரும்ப நித்திரை வர மறுத்தது. மனசுக்குள் ஏதோ அந்தரிப்பாயிருந்தது.

2009இன் பின்னர் அனேகமான கனவுகள் இப்படித்தான். காணாமற் போனோர் முகங்களும் கடைசியாக சிரித்தபடி விடை தந்து போனோருமே நிறையும் கனவுகளாகியிருக்கிறார்கள். அவர்கள் பிரிவும் , துயரங்களும் கனவுகளையும் நிம்மதியாக விடாமல் துரத்திக் கொண்டிருக்கின்றன.

இன்றைய கனவில் வந்தவனும் 2009இல் காணமற்போனவன். இந்த 5வருடத்தில் ஒருமுறையும் கனவில் வராதவன் இன்று வந்து போயிருக்கிறான். சிலவேளை எங்கேனும் இருப்பானோ ? கைபேசித் திரையைத் தட்டி இணையத்தில் உலாவத் தொடங்கினாள். அவனது பெயரை கூகிளில் அடித்துப் பார்த்தாள். ஏதாவது செய்திகள் அண்மையில் வந்ததோ என நன்றாக வேண்டிக்கட்டியிருக்கிறாள்.

"ஒன்டையே ஒரே நினைச்சுக் கொண்டிருந்தால் கனவும் அதுதான்" வரும்....! "எல்லோரும் சொல்வார்கள். அதனால் கனவுகளை யாரோடும் பகிர்ந்து கொள்ளாமல் அந்தக் கனவிலிருந்து விடுபடும் வரையும் அமைதியின்றி அலைவாள். மௌனமாக நினைவுகளோடு

> **அவனது உயிர்
> இன்று அல்லது நாளை
> போய்விடும் போல
> அவனது கடமை
> அமைந்து அவன்
> களத்தில் நின்றான்.
> எங்காவது
> எதேச்சையாக
> காணும் நேரங்களில்
> ஒரு சிரிப்பு
> அவ்வளவுதான்
> அதற்கு மேல்
> எதுவுமில்லை.**

கரைதலும் பின்னர் மீள எழுதலுமே வழமையாகிப் போனது.

ooo ooo ooo

அவனும் அவளும் ஒரே ஊரில் பிறந்திருந்தார்கள். அவன் அப்பா அவளது தாய்வழி உறவு. மாமா என்ற மதிப்போடு அவனது அப்பா அவள் வீட்டுக்கு வந்து போகும் போதெல்லாம் அவனைப் பற்றி ஏதாவது சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டேயிருப்பார். அவன் க.பொ.த.சாதாரணதரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கணித பிரிவில் உயர்தரத்தை ஆரம்பித்திருந்தான். அவனிலும் 2 வயதால் இளைய அவள் அவனது கடைசித் தங்கையுடன் படித்துக் கொண்டிருந்தாள்.

ஆண்களும் பெண்களும் கலந்து படித்த பாடசாலைக்கு அவள் ஆறாம் வகுப்பில் இணைந்த போது அவனும் கூடவே வருவான். மதியம் பேயுலாவும் என்று நம்பிய புளியமரத்தடியை அவன் வரும் துணிவோடு பயமில்லாமல் கடந்து எல்லாவற்றிலும் அவனும் கலப்பான். ஆளாளுக்கு போட்டி போட்டு பரிசை வெல்வார்கள்.

எதுவென்று பிரித்தறிய முடியாத உறவிணைப்பு. அவன் வீட்டு வளவில் காய்க்கும் நெல்லிக்காய் , கொய்யாக்காயிலிருந்து எல்லாமே அவன் எல்லோருக்கும் பங்கிடுவான். சிறுவயது மகிழ்ச்சிக் காலங்களில் அவனோடு சேர்ந்து கிளிக்கோடு மறித்தது தொடக்கம் எட்டுப்பாத்தி , மாங்கோடு , கப்பல் கோடு வரையும் போட்டி எப்போதுமே அவனுடன் இருந்து கொண்டேயிருந்தது.

உயர்தரம் கணிதப் பிரிவில் படிக்க ஆரம்பித்து சில மாதங்களில் அவன் ஊரிலிருந்து காணாமற்போனான். அது இந்திய இராணுவம் வெளியேறிய காலம். அவனுடைய அப்பா அவள் வீட்டில் வந்து போகும் நேரமெல்லாம் கண்கள் பனிக்க அவனைப் பற்றிச் சொல்லுவார். "என்ன குறைவிட்டனான் ? ஏன் இப்பிடிச் செய்திட்டுப் போனவன் ?" அவரது கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் அவளது அம்மாவுக்குச் சொல்லுவார்.... "அவன் ஒரு பெரிய ஆளா வருவனெண்டு தான் படிப்பிச்சன்...ஆனால் அவருக்கு நாடு பெரிசெண்டு போயிட்டார்....!"

அந்த அப்பாவின் வலியின் கொடுமை அவளுக்கு அப்போது புரிந்ததில்லை. ஆனால் அவனைப் பற்றி பெருமையாக இருந்தது. மனசில் சின்ன நெருடல் அவ்வப்போது இருந்தாலும் அவன் ஒருநாள் துவக்கோடு ஊரில் வந்து வரிச்சீருடையுடன் அவளையும் தாண்டி மோட்டார் சைக்கிளில் போன போது ஏனோ இனம்புரியாத துயரம் மனசை நெருக்கியது.

அவனது உயிர் இன்று அல்லது நாளை போய்விடும் போல அவனது கடமை அமைந்து அவன் களத்தில் நின்றான். எங்காவது எதேச்சையாக காணும் நேரங்களில் ஒரு சிரிப்பு – அவ்வளவுதான்– அதற்கு மேல் எதுவுமில்லை. அவனை உறவென்று சொல்லிக் கொள்வதில் ஒருவகை பெருமிதம்.

1990 மேலும் ஊரிலிருந்து ஆண்கள், பெண்கள் காணாமற்போனார்கள். அவன் போன கடுமையான பயணத்தில் பலர் இணைந்தார்கள். மீண்டும் இடப்பெயர்வு , குண்டுச் சத்தங்கள் , மரணங்கள். அவலத்தின் பொழுதுகள். அவன் பிறகு அவ்வப்போது நினைவுகளோடு வந்து போயிருக்கிறான். உறவொன்றைச் சந்தித்த போது அவனைப் பற்றி விசாரித்தாள். அவன் ஒரு தளபதியாக தகுதிநிலை உயர்ந்தானென்று தகவல் சொன்னார்கள். ஒரு பெண் போராளியைத் திருமணமும் செய்தானென்றும் சொன்னார்கள்.

காலம் 2002.....,மீண்டும் தாயகப்பயணம் போன போது அவனது கடைசித் தங்கையைத் தேடிப்பிடித்தாள். முல்லைத்தீவில் ஒரு அழகான தென்னந்தோப்பு வளவில் குடியிருந்தார்கள். "அண்ணா என்ன செய்றான்?" கேட்ட போது அவனது சின்னத்தங்கை அவனைப் பற்றிச் சொன்னாள். சந்திக்கக் கூடிய இடத்தில் அவன் அப்போது இல்லையென்றார்கள். மீண்டும் 2003இ பிள்ளைகளோடு போன போது கிளிநொச்சியில் அவன் அரசியல் அலுவலகத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக்கால அவசரங்களோடு அவனும் அலுவலாகியிருப்பதாக சொன்னார்கள்.

ஒருநாள் அறிவமுது புத்தகசாலையில் அவள் புத்தங்கள் வாங்கப் போயிருந்தாள். பலர் புத்தகக் கடைக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவள் ஒவ்வொரு புத்ததங்களையும் பார்த்துப் பார்த்து "அது வேணும். இது வேணும்" என எடுத்துக் கொண்டிருந்தாள். என் னக்கா கடை போடப்போறியளோ?" புத்தகக் கடையில் நின்ற தம்பியொருவன் கேட்டான்.

மேலும் சிலர் வந்தார்கள். அவள் புத்தங்களை பார்த்துப் பார்த்து எடுத்துக் கொண்டிருந்தாள். "பலசரக்குக் கடைக்கு சீனிச்சரை சுத்தவோ உவ்வளவு புத்தகமும்?" ஒருவன் சொன்னது கேட்டது. திரும்பிப் பார்த்த போது அவன் தனது முகத்தைக் காட்டாமல் மறுபக்கம் திரும்பி நின்றான். இடுப்பில் பெலிற் கட்டி பிஸ்ரல் செருகியிருந்தான். பிஸ்ரல் கட்டிய ஒருவர் "சீனிச்சரை சுத்தவோ புத்தகங்கள்?" என்றது சட்டென கோபத்தைக் கொடுத்தாலும் அதை வெளிக்காட்டாமல் புத்தகங்களை எடுத்தாள்.

பிள்ளைகள் வெளியில் ஐஸ்கிறீம் வாகனத்தைக் கண்டதும் ஐஸ்கிறீம் வேணுமென அடம்பிடித்தார்கள். பிள்ளைகளுடன் அவளுக்கு உதவியாக வந்திருந்த தம்பியிடம் சொன்னாள். "தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி வர வேண்டாம்

சாந்தி ரமேஷ் வவுனியன்

ரெண்டு பேருக்கும் ஐஸ்கிறீம் வேண்டிக் குடுக்கிறீங்களே நான் புத்தகத்தை எடுத்திட்டு வாறன். "ஓமக்கா...." என்றவன் "வாங்கோ நாங்கள் ஐஸ்கிறீம் வாங்குவம்" என பிள்ளைகளை கூட்டிக் கொண்டு தெருவுக்குப் போனான்.

123புத்தகங்களை கொள்வனவு செய்து கொண்டு வெளியில் வந்தாள். பிள்ளைகள் ஐஸ்கிறீமும் கைகளில் விளையாட்டுப் பொருட்கள் சிலவற்றையும் வைத்துக் கொண்டு தம்பியுடன் நின்றார்கள். அரசியல்துறை அண்ணையொராள் வந்தவர் பிள்ளையளுக்கு ஐஸ்கிறீமும் விளையாட்டுச் சாமானுகளும் வாங்கிக் குடுத்திட்டு போறார் என்றான். உங்கடை ஊராம் உங்களைத் தெரியுமாமெண்டு சொன்னவர். பிள்ளையளுக்கு தான் மாமாவெண்டு சொல்லி உதெல்லாம் வேண்டிக் குடுத்தவர்."

தம்பி சொல்லியும் அது யாரென்பது புரியவில்லை. அவனை நினைவும் வரவில்லை. வீடு போன பின்னர் தம்பியிடம் அவனது பெயரை விசாரித்ததில் அவன் நினைவில் வந்தான். "சமாதான செயலகத்தில சொல்லிவிட்டால் ஆளைப் பாக்கலாமக்கா...!"

அண்மையாக சந்தித்தவன் பேசாமல் போனது கோபமாக இருந்தது. தம்பி சொன்ன பிறகும் கௌரவம் விடாமல் அவனைச் சந்திக்கும் முயற்சியை எடுக்கவில்லை. எங்கே நிற்கிறாள் யாருடன் நிற்கிறாள் என்பதெல்லாம் நிச்சயம் அறிந்திருப்பான். அப்படியிருக்க அருகில் வந்தும் பேசாமல் போனானென்றால்....திமிர் என தனக்குள் முணுமுணுத்தாள். ஆளாளுக்கு பிடிவாதத்தில் சந்திக்க முயற்சியெடுக்கவில்லை. அவள் ஐரோப்பா திரும்பிவிட்டாள்.

2006இல் இந்தியாவில் இருந்த அவனது சித்தி நோய்வாய்ப்பட்டு இருப்பதாக அறிந்து கதைக்க எடுத்த போது கதையோடு அவனது கதையும் வந்தது. "நீயென்னடி 3மாதம் கிளிநொச்சியில் நிண்டியாம்" தன்னை ஒருமுறை கூட பார்க்க வரேல்லயெண்டு சொன்னான். ஏனடியாத்தை ஒருக்கா பிள்ளையளையும் காட்டி பாத்திருக்கலாமெல்லே ?"

"புத்தகக்கடையில கண்டவர். ஏனன்ரி என்னோடை கதைச்சிருக்கலாம் தானே...! பிள்ளையளுக்கு விளையாட்டுச் சாமானுகளை வாங்கிக் குடுத்திட்டு போகத் தெரிஞ்சவர். கதைச்சா என்ன குறைஞ்சே போயிடுவர் ?"

"நீ தன்னை அடையாளம் பிடிக்கிறியோண்டு பாக்கத்தான் அவன் கடையில கண்டிட்டு கதைக்காமல் போயிருக்கிறான். சீனிச்சரை சுத்தவோ புத்தகமெண்டு சொன்னவனாம்....அப்ப பக்கத்தில தானே நிண்டவனாம்.....!" "சத்தியமா எனக்கு அடையாளம் தெரியேல்லயன்ரி...! எத்தின வரியம் இப்பத்தைய தோற்றத்தை என்னாலை அடையாளம் காண முடியேல்ல...வேறுமெண்டு தானே கதையாமல் போனவர்.....!"

பழைய குரல் நினைவிருக்கலாம் என நினைத்தானோ என்னவோ...! அவன் கொஞ்சம் வீம்பு பிடித்தவன் என்பாள் அவளது தங்கை. அதற்காக அருகில் நின்றும் தன்னை அடையாளம் காட்டாமல் போனவன் மீது சொல்ல முடியாத கோபம். ஆளாளுக்கு பிடிவாதம் பிடித்து சந்திக்காமல் தொடர்பு கொள்ளாமல் விட்டு அதுவொரு சின்ன வயசு கால கோபம் போலவே போய்விட்டது.

அவனைப்பற்றி பலரும் கதைத்தார்கள். அவனது பதவிநிலை , பணிகள் , திறமை எல்லாவற்றையும் ஊரவர்கள் தொடக்கம் அவனது பெயரையும் காலம் உச்சரித்துக் கொண்டேயிருந்தது. அவனது அலுவலகத்தில் அவனுக்கு உதவியாளராயிருந்த அவனது துறைசார் போராளியொருவனுடன் ஒருமுறை அலுவல் ஒன்றிற்காக தொடர்பேற்படுத்திய போது அவனைப் பற்றி அடிக்கடி அறியக் கிடைத்தது. ஒருமுறை அவனது உதவியாளர் அவனது நிழற்படமொன்றை மின்னஞ்சலிட்டிருந்தான்.

"சொல்லுங்கோ தம்பி. அவர் கதைக்காட்டி நானும் கதைக்கமாட்டனாமெண்டு." "ஐயோ கடவுளே. இந்தக் குழந்தைப்பிள்ளையள் ரெண்டின்ரை தொல்லையும் எனக்கு பெருந்தொல்லையப்பா...! ஏன் அவ கதைக்கமாட்டாவோண்டு அவரும் இவ ஒராள் என் அவர் கதைக்கமாட்டாரோண்டு ....!" தம்பி ஒருமுறை கதைத்த போது இப்படித்தான் அலுத்துக் கொண்டான்.

காலம் ஓடியது போர் மூண்டது. இரத்தமும் அவலமும் தோய்ந்த நாள்களாய் விடியத் தொடங்கியது. தொடர்பில் இருந்த அவனது உதவியாளர் தம்பி இடையிடை தொடர்பு கொள்வான். சுகம் விசாரிப்பான். அவனும் ஆனந்தபுரம் சண்டை முடிவோடு இல்லாமல் போய்விட்டான். சொல்லாமல் கொள்ளாமல் காணாமற் போயிருந்தான்.

மே மாதம் 2009 உலகம் பரபரத்தது. தமிழர்கள் மட்டும் கண்ணீரோடும் துயரத்தோடும் அந்தப் பொழுதுகளை வரவேற்றுக் கொண்டார்கள். எல்லாம் மாறியது. நினைக்காத சரணடைவு கனவிலும் பார்த்திராத அந்த நிகழ்வு நடந்து....எல்லாம் முடிந்து போனது....பலரின் முடிவு போல அவனும் இறுதியில் சரணடைந்தானா ? சாவை தனக்குத் தானே மூட்டினானா என எதுவும் தெரியாது.

தேடித்திரிந்தவர்களில் அவனும் ஒருவனாக அவள் தேடினாள். அவனது குடும்பம் அவனது மனைவி , பிள்ளைகள் யாரையும் எங்கும் கண்டுபிடிக்கவில்லை. உறவுகள், நண்பர்கள் , தெரிந்தவர்கள் என காணாமற்போனவர்களின் பட்டியலில் அவனும் காணாமற்போயிருக்கிறான்.

இணையத்தில் செய்திகளைத் தேடுகிறாள். அவர் கைது , இவர் கடத்தல் என தமிழ் ஆய்வாளர்களின் ஆய்வுகளும் , செய்திகளும் தூள்பறக்கும் அலசல்களால் நிறைகிறது தமிழ் இணையங்கள். அவனது பெயர் இதுவரை எங்குமே வரவில்லை. துரோகியாக ஆராயப்பட்டு அவன் வாழ்ந்த வாழ்வை எவரும் இதுவரை கொச்சைப்படுத்தாதது ஆறுதலாக இருந்தது.



அவன் விரும்பியிருந்தால் வெளிநாடொன்றில் வசதியை அனுபவித்து தனது வாழ்நாளை கடத்தியிருக்கலாம். அவனது கணிதத்துறைக் கல்வியைத் தொடர்ந்து வென்றிருந்தால் ஒரு விஞ்ஞானியைக் கூட அவனது குடும்பமும் அவனது ஊரும் பெற்றிருக்கலாம். ஆனால் பதின்மம் மாறாத அந்த வயதில் தேசத்தை நேசித்துப் போனதால் அவன் காணாமல் போனான்.

எல்லோரையும் போல சுயநலமாக இல்லாமல் பொதுநலமாக யோசித்து தன்னை மறந்து தேசத்தை நேசித்த போராளிகளை மாவீரர்களை சமகால தமிழ்ச்சாதி கவனிக்கும் கவனிப்பையெல்லாம் பார்க்காமல் மறைந்தவரும் காணாமற்போனவரும் இனி வரவே வேண்டாமென நினைத்துக் கொண்டாள்.

ஒரு வேளை காணாமற்போனவர்கள் திரும்பி வந்து இந்த நிலைமையைப் பார்த்தால் எதிரியிடம் பிடிபடாமல் இலட்சியத்தை வெல்ல அணிந்த சயனைட் வில்லைகளை இந்த சமூகத்தின் மீதான அவநம்பிக்கையை சகிக்க முடியாமல் தற்கொலைக்காக பயன்படுத்தக் கூடும். "அவர்கள் வர வேண்டாம்...காணாமலேயே இருக்கட்டும்."

சின்னப்பிள்ளையள் மாதிரி ஆளாளுக்கு முரண்டு பிடித்து கதைக்காமல் தொடர்பு கொள்ளாமல் விட்டது இப்போது நெஞ்சுக்குள் வலியைத் தருகிறது. நீ முதல் கதைச்சாலென்ன என ஆளாளுக்கு அடம்பிடித்ததையும் ஒருகாலம் விளையாட்டாக ரசித்தது போல இப்போது ரசிக்க முடியவில்லை. இனி என்றுமே திரும்பக் கிடைக்காத அவனும் அவன் போன்றவர்களினதும் நினைவுகள் மட்டும் மீதமாக....!

**(08.04.2014 அண்மைய நாட்களில் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளைப் படித்த போது எழுந்த உணர்வும் ஒரு காலத்தின் ஞாபகமும் ஒரு கனவும் தந்த பாதிப்பிலிருந்து இக்கதை பிறந்திருக்கிறது)**

**அவன் விரும்பியிருந் தால் வெளிநாடொன்றில் வசதியை அனுபவித்து தனது வாழ்நாளை கடத்தியிருக்கலாம். அவனது கணிதத்துறைக் கல்வியைத் தொடர்ந்து வென்றிருந்தால் ஒரு விஞ்ஞானியைக் கூட அவனது குடும்பமும் அவனது ஊரும் பெற்றி ருக்கலாம். ஆனால் பதின்மம் மாறாத அந்த வயதில் தேசத்தை நேசித் துப் போனதால் அவன் காணாமல் போனான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்திரை செய்த குற்றம்

சிறுகதை



தயாமினி, இணுவில்.

**நீல** வானம் வெளுத்துச் சிவந்திருந்தது. அந்த அதிகாலை வேளையில் வானத்துச் சூரியன் மெல்ல எழுந்திருந்த போது மேகங்களும் கூட மஞ்சள் குளித்து குங்குமம் பூசிக் கொள்கின்றன போலும். இதனால் தான் அதனைப் பார்த்து பறவைகள் குதூகலித்து , சிறகடித்து வானத்தில் பறக்கின்றன.

இந்த அழகான காட்சியைப் பார்த்து ரசிக்கும் மன நிலை ராஜாவுக்கு இருக்கவில்லை. இரவில் நேரஞ் சென்று உறங்கும் அவன் அதிகாலையில்அரக்கப் பரக்க எழுந்திருந்து காலைக்கடன்களை முடித்து விட்டு வேலைக்கு ஓட வேண்டும். கொழும்பின் காப்புறுதி நிறுவனத்தில் நிறைவேற்று அதிகாரியான அவன் முழு நேரமும் மடிக்கணனியை வைத்துக் கொண்டு எதையோ கடுமையாக யோசித்தவாறு விரல்களால் பட்டனைத் தட்டிய வாறே இருப்பான். அதற்கப்பால் உலகம், வீடு,சமூகம் , மனைவி, பிள்ளைகள் என்ற நினைப்பெல்லாம் அவனுக்கு மறந்து போய் விட்டது. இந்த வருடம் முடிவதற்குள் இவ்வளவு தொகை காப்புறுதியாளர்களை நிறுவனத்தில் சேர்த்து விட வேண்டும் என்ற தொழில் போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலை அவனுக்கு. அதனால் அவனும் அவனது குழுவினரும் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் மனைவி இராதை அவனுக்கு நேரெதிர் ஆனவள். நொருக்குத் தீனியை "நொருக்.... நொருக்"என்று கடித்துக் கொண்டே ரீ.விபார்ப்பதும், நாட்காலி, சோபா,மேசையில் அமர்ந்தவாறே குட்டித்தூக்கம் போடுவதும் அவளது இனிமையான பொழுது போக்குகள். 'இராதை' என்று எப்போதாவது ராஜா தன் மனைவியை அழைக்கும் போதெல்லாம் "இவருக்கு வேற வேலையே இல்லை" என்று சலித்துக் கொண்டே மெதுவாக நகர்ந்து செல்வாள். அவளது உணவு, வாழ்க்கைப் பழக்க வழக்கங்களால் அவளது தேகம் தடித்து கொழுத் திருந்தது. அதனுடன் சேர்ந்து சோம்பேறித்தனம் இயல்பாகவே ஒட்டிக் கொண்டிருந்தது.

அவர்களுக்கு இரண்டு குழந்தைகள், மூத்தவள் பெண், பாடசாலைக்கு படிக்கச் செல்கின்றாள். ராஜா அவளை காலையில் பாடசாலையில் விட்டு விட்டு அப்படியே அலுவலகம் செல்வான். அதற்கு அவனது நிறுவனம் வாகனம் ஒன்றையும் கொடுத்திருந்தது. இரண்டாவது பிள்ளை பையன். ஆண் குழந்தை வேண்டுமென்று தவமிருந்து பெற்றுக் கொண்டார்கள். அப்படி ஆண் குழந்தை கிடைத்தால் குடும்ப கட்டுப்பாடு செய்து கொள்வதென்றும் முன்னமே திட்டமிட்டிருந்ததால் பையன் பிறந்ததும் அதே கையுடன் குடும்பக் கட்டுப்பாட்டு சத்திர சிகிச்சையும்செய்து கொண்டார்கள். அவனுக்கு சுஜான் என்று பெயர் வைத்து சுஜா என்று செல்லமாக அழைத்தார்கள். சுஜா இப்போது தான் எழுந்தும், விழுந்தும், நடமாடப் பழகி பொருட்கள், சாமான்களை இழுத்து விளையாடும் பருவத்தில் இருந்தான். அதனால் அவன் மீது யாராவது எப்போதும் ஒரு கண் வைத்து அவதானித்துப் பார்த்துக் கொள்ள வேண்டிய தேவை இருந்தது.

ராதை அவன் மீது எவ்வளவு தான்அன்பும் ,பாசம், நேசம் கொண்டிருந்தாலும் சில சமயம் அவன் அவளது தூக்கத்திற்கும் தடையாக இருப்பதால் அலுத்துக் கொள்வாள். சலித்தும் கொள்வாள். அவனை வலுக்கட்டாயமாக நித்திரை கொள்ளச் செய்வாள். ஆனால் அவன் மிகுந்த சுட்டித்தனமிக்கவன். தூங்குவது போல் பாசாங்கு செய்து ராதை அப்பால் போனதும் தனது வேலைகளைத் தொடங்கி விடுவான். இவர்களைத் தவிர ராஜாவினுடைய சற்று வயதான அப்பாவும், அம்மாவும் கூட அந்த வீட்டில் வசித்தனர். அவர் களை அந்த வீட்டில் எல்லா இடமும் நடமாட விடாமல் ஒரே ஒரு அறையை மட்டும் ஒதுக்கிக்கட்டுப்படுத்தி வைத்திருந்தாள் ராதை, அவளும் தமது மரு மகளின் குணத்தைப் புரிந்து கொண்டு அவர் களுக்கு தொல்லையாக இருக்கக் கூடாதென்ற எண்ணத்தில் தமக்கு கிடைத்த வசதியில் திருப்திப்பட்டு முடங்கிக் கிடந்தனர். ராஜாவும் அவர்களுக்கு வசதியாக அறைக் குள்ளேயே ரீ.வி.ஒன்றும் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தான். அதனால் அவர்கள் இயல்பாகவே ரீ.வி பார்ப்பதும், உண்டுஉறங்குவதுமாகக் காலங் கழித்தனர். பேரப்பிள்ளை களை அவர்களுடன் ஒட்டிப்பழக ராதை அனுமதிப்பதே இல்லை. வழக்கம் போலவே அன்றைய பொழுதும் விடிந்தது. பொதுவாகவே காலையானதும் எல்லா வீடுகளிலும் ஒரு பரபரப்பு காணப் படும். எல்லா வேலைகளையும் காலை எட்டு மணிக்குள் பூர்த்தி செய்ய வேண்டும். பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள்,அலுவலகத்திற்கு வேலைக்குச் செல்பவர்களின் தேவைகள் அனைத் தையும் கவனிக்க வேண்டும். காலை உணவு தயாரிப்பதுடன் பகலுணவை எடுத்துச் செல்லவும் பார்சல்கள் தயார் செய்ய வேண்டும். ராதை அவற்றை மாத்திரம் விறுவிறென்று விரும்பிச் செய்வாள். வீட்டு வேலைகளை எட்டு, எட்டரைக் கெல்லாம் முடித்து விட்டால் அதன் பின் சின்னத் திரை நாடகங்கள் அவளை ஆக்கிரமித்து விடும். பிள்ளைகளுக்கும் சாப்பாடு ஊட்டி தூங்க வைத்து விடுவாள். இது அவளது அன்றாட வழக்கமாக இருந்தது.


அன்றும் அவ்வாறு தான் சுஜா எழுந்தாள். அவனுக்கு பால் கொடுக்க வேண்டுமென்று 'காஸ்' அடுப்பில் தண்ணீர் கொஞ்சம் கேத்தலில் ஊற்றி கொதிக்க வைத்து விட்டு வந்தது கூட ஞாபகம் இல்லாமல் சின்னத்திரை நாடகத்தில் மூழ்கிப் போயிருந்தாள்.

சிறிது நேரத்தில் ஏதோ உயரத்தில் இருந்து கீழே விழும் சத்தமும் தொடர்ந்து குழந்தை வீறிடும் சத்தமும் கேட்டது. ராதை தன்னை சுதாகரித்துக் கொண்டு சமையலறைக்கு ஓடிச் சென்று பார்த்த அந்தக் கணங்களில் எல்லாம் முடிந்து போய் விட்டன. அந்தக் காட்சியை அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. 'காஸ்' அடுப்பு கீழே விழுந்து கிடந்தது. 'காஸ்' சிலிண்டரில் இருந்து ரியூப்வழியாக காஸ் வெளியேறி பெரும் தீச்சுவாலை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. குழந்தை சுஜான் பாதி வெந்த நிலையில் கீழே மூச்சுப் பேச்சின்றி விழுந்து கிடந்தான். ஓடிச் சென்று ராதை சுஜானின் கால்களால் அவனை இழுத் தெடுத்து தூக்கி அணைத் துக் கொண்டு வெளியே ஓடினாள். தீயை அணைக்கும் திராணி அவளுக்கிருக்கவில்லை. இதற்கிடையில் சத்தம் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து நிலைமையை உணர்ந்து தீயை அணைத்தனர்.

அவர்கள் உடனேயே சுஜானை எடுத்துச் சென்று வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவில் சேர்த்த போதும் ஒன்றும் பயன் இல்லை. அங்கு கொண்டு போவதற்கு முன்பே அவன் உயிர் பிரிந்திருந்தது. குழந்தை தூக்கத்தில் இருந்து எழுந்து வந்து அம்மாவைத் தேடி சமயலறைக்குப் போயிருக்கி றான். அங்கே விளையாடுவதற் காக 'காஸ்' அடுப்பின் ரீயூப்பை பிடித்து இழுத்திருக்கிறான். ஓடு பதித்த வழுவழுப்பான மேற்பரப் பில் வைக்கப் பட்டிருந்த 'காஸ்' அடுப்பு வழுக்கி கீழே கேத்தலுடன் சரிந்திருக்கிறது. எரிந்து கொண்டு இருந்த அடுப்புச் சுவாலையில் 'காஸ்' அடுப்பின் டியூப் பட்டு றப்பர் உருக 'காஸ்' வெளியேறி உடன டியாக பெருந் தீ ஏற்பட்டு விட்டது. குழந்தை வெந்நீர் கொட்டியும் தீயாலும்வெந்து போய் விட்டான். ராதை இனி அழுது கொண்டு இருக்க வேண்டியது தான்.

(முற்றும்)

ராதை அவன் மீது எவ்வளவு தான்அன்பும் ,பாசம், நேசம் கொண்டிருந்தாலும் சில சமயம் அவன் அவளது தூக்கத்திற்கும் தடையாக இருப்பதால் அலுத்துக் கொள்வாள். சலித்தும் கொள்வாள். அவனை வலுக்கட்டாயமாக நித்திரை கொள்ளச் செய்வாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகிலேயே மிகப்பெரிய விமானம்

தற்போது உலகெங்கிலும் காணப்படும் விமானங்களுள் Antonov An-225 எனும் விமானமே மிகவும் பிரம்மாண்ட மானதாகக் கருதப்படுகின்றது. இது 640 தொன் எடைகொண்ட பொருள்களை ஏற்றிக்கொண்டு பறக்கும் ஆற்றல் கொண்டதாக இது காணப்படுகின்றது.








பிரான்ஸ் தலைநகர் பஸில் உள்ள செயின்நதியின் மேல்டெனிஸ் ஜொசலின் என்ற கலைக்கூத்தாடி கயிறை கட்டி நடந்துள்ளார். நதியிலிருந்து சுமார் 25 மீற்றர் உயரத்திற்கு மேல் கட்டப்பட்ட கயிற்றில், 150 மீற்றர் கொண்ட நதியின் மொத்த பரப்பளவினை 30 நிமிடங்களில் இவர் கடந்து சாதனை படைத்துள்ளர். இவரது சாகசத்தை பார்க்க ஏராளமான மக்கள் குவிந்திருந்தனர்.
அதிலும் குறிப்பாக இவர் சிறிது தூரம் கண்ணை கட்டி கயிற்றின் மேல் நடந்ததை மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கண்டு களித்தனர்.

## உடலியல் இயக்கங்களை ஆராய



சிக்காகோவில் அமைந்துள்ள நோர்த்வெஸ்ரேண் பல்கலைக்கழகத்தினை சேர்ந்த ஜோன் ஏ ரோஜர்ஸ் என்பவரை தலைமையாகக் கொண்டு இயங்கும் குழு ஒன்று தோலினுள் பொருத்தி உடலியல் இயக்கங்களை ஆராயக் கூடிய வகையில் இலத்திரனியல் சிப் ஒன்றை உருவாக்கி உள்ளது.
பிளாஸ்டிக், சிலிக்கன் என்பவற்றினை ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்டுள்ள இந்த சிப் உடலினுள் அசைந்து செல்லக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

சோலர் படலத்தில் செயற்படக்கூடிய விமானம் ஒன்றினை வடிவமைத்துள்ளனர் சுவிட்ஸர் லாந்தை சேர்ந்த பொறியியலாளர்கள் குழுவினர். ஒருமுறை பறக்க ஆரம்பித்ததன் பின்னர் மீண்டும் தரையிறங்காது தொடர்ச்சியாக பூமியை வட்டமிடக்கூடிய வகையில் இருக்கும் என அப்பொறியியலாளர்கள் நம்புகின்றனர். இதற்கு '2' என பெயரிடப்பட்டுள்ளது.
இதற்கு முன்னரும் சோலர் விமானம் ஒன்றினை வடிவமைத்துள்ள குறித்த பொறியியலாளர்கள் அதனை விடவும் 8 மீற்றர்கள் நீளம் அதிகம் கொண்டதாக இப்புதிய விமானத்தின் விங்ஸ்பேனை வடிவமைத்துள்ளனர். இந்த விமானமானது 2015ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்துக்கும் ஜுலை மாதத்துக்கும் இடையில் தனது பறப்பினை ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது






சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட சீனக் கலைஞரான லூ பொலின் என்பவர் தனது உருவத்தை பிறரின் கண்ணுக்குப் புலப்படாதவாறு தத்ரூபமாக தன்னை பல்வேறு தளங்களில் வரைந்துள்ளார்.
பல்பொருள் அங்காடி, புத்தகச்சாலை, புகையிரத நிலையம் போன்ற பல்வேறுபட்ட இடங்களில் இவர் புலக்காட்சிக்குத் தெரியாமல் நிற்கிறார். இந்த ஓவியங்களைக் கூர்ந்து அவதானித்தால் மட்டுமே நபர் ஒருவர் நிற்கும் காட்சி எமக்கு புலப்படும். ஒரு மனிதனால் எவ்வாறெல்லாம் தன்னை மறைத்து வைக்க முடியும் என்பதனை இவரது ஓவியங்கள் வலியுறுத்துகின்றன.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில், ருவிட்டர் வலைத் தளத்தில் கவர்ச்சி நடிகை பூனம் பாண்டேவை இந்தியப் பிரதமர் என்று செய்தி வெளியிட்டு அவரது ரசிகர்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். ருவிட்டரில் அடிக்கடி அரை நிர்வாணம், முழு நிர்வாணப் புகைப்படங்களை வெளியிட்டு மக்களின் கவனத்தை ஈர்த்துவருபவர் நடிகை பூனம் பாண்டே. இந்தநிலையில் அவரது ரசிகர்கள் ருவிட்டரில் பூனம் பாண்டே பிரதமர் என்ற தகவலை வெளியிட்டனர். இதை பார்த்த பூனம் தனது ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். மேலும் அவர் ருவிட்டரில் கூறியிருப்பதாவது. இதை என்னால் நம்பவே முடியவில்லை. உங்களுக்கு எப்படி இது போன்ற யோசனைகள் தோன்றுகிறது என்று நினைக்கிறேன் என கூறியுள்ளார்.




## பூனம்பாண்டே பிரதமர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு -6, வெள்ளவத்தை, [illegible] 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஏப்ரல் 16 ஆம் திகதி வெளியிடப்பட்டது.